விலை : 20.00
பக்கங்கள் :இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆவணி 17 வெள்ளிக்கிழமை (02.09.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 258

WESTERN UNION MONEY TRANSFER உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392
(C-4991)

## ஐ.நா செயலரின் கவனத்தையீர்க்க போராட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மீது சர்வதேச விசாரணையை கோரி ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம், பான் கீ மூனின் கவனத்தை ஈர்க்கும் வகையில் போராட்டம் ஒன்று இன்றைய தினம் காலை 11.30 மணியளவில் யாழ்.பொது நூலகம் முன்பாக இடம்பெறவுள்ளது. இந்த போராட்டத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு செய்துள்ளது.

யுத்தம் முடிந்து ஏழு ஆண்டுகளாகியும் மீள்குடியேற அனுமதிக்கப்படாதுள்ள மயிலிட்டி, பலாலி உள்ளிட்ட வலிவடக்கு, கேப்பாபிலவு உட்பட வடக்கு கிழக்கு பிரதேசங்களில் இடம்பெயர்ந்த மக்களின் உடனடி மீள் குடியேற்றத்தை வலியுறுத்தியும்.

போரின் போதும், அதற்குப் பின்னரும் கடத்தப்பட்டும், சரணடைந்த பின்னர் காணாமல் போகச் செய்யப்பட்டவர்களுக்கு என்ன நடந்ததென கண்டறிய வலியுறுத்தியும்! அரசியல் கைதிகள் அனைவரையும் நிபந்தனையின்றி உடன் விடு

24ஆம் பக்கம் பார்க்க....

# தமிழர் தரப்பு நிலை அறிய
# இன்று யாழில் பான் கீ மூன்



ஆசிய நாடுகளுக்கான விஜயத்தினை கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்துள்ள பான் கீ மூன் தனது முதலாவது விஜயமாக மியன்மார் சென்று அங்கிருந்து நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு

23ஆம் பக்கம் பார்க்க....

**(யாழ்ப்பாணம்)**

**ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து பல்வேறு சந்திப்புக்களில் ஈடுபடவுள்ளார். கடந்த புதன்கிழமை இலங்கை வந்த மூன், நேற்று கொழும்பில் ஜனாதிபதி உள்ளிட்டவர்களை சந்தித்திருந்த நிலையில், இன்று யாழ்ப்பாணம் விஜயம் செய்து தமிழர் தரப்புக்களுடன் சந்திப்புக்களை மேற்கொள்ளவுள்ளார்.**

## மூனின் வருகையையிட்டு கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவம் பிடித்து வைத்துள்ள மயிலிட்டி பிரதேசத்தையும் ஏனைய இடங்களையும் விடுவித்து மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்குமாறு கோரி யாழில் இன்றைய தினம் மாபெரும் போராட்டம் ஒன்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலார் பான் கீ மூனின் வருகையை முன்னிட்டு நடைபெறவுள்ளது.

இந்த போராட்டத்தை மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கம், மயிலிட்டி மீள்குடியேற்ற குழு மற்றும் பொது அமைப்புக்கள் என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ளனர். இன்று காலை எட்டுமணியளவில் நல்லூரில் ஒன்று கூடவுள்ள போராட்டக்காரர்கள்,

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் எங்கு முதலில் விஜயம் செய்ய உள்ளாரோ அங்கு சென்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர். இருபத்தி ஏழு வருடங்களுக்கு மேலாக எங்கள் சொந்த இடத்தில் நாங்கள்

24ஆம் பக்கம் பார்க்க....

## பல்கலை மோதல் வழக்கு 22ஆம் திகதி ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பாக சட்ட நடவடிக்கைக்குட்படுத்தப்பட்ட பெரும்பானமையினத்தை சேர்ந்த 4 மாணவர்களின் வழக்கை

23ஆம் பக்கம் பார்க்க....

க.பொ.த (சா/த)
பரீட்சை
மாதிரி வினாத்தாள்
கணிதம்-I,II

## ஐ.நா முன் ஆர்ப்பாட்டம்; கைவிட்ட பௌத்த அமைப்புகள்

## ஐ.நா செயலர் மூன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யப்பட்டவர்களுக்கு என்ன நடந்த தென கண்டறிய வலியுறுத்தியும்! அரசியல் கைதிகள் அனைவரையும் நிபந்தனையின்றி உடன் விடு

24ஆம் பக்கம் பார்க்க....




# மூனின் வருகையையிட்டு கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவம் பிடித்து வைத்துள்ள மயிலிட்டி பிரதேசத்தையும் ஏனைய இடங்கலளயும் விடுவித்து மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்குமாறு கோரி யாழில் இன்றைய தினம் மாபெரும் போராட்டம் ஒன்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலார் பான் கீ மூனின் வருகையை முன்னிட்டு நடைபெறவுள்ளது.

இந்த போராட்டத்தை மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கம், மயிலிட்டி மீள்குடியேற்ற குழு மற்றும் பொது அமைப்புக்கள் என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ளனர். இன்று காலை எட்டுமணியளவில் நல்லூரில் ஒன்று கூடவுள்ள போராட்டக்காரர்கள்,

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் எங்கு முதலில் விஜயம் செய்ய உள்ளாரோ அங்கு சென்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர். இருபத்தி ஏழு வருடங்களுக்கு மேலாக எங்கள் சொந்த இடத்தில் நாங்கள்

24ஆம் பக்கம் பார்க்க....

# பல்கலை மோதல் வழக்கு 22ஆம் திகதி ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பாக சட்ட நடவடிக்கைக்குட்படுத்தப்பட்ட பெரும்பானமையினத்தை சேர்ந்த 4 மாணவர்களின் வழக்கை

23ஆம் பக்கம் பார்க்க....

# ஐ.நா முன் ஆர்ப்பாட்டம்; கைவிட்ட பௌத்த அமைப்புகள்

(கொழும்பு)

பொலிஸார் மேற்கொண்ட தலையீடு காரணமாக சில பௌத்த அமைப்புக்கள் கொழும்பில் அமைந்துள்ள ஐ.நாவின் பிரதான காரியாலயம் முன் நடத்தவிருந்த ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

நேற்று கொழும்பு அலுவலகம் முன். ஒன்று கூடிய சிஹல ராவய, ராவணா பலய உட்பட பல அமைப்புக்கள் எதிர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்கொள்ள முயற்சித்தனர்.

அப்போது பொலிஸாருக்கும். பௌத்த பிக்குகளுக்கும் இடையே சூடான வாக்குவாதம் ஏற்பட்டது.

ஐ.நாவின் பிரதான அலுவலகம முன் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதை தடை செய்து நீதிமன்ற உத்

24ஆம் பக்கம் பார்க்க....

# ஐ.நா செயலர் மூன் ஜனாதிபதி சந்திப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் நேற்று மாலை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தார்.

இரு தலைவர்களும் இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பிலும் நல்லிணக்கம் மற்றும் அரசியல் சீர்திருத்தத்தினை பலப்படுத்துவதற்கு செயல்படுத்தப்பட்டு வரும் நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பிலும்

23ஆம் பக்கம் பார்க்க....



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி மாளிகையில் நேற்று இரவு சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய போது...

# வீரவன்சவின் சகோதரர் கைது

(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்திற்கு சொந்தமான வாகனங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்திய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவின் சகோதரரான சரத் வீரவன்ச. எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கோட்டை நீதவான்

24ஆம் பக்கம் பார்க்க....

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விபரம் விரைவில்

(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டத்தின கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ அரசியல் கைதிகளில். விடுதலை செய்யப்படவுள்ள கைதிகளின் பெயர் விபரங்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படும் என மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளில். சிறிய தவறு இழைத்த மற்றும் சந்தேகத்தின் பேரில் கைது

23ஆம் பக்கம் பார்க்க....

# 3 கைக்குண்டுகள் யாழில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரசபை மைதானத்தில் இருந்து நேற்றைய தினம் காலை 10.30 மணியளவில் 3 கைக்குண்டுகளை பொலிஸ் அதிரடிப்படையினர் மீட்டுள்ளனர்

யாழ்.சுப்பிரமணியம் பூங்காவுக்கு எதிரே அமைந்துள்ள யாழ்.நகரசபை மைதானத்தில் 3 கைக்குண்

24ஆம் பக்கம் பார்க்க....

# இலங்கை முன்னேற்றம் அமெரிக்கா புகழாரம்

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்தின் காலத்தில் இலங்கையில் ஜனநாயக உரிமைகள். நல்லிணக்கம். பொறுப்புக்கூறல் மற்றும் கருத்துச் சுதந்திரம் என்பவற்றில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அரசியல் மாற்றங்கள் இலங்கைக்கும் உலகின் ஏனைய பகுதிகளுக்கும் இடையில் புதிய வர்த்தகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புக்களையும். புதிய சந்தை வாய்ப்புகளுக்கான அத்திபாரத்தையும் உருவாக்கியுள்ளதாக அமெரிக்கத் தூதுவர் அதுல் கேஷாப் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்ற. வர்த்தக மற்றும் முதலீட்டு அனுசரணை ஒப்பந்த உள்

23ஆம் பக்கம் பார்க்க....


# நீதிமன்றில் ஆஜராக கோத்தாவுக்கு உத்தரவு

(கொழும்பு)

ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்பட எட்டு சந்தேக நபர்களையும் நீதிமன்றத்தில் ஆஜராகும்படி கொழும்பு மஜிஸ்ட்ரேட் நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

2012ஆம் ஆண்டு முதல் 2015

24ஆம் பக்கம் பார்க்க....



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாண தொழில் முயற்சியாளர் விருது - 2015

CCIY NEDA

யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றமும் (Chamber of Commerce and Industries of Yarlpanam) கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் செயற்படுகின்ற தேசிய தொழில் முயற்சி அபிவிருத்திஅதிகாரசபையும்(National Enterprise Developement Authority) இணைந்து வருடா வருடம் நடத்தும் வட மாகாண தொழில் முயற்சியாளர் விருதுகளுக்கான 2015-ம் ஆண்டுக்கான விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

### நோக்கம்

01. சிறந்ததொழில் முயற்சியாளர்களுக்கான அங்கீகாரமும் கௌரவித்தலும்.
02. தொழில் முயற்சியாளரை மேலும் ஊக்குவித்து வட மாகாண மொத்த உற்பத்தி அதிகரிப்பில் உந்து சக்தி வழங்குதல்.
03. தொழில் முயற்சியாளர்களை அவர்களது துறைகளில் உயர்நிலை அடைவதற்கு ஊக்கப்படுத்தல்.

### விருதுகளுக்கான மாவட்டங்கள்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி,முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்.

### விருதுகளுக்கான தொழில் முயற்சி பிரிவுகள்

01. உற்பத்தித்துறை
02. விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் மீன் வளங்கள்
03. விருந்தோம்பல் மற்றும் சுற்றுலாத்துறை
04. சேவைத்துறை

### தொழில்முயற்சி வகைகள்

| தன்மை | மொத்த முதலீடு | தொழிலாளர் எண்ணிக்கை |
|---|---|---|
| நுண்ணியது | 0.5மில்லியனுக்கும் குறைவானது | 01 - 05 |
| சிறியது | 0.5 மில்லியன் - 10மில்லியன் | 05 - 20 |
| நடுத்தரம் | 10 மில்லியன் - 50 மில்லியன் | 20 - 50 |
| பெரியது | 50 மில்லியனுக்கும் அதிகமானது | 50ற்கும் அதிகமானது |

### வழங்கப்படவுள்ள விருதுகள்

அதிசிறந்த தொழில் முயற்சியாளர் விருது (வட மாகாண ரீதியாக) - 01
சிறந்த தொழில் முயற்சியாளருக்கான விருதுகள் - 12 (அட்டவணையிலுள்ளவாறாக)

| தொழில்முயற்சி வகை | நுண்ணியது | சிறியது | நடுத்தரம் | பெரியது |
|---|---|---|---|---|
| உற்பத்திதுறை | 01 | 01 | 01 | 01 |
| விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன் வளங்கள் | 01 | 01 | 01 | 01 |
| விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் சேவைத்துறை | 01 | 01 | 01 | 01 |

### விசேட விருதுகள் - 06

சிறப்பாக செயலாற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கு இவை வழங்கப்படவுள்ளன.

- சுற்றுச்சூழலுடன் ஒத்திசைவாக இயங்குகின்ற தொழில் முயற்சி
- சிறந்த ஏற்றுமதியாளர்
- சிறந்த உற்பத்தித் திறனுடன் இயங்கும் தொழில் முயற்சி
- சிறந்த புத்தாக்க தொழில் முயற்சி
- சிறந்த பெறுமதிசேர் உற்பத்தி தொழில் முயற்சி
- சிறந்த சக்தி வளப்பாவனைக்கான தொழில் முயற்சி

### தகைமை

- வட மாகாணத்தினை சார்ந்த பதிவு செய்யப்பட்ட தனியார்துறை தொழில் நிறுவனங்கள் (வட மாகாணத்தில் கிளைகளைக் கொண்டுள்ள தேசிய நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவுத்துறை நிறுவனங்கள் விண்ணப்பிக்க இயலாது.)
- சட்ட ரீதியாக பதிவு செய்யப்பட்டிருத்தல் அவசியம். பிரதேச செயலகம் அல்லது கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்.

### விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கும் இடங்கள்

01. யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றம் - இல. 124, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். (தொலைபேசி - 021 222 6609)
02. வவுனியா மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனம் - சத்தியா கட்டடம், இல.57, முதலாம் குறுக்கு வீதி, வவுனியா. (தொலைபேசி - 024 222 4313)
03. வட மாகாணத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் உள்ள தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபை (NEDA) அலுவலகர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.
04. மன்னார் மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனம் - இல. 48, மூர் வீதி, மன்னார். தொலைபேசி 077 394 9598

### விண்ணப்பமுடிவுத் திகதி - 23/09/2016

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை உரிய ஆவணங்களுடன் மேற் கூறப்பட்ட காரியாலங்களில் சமர்ப்பிக்க வேண்டும்.

அனைத்து விருதுகள் தொடர்பாகவும் வெளியக நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானதாகும். அவர்களது தீர்மானம் தொடர்பாக எவ்வித கடிதத் தொடர்புகளும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விருது வழங்கும் நிகழ்விற்கு ஆகக்குறைந்தது ஒரு வாரத்துக்கு முன்பு வெற்றியாளர்கள் அறிவிக்கப்படுவார்கள். விருது வழங்கும் நிகழ்வு எதிர் வரும் கார்த்திகை மாதம் யாழ்ப்பாணத்தில் மிகவும் சிறப்பாக நடைபெறும்.

**தலைவர்,**
**யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றம்,**
**இல.124, இராசாவின்தோட்டம் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(C-5603)

# அதே இடத்தில் மீண்டும் புத்தர் சிலை

வவுனியா கனகராயன்குளம் பகுதியில் உடைக்கப்பட்ட புத்தர் சிலைக்குப் பதிலாக புதிய புத்தர் சிலையொன்று சிங்கள தேசிய அமைப்பு என்ற அமைப்பின் செயலாளர் அறம் பொல ரத்தனசார தேரரின் தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை வைக்கப்பட்டுள்ளது.

கனகராயன்குளத்தில் புத்தர் சிலை உடைக்கப்பட்டதாகத் தகவல் கிடைத்ததும், அனுராதபுரத்தில் புதிய புத்தர் சிலையொன்றைப் பெற்று அதனை எடுத்துச் சென்று அங்கு பிரதிஷ்டை செய்ததாக அறம்பொல ரத்தனசார தேரர் தெரிவித்துள்ளார்.

இவாஞ்சலிக் ஈழ விடுதலை அமைப்பு என்ற அமைப்பினரே கனகராயன் குளம் புத்தர் சிலையை உடைத்ததாக அறம் பொல ரத்தனசார தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை, இவாஞ்சலிக் ஈழ விடுதலை அமைப்பு என்ற அமைப்பைச் சேர்ந்த ஒருவர் தனக்கு உயிரச்சுறுத்தல் விடுத்துள்ளதாக அகில இலங்கை இந்து சம்மேளனம் என்ற அமைப்பின் தலைவர்என்.அருண் காந்த் தெரிவித்துள்ளார்.

உடைக்கப்பட்ட புத்தர் சிலையை மீள நிறுவுவதற்கோ அல்லது இந்து பௌத்த மதங்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கோ முயற்சித்தால் தனக்கு துப்பாக்கிச் சூடு விழும் என்று அந்த நபர் அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக அருண்காந்த் கூறியுள்ளார்.

கனகராயன்குளம் குறிசுட்டகுளம் அம்மன் கோயில் வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த புத்தர்சிலையே உடைக்கப்பட்டிருந்தது.

அந்த அம்மன் கோயில் பூசகர் உள்ளிட்ட அந்தப் பிரதேசத்து மக்கள், புதிய புதர் சிலையை பிரதிஷ்டை செய்வதற்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கியிருந்ததாகவும் அறம்பொல ரத்தனசார தேரர் தெரிவித்துள்ளார்.

புத்தர்சிலைஉடைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கனகராயன்குளம் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (11)


# அங்குரார்ப்பண ஒன்றுகூடல்

காங்கேசன்துறை பிரதேசத்தில் தையிட்டி வடக்கு, தெற்கு, கிழக்கு பகுதி கிராம மக்களுக்கான "ஒன்றிணைந்த தையிட்டி கிராமமக்கள் புனர்வாழ்வு அமைத்தினை" லண்டன்மற்றும் ஏனைய நாடுகளில் வாழும் தையிட்டி மக்கள் அனுசரணையுடன் அங்குரார்ப்பணம் செய்யப்படுகிறது.

திகதி - 03.09.2016 சனிக்கிழமை
நேரம் - பிற்பகல் 3.00 மணி
இடம் - வேதபாராயண சனசமூக நிலையம், கே.கே.எஸ் வீதி, உப்புமடச்சந்தி, கோண்டாவில் மேற்கு.
பிரதான விடயம்- மீள்குடியமர்வும்,புனர்வாழ்வும்

மேற்குறிப்பிட்ட பகுதி கிராம மக்களை தவறாது கலந்து கொள்ளுமாறு மிகத்தாழ்மையாக கேட்டுக்கொள்கின்றோம்.

077 640 6966, 077 419 0305, நிகழ்வு
077 678 7341, 077 678 3341 ஏற்பாட்டாளர்கள்


# மரண அறிவித்தல்



**திருமதி கதிரமலைநாதன் வள்ளியம்மை**

வரணியைப் பிறப்பிடமாகவும்,மூளாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கதிரமலைநாதன் வள்ளியம்மை அவர்கள் நேற்று (01.09.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் வனிதா லோகநாயகி, உமாதேவி,குகன் ஆகியோரின் அன்புத் தாயார் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (02.09.2016) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
கதிரமலைநாதன் குடும்பத்தினர்

(C-5606)

# UDUVIL GIRLS' COLLEGE
## ANNOUNCEMENT REGARDING OPENING OF THIRD TERM - 2016

All students and staff are hereby informed that the school will commence third term session on Thursday, 8th September 2016 with the assembly at 8.00 a.m.

The staff members are requested to be present at the JDCSI Cathedral, Vaddukoddai on Wednesday, 7th September 2016 at 8.00 a.m. for staff retreat.

Please note the change of dates of these two

**Manager**
**Uduvil Girls'college**

(C-5601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க்கூட்டமைப்பை மகிழ்விக்க யுத்த வீரர் நினைவாலயம் அழிப்பு

## கொந்தளிக்கிறார் மகிந்த

(கொழும்பு)

**தமிழ்த்தேசிய கூட்டமைப்பை மகிழ்ச்சிப்படுத்தவே குருநாக்லில் உள்ள யுத்த வீரர்கள் நினைவால யத்தை அரசாங்கம் அகற்றியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.**

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் 65 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் பங்கேற்பதற்கு எதிர்பார்த்துள்ள நிலையில். மகிந்த ராஜபக்ஷ இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

யுத்த வீரர்களின் குடும்ப உறுப்பினர்களால் குருநாகல். மலிகப்பிட்டி விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்ட எதிர்ப்பு பிரசாரத்தில் பங்கேற்ற பின்னர் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் யுத்தத்தில் அங்கவீனமடைந்த படைவீரர்கள். யுத்த வீரர்களின் குடும்ப உறுப்பினர்கள். கூட்டு எதிர்க்கட்சியின் ஆதரவாளர்கள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.

யுத்த வீரர்களுக்கான நினைவாலயத்தை அழிக்கும் செயற்பாட்டை தீவிரமாக எதிர்ப்பதாகவும் இதன் ஊடாக யுத்த வீரர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும் மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலை புலிகள் மற்றும் யுத்த வீரர்களை அனுசரிப்பதில் அரசாங்கம் இரட்டை நிலைப்பாட்டை கொண்டிருப்பது புலப்படுவதாகவும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்தார்.

யுத்த வீரர்களின் நினைவாலயத்திற்கு பாதகம் ஏற்படாமல். வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்க முடியும் என குறிப்பிட்ட மகிந்த ராஜபக்ஷ. அந்த நினைவாலயத்தை மீண்டும் நிர்மாணிக்காவிடின் அதற்கு எதிராக வழக்கு தொடரப் போவதாகவும் தெரிவித்தார். (இ-7-10)

## மகிந்த தப்பிச்செல்வது கவலையளிக்கின்றது

### அமைச்சர் துமிந்த தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டை விட்டு தப்பிச் செல்வது கவலையளிக்கின்றது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 65ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வில் பங்கேற்காது முன்னாள் ஜனாதிபதி மலேசியாவுக்கு விஜயம் செய்வது குறித்து துமிந்த திஸாநாயக்க ஊடகம் ஒன்றுக்கு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில். மகிந்த ராஜபக்ஷவின் இந்தச் செயற்பாடு கவலையடைச் செய்வதுடன் வெட்கப்பட வைக்கின்றது.

கட்சியை நேசிக்கும் உண்மையான கட்சி உறுப்பினர் ஒருவர் கட்சியின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் பங்கேற்பது எவ்வளவு மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

இதனைவிடவும் வேறு மகிழ்ச்சி இருக்க வாய்ப்பு கிடையாது. இவ்வாறான ஓர் பின்னணியில் மகிந்த ராஜபக்ஷ கட்சியின் 65ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வினை புறக்கணித்து வெளிநாட்டு விஜயம் மேற்கொள்கின்றார்.

இதன் மூலம் மகிந்த கட்சிமீது கொண்டுள்ள நேசம். பற்று என்பன வெளிப்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில் மகிந்தவை மெய்யான சுதந்திரக் கட்சியின் உறுப்பினராக ஏற்றுக்கொள்ள முடியுமா?

மகிந்த வெளிநாட்டில் பங்கேற்கவுள்ள கூட்டமானது மிகவும் அத்தியாசியமான கூட்டமன்று. அவ்வாறு மிகவும் முக்கியமான ஓர் சர்வதேச மாநாடு என்றால் நிச்சயம் ஜனாதிபதி அல்லது பிரதமர் பங்கேற்றிருப்பர் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.(இ-7-10)

## மலேசியாவில் மகிந்த அணி



நேற்று அதிகாலை ஒரு மணியளவில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர் மலேசியா நோக்கி புறப்பட்டுச் சென்றுள்ளனர்.ஐந்து நாட்கள் மலேசியாவில் தங்கியிருக்கும் குறித்த குழுவினர். ஆசிய அரசியல் கட்சிகளின் சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்ளவே அங்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## மகிந்தவின் விஜயத்திற்கு மலேசியாவில் எதிர்ப்பு!



மகிந்த ராஜபக்ஷவின் மலேசிய வருகைக்கு எதிராக மலேசிய மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொண்டுள்ளனர்.

மேலும் மகிந்தவின் வருகைக்கு எதிராக மலேசிய தமிழ் உணர்வாளர்கள் மலேசிய பொலிஸ் நிலையத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

மலேசிய அரசுடனும் கலந்துரையாடவுள்ள மகிந்த பௌத்த விகாரைகளுக்கும் செல்லவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை மலேசிய அரசிற்கு மகிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களுக்கு செய்த கொடுமைகள் நன்றாக தெரியும்.

மலேசிய அமைச்சரவையில் இருக்கும் தமிழ் அமைச்சர்களுக்கும் இது நன்றாக தெரியும்.

இவை நன்றாக தெரிந்திருந்தும் மலேசிய தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல் மகிந் தவை மலேசிய நாட்டிக்குள் வர அனுமதிக்கும் மலேசிய அரசு செய்யும் செயலானது மலேசிய தமிழர்களை அவமதிக்கும் செயல் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.(இ-7-10)

## மைத்திரிக்கு கிடைக்கும் மரியாதையைப் பார்த்து கண்கலங்கும் அமைச்சர்

தேசிய உடை அணியும் ஜனாதிபதி மைத்திரியை உலக நாடுகளில் உள்ளவர்கள் மதிக்கும் போது கண்களில் ஆனந்தக் கண்ணீர் வருவதாக கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் இலங்கை மீதான சர்வதேச நெருக்கடிகளை சமாளிக்க முடியாததாலேயே மகிந்த திடீரென ஜனாதிபதி தேர்தலை நடத்தினார். மாறாக சோதிடர் சுமனதாசவின் பேச்சைக் கேட்டதால் அல்லவெனவும் அவர் கூறியுள்ளார்.

தான் இதுவரை இரண்டு. மூன்று தலைவர்களுடன் வெளிநாட்டு பயணங்களை மேற்கொண்டுள்ள போதிலும். தற்போது வெளிநாடுகளில் ஜனாதிபதி மைத்திரிக்கு கிடைக்கும் கௌரவமும். மரியாதையும் வேறு எந்த இலங்கை ஜனாதிபதிகளுக்கும் கிடைக்கவில்லை.

அதை நேரடியாகப் பார்க்கும் போது கண்கள் கலங்குவதாகவும் அமைச்சர் மகிந்த அமரவீர மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## சுலைமான் கொலை; பிரதான சந்தேகநபர் உள்ளிட்ட 7 பேர் கைது



கொழும்பு பம்பலப்பிட்டி பகுதியில் வசித்துவந்த செல்வந்த வர்த்தகரான மொஹமட் சுலைமானின் கொலை தொடர்பில் பிரதான சந்தேகநர்உள்ளிட்ட ஏழு பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கொலையை மேற்கொண்ட சந்தேகநபரையும் அதன் பின்னர் வர்த்தகரின் சடலத்தை வாடகை வாகனம் மூலம் கொழும்பில் இருந்து மாவனெல்ல. ஹெம்மாத்தகம பகுதிக்கு கொண்டு செல்ல இணங்கிய குழுவினரையும் பொலிஸார் கைதுசெய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆடைத்தொழிற்றுறையை சேர்ந்த பிரபல வர்த்தகரான மொஹமட் சுலைமான். கப்பம்கோரப்பட்ட பின்னர் கொலை செய்யப்பட்டிருந்தார்.

கடந்த 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு கார் ஒன்றில் வந்த குழுவினர் குறித்த வர்த்தகரை அவரது வீட்டிற்கு அருகில் வைத்து கடத்திச் சென்றிருந்தனர்.

இதன்பின்னர் கொழும்பில் இருந்து வடகிழக்காக உள்ள மாவனெல்ல பகுதியில் இருந்து 24 ஆம் திகதி அவர் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

மொஹமட் சுலைமானின் கொலை தொடர்பில் ஐந்து வர்த்தகர்களுக்கு நாட்டில் இருந்து வெளியேற தடை விதிக்குமாறு கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதன் அடிப்படையில் குறித்த வர்த்தகர்களுக்கு வெளிநாடு செல்ல நீதிமன்றம் தடை விதித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## இலங்கையில் வொக்ஸ்வெகன் கார் நிறுவனத்தின் தொழிற்சாலை

(கொழும்பு)

ஜேர்மன் நாட்டின் வொக்ஸ்வெகன் கார் நிறுவனத்தின் தொழிற்சாலை ஒன்று இலங்கையில் அமைக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

குறித்த நிறுவனம். இது தொடர்பான அறிவிப்பினை தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எனவே அந்த நிறுவனத்தின் தொழிற்சாலைக்கென இடத்தை ஒதுக்கும் நடவடிக்கைகள் தற்போது நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். (இ-7-10)

## வெளிநாட்டுக் கடன் இனித் தேவையில்லை மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் தெரிவிப்பு

இந்த வருடத்தின் எஞ்சியுள்ள நான்கு மாதங்களை சமாளிப்பதற்கு வெளிநாட்டுக் கடன் பெற வேண்டியிருக்காது என்று மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்து ள்ளார்.

மத்திய வங்கியின் வட்டி விகிதங்கள் தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி இதனைத் தெரிவித்துள்ளார்.எதிர்வரும் மாதங்களுக்கு மாறாவட்டி விகிதமொன்றை பேணி. பொருளாதார சிக்கல்களை சமாளிக்க மத்திய வங்கி திட்டமிட்டுள்ளது.

தற்போதைய பொருளாதார நிலையின் கீழ் இந்த ஆண்டின் எஞ்சியுள்ள நான்கு மாதங்களுக்கும் வெளிநாட்டுக் கடன் பெற வேண்டிய தேவையிருக்காது.எனினும் அரசாங்கத்தின் கொள்கைத் தீர்மானங்கள் மற்றும் அபிவிருத்தித்திட்ட முன்மொழிவுகள் காரணமாக இதில் மாற்றங்கள் ஏற்படலாம்.

தற்போது நாட்டின் பொருளாதார வளர்ச்சி சீரான வேகத்தில் ஆரோக்கியமான முறையில் நகர்ந்து கொண்டிக்கின்றது.

பெரும்பாலும் இந்த வளர்ச்சி வேகமானது 5.5 வீத வளர்ச்சி வேகமாக நிலைப்படுத்தப்படலாம் என்றும் மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரெட்புல் 5ஆவது ஆண்டாக நடத்தும் பல்கலைக்கிடையிலான கிரிக்கெட் போட்டி

தொடர்ந்து 5-வது ஆண்டாகவும் ரெட்புல் பல்கலைக் கழகங்களுக்கிடையலான சர்வதேச சம்பியன்ஷிப் கிரிக்கெட் சுற்றுப் போட்டி 2016 செப்டெம்பர் 5 - 11 வரை இலங்கையில் இடம்பெறவுள்ளது.

இலங்கை, அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், இங்கிலாந்து, இந்தியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய 08 நாடுகளின் கல்லூரி அணிகள் தேசிய மட்டத்தில் வென்று இவ்வாண்டின் உலக இறுதிப்போட்டித் தொடருக்கு தெரிவாகியுள்ளன.

2014 மற்றும் 2015 ஆகிய இரண்டு ஆண்டுகளும் சம்பியனாகிய Assupol TuksCricket பல்கலைக் கழகம் (University of Pretoria) அதை இவ் வாண்டும் தக்கவைக்கும் நோக்கில் போட்டி யிடுகின்றது. இவ்வணியின் நட்சத்திரங்க்ள் ஏற்கெனவே உயர்மட்டத்தில் பிரகாசிக்க ஆரம் பித்துள்ளனர்.

2013ம் ஆண்டு பல்கலைக்கழக போட்டியில் அதிக ஓட்டங்களை பெற்ற இந்திய வீரர் ராகுல அதில் ஒருவர். இங்கிலாந்தின் Loughborough பல்கலைக்கழகம் கடந்த ஆண்டின் இறுதிப் போட்டியில் ஏற்பட்ட தோல்விக்கு பழிதீர்க்க தயாராவதுடன். பூனேயின் MMCC கல்லூரி கடைசியாக 2013-ம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட இந்திய அணியின் சரிவை ஈடு செய்ய விரும்புகிறது. அனைத்து அணிகளும் சொந்த மண்ணில் விளையாடும் BMS கொழும்பு, அணியின் சவாலை சமாளிக்க வேண்டும்.

அவ்வணியில் சேஹான் ஜயசூரிய, நிரோஷன் திக்வெல்ல மற்றும் தசுன் ஷானக ஆகிய 03 தேசிய அணி நட்சத்திரங்கள் அங்கம வகிக்கின்றனர். RBCC சுற்றுப்போட்டியின் பணிப்பாளர் மற்றும் முன்னாள் தேசிய அணி வீரர் பிரண்டன் குருப்பு எதிர்வரும் உலக இறுதிப்போட்டி பற்றி கருத்து கூறுகையில், 2012 ஆசிய கிண்ணம் மற்றும் 2013 உலகக் கிண்ணப் போட்டித் தொடரை தொடர்ந்து ரெட்புல் பல்கலைக்கழ்கங்களுக்கிடையலான கிரிக்கெட் இறுதிச் சுற்றுப்போட்டியை மீண்டும் இலங்கையில் நடத்துவது குறித்து மகிழ்ச்சி அடைகிறோம்.

கல்லூரி ரீதியிலான உலககிண்ணம்



இது என்பதுடன், இளம் திறமையாளர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் தொடராகும்.

மேலும் இலங்கையிலுள்ள இளம் போட்டியாளர்களுக்கு மிகவும் முக்கி யமான தொடராக திகழ்கின்றதுடன், அநே கமான இளம் தேசிய அணி வீரர்கள் தமது கல்லூரி களை தேசிய மட்ட போட்டியில் பிரதிநிதித துவப்படுத்தியதை நாம் கண்டோம். சேஹா ன ஜயசூரிய, நிரோஷன்திக்வெ ல்ல மற்றும் தசுன ஷானக ஆகிய 03 தேசிய அணி வீரர்கள BMS அணியில் அங்கம் வகிக்கின்றனர்.

இவ்வணியே இலங்கையை எதிர்வரும் செம்டெம்பர் மாத தொடரில் பிரதிநிதித்துவப்படுத்து கின்றது. சேஹான் ஜயசூரிய 294 மதிப்பீட்டு புள்ளிகளுடன் சராசரியாக 147 ஓட்டங்கள் மற்றும் 03 விக்கெட்டுகளை பெற்றுள்ளார். ஏனைய அணிகளும் அவ்வாறே பலம்பெற்றவையாகவுள்ளன. இந்தியா, பாகிஸ்தான் மற்றும் தென்னாபிரிக்க அணிகளிலும் தேசிய அணி வீரர்கள் உள்ளனர். மேற்கிந்திய தொடரில பிரகாசித்த இந்திய அணி வீரர் ராகுல் அதில் ஒருவராகும்.

ஒவ்வொரு ஆண்டும் கிண்ணத்திற்கான போட்டி கடினமாவதுடன் இவ்வாண்டு முன் னெப் போதும் இல்லாத சவால்களை கொண் டுள்ளது என தெரிவித்தார். 2016 செம்டெம்பர 04ம் திகதி நடைபெறும் குழுக்களில் 08 அணிகளும தலா 04 அணிகள் கொண்ட இரு பிரிவாக பிரிக்கப்படும். குழுமட்ட போட் டிகள் செபடெம்பர் 5 தொடக்கம் 7 வரை கொழு ம்பில் எஸ்.எஸ்.சி மைதானம் மற்றும் என். சீ.சீ மைதானங்களில் நடைபெறும். அரையி றுதி மற்றும் இறுதிப் போட்டிகள் காலி சர்வதேச விளையாட்டரங்கில் முறையே செப்டெம்பர் 10 மற்றும் 11-ம திகதிகளில் நண்ட பெறும். இவ்வாண்டு போட்டி தொடரில் பரிச சார்த்த 'எனர் ஜைசர் ஓவர்' இணைக்கப்பட்டுள்ளது.

பவர்பிளே ஓவருக்கு பின்னர் அணி குறிப்பிடும் ஓவருக்கு ஓட்டம் இரட்டிப்பாகும். அதேசமயம் விக்கெட் இழக்கப்படும் போது 05 ஓட்டங்கள் கழிக்கப்படும்.

ஆசிரியர்களுக்கான குறிப்புகள்:

2016 சர்வதேச சம்பியன்ஷிப் போட்டியில் பங்குகொள்ளும் அணிகள்.



இலங்கை- Business Management School (BMS), Colombo அவுஸ்திரேலியா- University of Sydney, பங்களாதேஷ்- University of Liberal Arts Bangladesh (ULAB). இங்கிலாந்து-Loughborough University, இந்தியா - Marathwada Mitra Mandal College of Commerce (MMCC College), Pune பாகிஸ்தான்- University Of Central Punjab, Lahore தென்னாபிரிக்கா- Assupol TuksCricket, University of Pretoria. ஐக்கிய அரபு எமிரேட்ஸ- Heriot Watt University, Dubai

**Red Bull Campus Cricket பற்றி:**

ரெட்புல் பல்கலைக்கழகங்களுக்கிடையலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி தமது கல்லூரி கற்கைகளை மேற்கொள்ளும் இளம் வீரர்களுக்கு தேசியளவில் பிரகாசிக்க வாய்ப்பேற்படுத்தும் கல்லூரிகளுக்கிடையே வருடாந்தம் இடம்பெறும் இருபது- 20 ஓவர் தொடராகும். 2012ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்தொடர் தற்போது 05வது ஆண்டாகவும் தொடர்கின்றது. சகல அணிகளும் உள்நாட்டில தேசிய பட்டத்தை பெற்று தெரிவாகியுள்ளன. ரெட்புல் பல்கலைக்கழகங்களுக் கிடையலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி விபரங்களை இணையத்தளம் ஊடாக பெற முடியும். அல்லது முகநூல், டுவிட்டர் ஊடாக எம்மை தொடருங்கள். புதிய புகைப்படங் களை பெற்றுக்கொள்ள Red Bull Content Pool இற்கு விஜயம் செய்யுங்கள். (க)


## கண்ணீர் அஞ்சலி

அமரர் நவரத்தினம் சச்சிதானந்தம்

எமது பாடசாலையின் ஆசிரியர் திருமதி சா. கிருஸ்ணானந்தம் அவர்களின் மாமனார் அமரர் நவரத்தினம் சச்சிதானந்தம் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துன்பத்தில் பங்குகொண்டு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம், யா/ ஆனைப்பந்தி மெ.மி.வி



## மனம் வருந்துகின்றோம்

வருடாந்த நல்லூர் கந்தசுவாமி தேர் உற்சவம் முடிவுற்ற பின்னர் அப்பகுதியில் பல்வேறு அமைப்புக்களாலும் வழங்கப்பட்ட குடிநீர், குளிர்பானங்கள், தேநீர் போன்றவற்றின் கொள்கலன் கழிவுகளும் உணவு பண்டங்களின் பொதி செய்த பிளாஸ்ரிக் கழிவுகளும் கோவில் சுற்றாடலில் குவிந்திருந்தது. இந்நிலைக்கு வழமையான துப்புரவு செய்யும் கருவிகள் பயன்படுத்த முடியாமல் பக்தர்களும் காவடிகளும் சுற்றுப்பிரகாரத்தில் பிரசன்னமாகியிருந்தமையே காரணமாகியது. அதனால் சிறிய இடைவெளி கிடைத்தபோது காலதாமதமாக எமது பணியாளர்கள் பெரும்பாலான கழிவுகளை கைகளினால் அகற்றினார்கள். எனினும் இந்நிலையை முற்கூட்டியே அனுமானித்து உடனுக்குடன் மாற்று ஏற்பாடுகள் செய்யப்படாமையால் சமய அனுட்டானங்களில் ஈடுபட்ட பக்தர்களுக்கும் சுற்றாடல் பகுதியில் அன்னதான நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்த அன்பர்களுக்கும் ஏற்பட்ட அசௌகரியங்களிற்கு மாநகரசபை மனம் வருந்துகின்றது.

மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சின்னவன் இராசேந்திரன்

ஈராண்டு காலம் ஓடி மறைந்தும் மறையவில்லை அப்பா கடந்த காலங்கள்.

பிரிவால் துயருறும் குடும்பத்தினர்
கரவெட்டி தெற்கு, கரவெட்டி.


# சர்வதேச டெஸ்ட் தரவரிசையில் டேல் ஸ்டைன் முதலிடம் பிடித்தார்

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசைப்பட்டியலில் இந்திய வீரர் அஷ்வின் முதல் இடத்திலிருந்து 3 இடத்திற்கு சரிந்துள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசையில் பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசைப்பட்டியலை ஐ.சி.சி தற்போது வெளியிட்டுள்ளது.

இதில் தென்னாபிரிக்கா பந்து வீச்சாளரான டேல் ஸ்டைன் 878 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளார். இவர் தற்போது நடைபெற்று முடிந்த நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் 33 ஓட்டங்கள் விட்டுக் கொடுத்து 5 விக்கெட் வீழ்த்தினார். இதன் மூலம் இவருக்கு மீண்டும் முதல் இடம் கிடைத்துள்ளது.

இதற்கு அடுத்தபடியாக இங்கிலாந்தை சேர்ந்த அண்டர்சன் 870 புள்ளிகளுடனும், மூன்றாவது இடத்தில் 859 புள்ளிகளுடன் இந்தியா சார்பில் அஷ்வினும், நான்காவது இடத்தில் 836 புள்ளிகளுடன் இங்கிலாந்து வீரர் ஸ்டுவர்ட் பிராடும், ஐந்தாவது இடத்தில 831 புள்ளிகளுடன் இலங்கை வீரர் ஹெரத்தும் உள்ளனர். இந்தியா சார்பில் ரவீந்திர ஜடேஜா



773 புள்ளிகளுடன் எட்டாவது இடம் பிடித்து முதல் பத்து இடங்களுக்குள் உள்ளார். (க)

# அமெரிக்க டெனிஸ் 3-வது சுற்றில் நடால்

அமெரிக்க ஓபன் டென்னிஸ் 2-வது சுற்றில் விளையாடிய ரபெல் நடால் 6-0, 7-5, 6-1 என்ற நேர் செட் கணக்கில் ஆண்ட்ரியாஸ செபியை வீழ்த்தி 3-வது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது.

இதில் உலகின் 4-ம் நிலை வீரரும், 2 முறை சம்பியனுமான ரபெல் நடால் (ஸ்பெயின்) இரண்டாவது சுற்றில் இத்தாலியை சேர்ந்த அண்ட்ரியாஸ் செபியை எதிர் கொண்டார். இதில் நடால் 6-0, 7-5, 6-1 என்ற நேர் செட் கணக்கில் வென்று 3-வது சுற்றுக்கு தகுதி பெற்றார். இந்த சுற்றில் அவர் ரஷ்ய வீரர் ஆந்த்ரேவை சந்திக்கிறார். (க)


## கண்ணீர் அஞ்சலி



அமரர் திருமதி
நாகேஸ்வரி பாலசிங்கம்

எமது கல்லூரி ஆசிரியை திருமதி சுபானுதா தவநாயகம் அவர்களின் அன்புத் தாயார் அமரர் திருமதி நாகேஸ்வரி பாலசிங்கம் அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்

ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன்பிடி சாத்தியவள ஆய்வுக் கலந்துரையாடல் யாழில்






வடமாகாணத்தில் நிலைத்து நிற்கக்கூடிய மீன்பிடித் துறை அபிவிருத்தியை முன்னெடுப்பதற்குரிய சாத்திய வள ஆய்வு தொடர்பான ஆரம்பக்கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் 62 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியிலும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் சிறைச்சாலை மறு சீரமைப்பு புனர்வாழ்வு மீள்குடியேற்ற அமைச்சின் அனுசரணையுடனும் வடமாகாணத்தில் நிலைத்து நிற்கக்கூடிய மீன்பிடித்துறை அபிவிருத்தி திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. அத் திட்டத்துக்கான கருத்திட்ட தயாரிப்பு மற்றும் தொழில்நுட்ப உதவிகள் தொடர்பான ஆரம்ப கட்ட கலந்துரையாடல்களும் விளக்க விரிவுரைகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடமாகாண பிரதம செயலாளர் பத்திநாதன், யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதி திருமதி மஞ்சுளா அமரசிங்க, ஆசிய அபிவிருத்தி வங்கியின் வளவாளர்கள், வடமாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், மற்றும் அரச அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)

## யாழ்.சிறைச்சாலை நிர்மாணத்திற்கு 623.32 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

### அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

623.32 மில்லியன் ரூபா செலவில் யாழ்ப்பாண சிறைச்சாலை இரண்டாம் கட்ட பணிகளை ஆரம்பிப்பதற்கு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதனால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வகையிலான செய்தியாளர் சந்திப்பில் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கயந்த கருணாதிலக இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'யாழ்ப்பாணத்தில் மீண்டும் சிவில் நிர்வாகம் நிலைநாட்டப்பட்டதை தொடர்ந்து கடந்த 2001ஆம் ஆண்டில் நான்கு தனியார் வீடுகளில் யாழ்.சிறைச்சாலைத் தொகுதி நிறுவப்பட்டது.

எனினும் தேசிய எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்யக்கூடிய விதத்தில் அவசியமான அடிப்படை வசதிகள் கூட அவற்றில் காணப்படவில்லை.

இந்நிலையில் சிறைச்சாலைகள் திணைக்களம் வசமுள்ள காணியொன்றில் சுமார் ஆயிரம் கைதிகளை தடுத்துவைக்கக்கூடிய யாழ். பண்ணை சிறைச்சாலை தொகுதியை நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இதனடிப்படையில் முதற்கட்ட நிர்மாணப்பணிகள் நிறைவு பெற்றுள்ள நிலையில் 130 கைதிகளை தங்க வைப்பதற்கான போதியளவு தங்குமிட வசதிகள் காணப்படுவதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.(இ-7-10)

## தொழிற்பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையானது இளைஞர்களின் தொழிற்கல்வியினை மேம்படுத்தும் நோக்குடனும் தற்கால வேலை வாய்ப்பினை மையமாக கொண்டும் முழுநேர மற்றும் பகுதிநேர தொழிற்பயிற்சி கற்கைநெறிகளை யாழ். மாவட்டத்தில் நடத்தி வருகின்றது. பின்வரும் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு இவற்றுக்கான பதிவுகள் தற்போது நடைபெற்று வருகின்றது.

இக்கற்கை நெறிகளாவன, விரும்தோம்பல் கற்கை, நெறிகளான சமையலாளர், வெதுப்பாளர், அறை பராமரிப்பாளர், உணவு மற்றும் குடிபானம் பரிமாறுபவர், காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), இரு சக்கர மற்றும் ஆட்டோ திருத்துநர், அலுமினிய பொருத்துநர், வீட்டு மின்னிணைப்பாளர், மரவேலை தொழில்நுட்பவியலாளர்– பெண்கள், சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், கட்டட நிர்மாண உதவியாளர் ஆகும்.

இக்க ற்கை நெறிகள் காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக் கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும். இக்கற்கைநெறிகள் கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், 1 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே. எஸ்.வீதி, யாழ்ப்பாணம் எனுமிட த்தில் மேற்கொள்ளுமாறு உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ

## லொறியுடன் மோதி ஆட்டோ தடம்புரள்வு




### இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களுடன் பயணித்த ஆட்டோ லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை 7.30 மணியவில் ஆவரங்கால் சந்தியில் இந்த விபத்து இடம்பெற்றது. ஆவரங்கால் சந்தியை நோக்கி பயணித்த லொறியுடன் பாடசாலை மாணவர்களை ஏற்றி வந்த ஆட்டோ மோதி தடம்புரண்டது

இவ் விபத்தில் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. இருவர் காயமடைந்தனர். லொறிக்குப் பின்னால் வந்த மினிபஸ் லொறியை முந்திச் செல்ல முற்பட்டதன் காரணமாகவே லொறியும் ஆட்டோவும் மோதுண்டதாக நேரில் பார்த்தவர்கள் கூறினர். (இ-7)

## புற்றளை மகா வித்திக்கு புதிய கட்டடம்



மத்திய வரவு-செலவுத்திட்டத்தின் கீழ் நிதியொதுக்கீடுசெய்யப்பட்டு புற்றளை மகா வித்தியாலயத்திற்கு கட்டடம் ஒன்று அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. பத்து மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ள இக்கட்டத்திற்கான அடிக்கல்நாட்டும் விழா பாடசாலை அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்றது. இதில் வடமாகாண சபை உறுப்பினர்க ளான வி.சிவயோகன், கே.தர்மலிங்கம், எஸ். அகில தாஸ் மற்றும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டு அடிக்க ல்லை நாட்டி வைத்தனர். (இ-60)

## இராசி பலன்

02.09.2016

(ஆவணி 17, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

பிரதமை பிற்பகல் 3.45 மணிவரை

பூரம் பிற்பகல் 1.29 மணிவரை

சுபநேரம் 6.05-7.35 மணிவரை

இராகுகாலம் 10.35-12.05 மணிவரை

நல்லூர்க்கந்தன் பூங்காவனம்

வீனவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>திருவோணம், அவிட்டம்<br>இரவு 8.00 மணிக்கு<br>கன்-சந் | | |
| | | | சூரி, ராகு<br>சந், புத |
| | சனி<br>செவ் | | குரு<br>சுக் |

**மீனம்** உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மேடம்** தாழ்ந்த சுபாவமுண்டு, எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்** தாய்வழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், வழிபாடு காரிய வெற்றி தரும், சுப செலவுகள் கூடும் நாள்.

**மிதுனம்** பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்** மதிநுட்பத்தால் மகத்தான காரியங்களைச் செய்து முடிப்பீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**கடகம்** கடினமான வார்த்தைகளைத் தவிர்ப்பது நல்லது, தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றங்கள் வந்து சேரலாம், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**மகரம்** குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், மனதில் இனம் புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், எதிலும் நிதானம் தேவை.

**சிம்மம்** இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், திட்டமிட்ட காரியங்களில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு** பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**விருச்சிகம்** பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

**துலாம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், வழிபாடுகளில் ஆர்வம் கூடும், போசன சுகமுண்டு.

**கன்னி** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், பயணங்களால் மனச்சோர்வு ஏற்படலாம், சுப விரயங்கள் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தித்துளிகள்

## பாடசாலை மாணவி மரணம்

மூளை நரம்பு பாதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வந்த பாடசாலை மாணவி ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசா லையில் க.பொ.த உயர்தர கணிதப் பிரிவில் கல்வி கற்ற வெற்றிவேலு பிரசாந்தி என்ற மாணவியே உயிரிழந்தவர் ஆவார்.

குறித்த மாணவி கொழும்பு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் புதன் கிழமை உயிரிழந்தார். (செ-19)

## 48 ஆவது திருமணநாள் விழா

மேல்மருவத்தூர் ஆச்சார்ய பீட நாயகர் அருள்திரு அம்மா-திருமதி அம்மாவின் 48 வது திருமண நாள் விழா நாளை மறுதினம் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றத்தில் (156, ஜீ. பி.எஸ் வீதி கல்வியங்காடு )காலை9 மணியளவில் ஆரம்பமாகும். (இ-7)

## சர்வதேச தென்னை தினம் இன்று தெல்லிப்பழையில் விசேட நிகழ்வு

தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் மற்றும் மாவட்ட செயலர் தலைமையில் சர்வதேச தென்னை தினத்தை முன்னிட்டு தென்னங்கன்றுகள் நாட்டும் நிகழ்வு இன்று காலை 9.30 மணியளவில் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட இளவாலை வடமேற்கில் அமைந்துள்ள வசந்தபுரம் எனும் இடத்தில் கதிரேசு பொடி அப்புகாமி என்பவரது காணியில் நடைபெறவுள்ளது என யாழ். தென்னைப் பயிர்ச்செய்கை சபை பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் அறிவித்துள்ளார். (இ-7)

## குமாரசாமியும் இலங்கைக் கலை வரலாற்றில் தொல்சீர்வாதமும்

ஆவணக் காப்பகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் தொடரின் 35 ஆவது நிகழ்வாக "குமாரசாமியும் இலங்கைக் கலைவரலாற்றில் தொல்சீர்வாதமும்" என்ற தலைப்பில் யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளரான சுதர்சினி விக்னமோகன் உரை நிகழ்த்தவுள்ளார்.

இவ்வுரையாடல் தொல்சீர்வாதம் என்ற பதப் பிரயோகத்தைக் கேள்விக்குள்ளாக்குவதனூடாக இன, மத ரீதியான முரண்பாட்டினையும் இலங்கைக் கலைவரலாற்றில் இப்பதப் பிரயோகத்துக்கும் தேசியவாதத்துக்குமிடையிலான தொடர்பினையும் திரைவிலக்க முனைகின்றது.

மேற்படி நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான ஆவணக் காப்பகம், 199,கோவில் வீதி,நல்லூரில் இடம் பெறவுள்ளது. இந்நிகழ்வில் கலை மற்றும் சினிமா ஆர்வலர்கள் தவறாது கலந்து பயன்பெறுமாறு அழைக்கப்படுகின்றனர். (இ-7-10)

# குற்றச்சாட்டுக்களை கோத்தா நிராகரிப்பு



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிர்வாகத்தின் நற்பெயரை கெடுப்பதற்கு அரசாங்கம் மேலதிக நேரம் எடுத்து செயற்படுவதாக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஜெனிவாவின் கண் காணிப்புடன் பொறுப்புகூறல் விடயங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என கூறுவோர், தற்போது விடுதலை புலிகளுக்கு உதவி செய்ததாக தன் மீது குற்றஞ்சாட்டுவதாக அவர் தெரிவித்தார்.

வன்னி தாக்குதலின் இறுதி வாரத்தில் மகிந்தவின் தலையீட்டுடன் 200 இற்கும் அதிகமான தமிழீழ விடுதலைப்புலிகள் நாட்டில் இருந்து இரகசியமாக வெளியேறியதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர முன்வைத்த குற்றச்சாட்டையும் அவர் நிராகரித்துள்ளார்.

முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் முரணான அறிக்கைகளை அரசாங்கம் வெளியிட்டு வருவதாக கோத்தபாய ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் நாடாளுமன்றத்தில் காணாமற்போனோர் தொடர்பான அலுவலக சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட பின்னர், முன்னெப்போதும் இல்லாத குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் முன்வைத்து வருவதாக அவர் கூறியுள்ளார்.

வன்னி கிழக்கு முன்னரங்க பகுதி உள்ளிட்ட ஏனைய நடவடிக்கைகளின் போது சரணடைந்த அனைத்து முன்னாள் போராளிகளும் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டதாக கோத்தபாய ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

200 இற்கும் அதிகமான தமிழீழ விடுதலைப்புலிகள் நாட்டில் இருந்து தப்பிச் செல்வதற்கு உதவியதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டு தொடர்பான அனைத்து விடயங்களையும் வெளிப்படுத்த வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-7-10)

# போதைப் பொருளுக்கு எதிராகப் பேரணி





யாழ். கரவெட்டி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் போதைப் பொருளுக்கு எதிரான கருத்தரங்கும் பேரணியும் நேற்று வியாழக்கிழமை முற்பகல் இடம்பெற்றது.

இதில் கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சிவசிறி, உதவிப்பிரதேசசெயலர் எஸ்.ராஜீவ், கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.சுதேஸ்குமார், நெல்லியடிப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆர்.பி. ஏ.பிரியந்த, மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளர் எஸ்.சோதிநாதன், பருத்தித்துறை மதுவரி திணைக்கள பொறுப்பதிகாரி சமிந்த சிறிமான், கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.கே. யோகநாதன், ஜனாதிபதி செயலக அதிகாரி, மாணவர்கள், சுகாதாரப் பகுதியினர், வர்த்தகர்கள், சுகாதாரப் பரிசோதகர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கரவெட்டிப் பிரதேச சபையினர், கிராம அலுவலர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

கருத்தரங்கின் பின்னர் போதைப் பொருளுக்கு எதிரான பதாகைகளை தாங்கியவாறு நெல்லியடி நகர் வரை பேரணி இடம்பெற்றது. நெல்லியடி வர்த்தக சங்கத்தினரால் பேரணியில் கலந்து கொண்டோருக்கு தண்ணீர் போத்தல்கள் வழங்கப்பட்டன. (இ-60)

## உணவு பழுது; உரிமையாளருக்கு 10 ஆயிரம் தண்டம்

பழுதடைந்த உணவு வைத்திருந்தமை, சுகாதாரத்தைப் பேணாமை போன்ற இரண்டு குற்றச்சாட்டுகளுக்காக நெல்லியடி நகரில் உள்ள உணவு சாலை உரிமையாளர் ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி சுகாதாரப் பகுதியினால் கண்டுபிடிக்கப்பட்ட இவ் உணவு சாலை தொடர்பில் பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன்போது உணவக உரிமையாளர் குற்றத்தினை ஒப்புக் கொண்டமையையடுத்து அவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து பருத்தித்துறை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (இ-60)

## நூல் வெளியீட்டு விழாவும் மூத்தோர் கௌரவிப்பும்

இணுவையூர் கவிஞர் வ.க.பரமநாதனின் "காலம் தந்த வலிகள்" என்ற கவிதைத் தொகுப்பின் நூல்வெளியீட்டு விழாவும் மூத்தோர் கௌரவிப்பும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணியளவில் இணுவில் மஞ்சத்தடியிலமைந்துள்ள அருணகிரிநாதர் சுப்பிரமணியர் மண்டபத்தில நடைபெறும். பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைப் பேராசிரியர் வ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் விழாவில் முன்னுரையை முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் நிகழ்த்துவார். வாழ்த்துரையினை [illegible] வழங்குவார். (இ)

# இன்று ஒரு தகவல்

## சுய கட்டுப்பாடு

தலையில் ஒரு குட்டுக் குட்டி , சொல்லால் ஒரு தட்டுத் தட்டி இதைச் செய்யாதே, ரொம்பவும் ஓவராப் போய்க் கொண்டிருக் கிறாய் என்று மற்றவர்கள் சொன்னால்தான் சுய உணர்வே வருகிறது.

அதுவரை ஆட்டம் போட்டுத் தள்ளுகிறார்கள் பலர்.

சிலருக்கு எப்போது பார்த்தாலும் உடைகள் பற்றிய சிந்தனைதான். சம்பாத்தியத்தை யெல்லாம் இதற்கே கொட்டி அழுவார்கள்.

தோற்றத்தைப் பற்றி மட்டும் தான் கவலை. வயிற்றுக்கு இல்லாவிட்டாலும் பரவாயில்லை. சிலர் இருக்கிறார்கள்.

இவர்கள் திருப்பித் தரும் சக்தியைப் பற்றிக் கவலையே படாமல் இரு கைகளையும் நீட்டிய படி கடன் கேட்டு அலைவார்கள்.

இப்படி எத்தனையோ மனித பலவீனங்கள்! இவற்றைக் கட்டுப்பாட்டுக்கு வைத்திராதவர்கள் பெயரைக் கெடுத்துக் கொள்வதோடு வாழ்க்கையிலும் சீராழிந்து போகிறார்கள்.

மற்றவர்கள் நம்மைப் பற்றி மட்டமாக விமர் சனம் செய்து விடக் கூடாது என்பது மிக மிக முக்கியம். இந்த உணர்வுக்கு உரமேற்றி மனதில் நிறுத்தாவிட்டால் வாழ்க்கையில் கட்டுப்பாடு என்பதே இல்லாமற் போகும்.

நிதானம் எது, வேகம் எது என்பது நமக்கு அவசியம் தெரிய வேண்டும்.

இது அனுபவத்தினாலும் மற்றவர்களது உணர்வுகளை மதிக்கும் பண்பினாலும் நமக்குத் தெரியவரும் உலக நியதி, மனச்சாட்சி ஆகியவற்றைக் கொண்டும் நாம் எப்போது நிதானத்தில் இருந்து தவறுகின்றோம் என்பதை உணர்ந்து கொள்ளமுடியும்.

நம்மை வழி நடத்திச் செல்லும் எவரும் தேவையில்லை; எனக்கு எல்லாம் தெரியும்; நீ(ங்கள்) சொல்ல வேண்டியதில்லை என்று தங்களைச் சுற்றியிருப்பவர்களுக்குச் சொல் லும் போது இப்படிச் சொல்வதற்கு உண்மை யில் நாம் தகுதி உள்ளவர்களாக ஆகி விட் டோமா என்று சிந்திக்க வேண்டும்.

ஆக்ஸெலரேட்டரை அழுத்தத் தெரிந்த ஒரு வருக்கு பிரேக்கையும் உபயோகிக்கத் தெரிய வேண்டும். இரண்டையும் சீரான முறையில் உபயோகிக்கத் தெரிந்தவர்களை , யார் என்ன சொல்லிவிட முடியும்?

இது தெரியாத போது தான் மற்றவர்கள் நமக்கு யோசனை சொல்லியும் கண்டித்தும், முடிந்தால் கட்டுப்பாடு விதித்தும் விடுகிறார்கள், அதற்கு பிறகு என் சுதந்திரம் பறிபோய்விட்டது என்று புலம்புவதில் அர்த்தம் இல்லை.

பொருளுக்காக , சமூகக் கடமைகளுக்காக நாம் யாருக்கேனும் கீழ்ப்படிந்து நடக்க வேண்டியிருந்தால் அதில் தவறில்லை.

ஆனால் நம் எண்ணங்களுக்கும் செயல்களுக்கும் நாம் தான் முதலாளிகளாக விளங்க வேண்டும்.

அந்த அற்புத உலகிற்கு அழைத்துச் செல்லும் வாகனம் தான் சுய கட்டுப்பாடு.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசிம் தாஜுடீன் படுகொலை தொடர்பான காணொளி குறித்த கனடா அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பு

பிரபல றக்பி விளையாட்டு வீரர் வசிம் தாஜுடீன் படுகொலை தொடர்பான காணொளி குறித்த கனடா பல்கலைக்கழக ஆய்வறிக்கை நேற்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வசிம் தாஜுடீன் படுகொலை செய்யப்பட்ட தினத்தில் அவர் கிருலப்பனை அருகே வைத்து கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டதாகவும், அவரது படுகொலைச் சம்பவத்தின் போது முக்கிய பிரமுகர் ஒருவர் மற்றும் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் அதிகாரிகளும் சம்பவ இடத்தில் இருந்ததாகவும் புலனாய்வுப் பிரிவு விசாரணைகள் தெரிவிக்கின்றன.

எனினும் இது தொடர்பான காணொளி துல்லியமாக நபர்களை இனம் காணும் வகையில் இல்லாத காரணத்தினால் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் கனடாவிலுள்ள பிரிட்டிஸ் கொலம்பிய பல்கலைக்கழகத்தின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டிருந்தது.

குறித்த காணொளிகளை ஆய்வு செய்த பல்கலைக்கழகம் வழங்கிய அறிக்கை நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்புலனாய்வுப் பொலிஸாரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் வசிம் தாஜுடீன்படு கொலை தொடர்பில் ஜனாதிபதி செயலக த்தில் இருந்து மேற்கொள்ளப்பட்ட மற்றும் உளவந்த அழைப்புகள் தொடர்பான தரவுகள் அழிக்கப்பட்டிருப்பது குறித்து விசாரணை நடத்துமாறும் கொழும்பு மேலதிக நீதவான் நிஷாந்த பீரிஸ் குற்றப்புலனாய்வுத் துறையினருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். (இ-7-10)


## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணம் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார் ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்

**S.N. குமாரசாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா? குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத்தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.

தினசரி 8 மணி முதல் 6 மணி வரை

**நாதன் இன்**

394 1/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
[வெலிங்டன் சந்தி]

072 681 6681, 076 557 5394


# வடக்கில் ஆழ்கடல் மீன்பிடியை அபிவிருத்தி செய்ய வேண்டும்

## மீள்குடியேற்ற அமைச்சு அறிவுறுத்து

வடக்கில் மீன்பிடித்துறையை மேம்படுத்துவதற்கு ஆழ்கடல் மீன்பிடியை அபிவிருத்தி செய்வது அவசியம் என சிறைச்சாலை மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் நிலைத்து நிற்கக்கூடிய மீன்பிடித்துறை அபிவிருத்தியை முன்னெடுப்பதற்குரிய சாத்தியவள ஆய்வு தொடர்பான ஆரம்பக் கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் யாழ்.பொது நூலக கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் யுத்தத்துக்கு முன்னரான காலப்பகுதியில் கடல் மீன்பிடித்தலின் அளவு 40 சதவீதமாக காணப்பட்டது. 30 வருடங்களாக இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக தற்போது மீன்பிடித்தலின் அளவு 12 சதவீதமாக வீழ்ச்சியடைந்து காணப்படுகிறது.

கரையோர மீன்பிடித்தல் காரணமாக கடல் வளங்களில் ஏற்படுத்தும் சுமை அதிகரித்து காணப்படுகிறது. அதாவது கரையோர மீன்பிடித்தல் காரணமாக கடல் வளங்கள் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளன.

எனவே வடமாகாணத்தில் மீன்பிடித்துறையை மேலும் விருத்தி செய்வதற்கு ஆழ்கடல் மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்வதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளது.

ஆழ்கடல் மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்வதற்கு முதலில் மீன்பிடித்துறைமுகங்கள், நங்கூரமிடும் மீன்பிடித்தளங்கள், இறங்குதுறைகள் என்பவற்றை புனரமைத்தல் மிகவும் அவசியம் ஆகும். அதை அபிவிருத்தி செய்வதற்கு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

அதாவது கடற்றொழில் சார்ந்த வாழ்வாதாரத்தில் தங்கி இருப்பவர்களுக்கு வாழ்வாதாரம் சார்ந்த உதவிகளை ஏற்படுத்தி கொடுக்கும் நோக்கில் கடற்றொழில் சார்ந்த துறைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

அத்துடன் கடன் திட்டங்கள், பெண்களை வலுப்படுத்துதல் , கடற்றொழில் வாழ்வாதார மேம்பாடு , கரையோர வளங்களின் அழிவுகளை தடுத்தல்,அது தொடர்பான சட்டங்களை தயாரித்து வலுப்படுத்துதல் போன்ற பல்வேறுபட்ட உட்கட்டுமான விடயங்களை உள்ளடக்கி எமது நடவடிக்கைகள் மேற்கொள்ளபபடவுள்ளன. முதற்கட்டமாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் இவ்வாறான கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை**
**மானிப்பாய் கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை**
**ஆதன பெயர் மாற்ற அறிவித்தல்**

வட்டாரம் :-04
ஆதன இல:-98/3A (புதிய பதிவு)
வீதி:-சுதுமலை வீதி
கிராமசேவையாளர் பிரிவு:-J/ 129, சுதுமலை

வட்டாரம் 04, சுதுமலை வீதி, ஆதன இல 98/3A (புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்கு பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சுதுமலை இறை 'தெங்கன் தோட்டம்' என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 04 கொண்ட இவ்வாதனம் யாழ்ப்பாணம் , சுதுமலை தெற்கு , மானிப்பாயை சேர்ந்த வைத்திலிங்கம் ஸ்ரீதரன் பெண் இந்திராணி இவர்களின் தத்துவக்காரி சண்முகராசா கைம் பெண் இராசமணி இவரால் திருமதி.சூரியகுமாரி ஜெயவீரசிங்கம் என்பவர்களுக்கு அறுதி உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு. மா.தியாகராஜா அவர்கள் முகதாவில் நிறைவேறிய 11241 ஆம் இலக்க 16.09.2009ஆம் திகதி அறுதி உறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார்.நில அளவையாளர் திரு A.அருள்நேசன் அவர்களால் வரையப்பட்ட 0149 ஆம் இலக்க 2009.01.24 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது 'தெங்கன் தோட்டம்' நிலப்பரப்பு 04கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பத்திரிகை பிரசுரத் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது திருமதி. சூரியகுமாரி ஜெயவீரசிங்கம் என்பவர் பெயருக்குப் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகிறேன்.

செயலாளர்,வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

(5790)

# முன்னாள் கடற்படை தளபதிகள் மூவருக்கு எதிராகவும் வழக்கு

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் மிதக்கும் ஆயுதக்களஞ்சியங்களை வைத்திருந்து இயக்கினார்கள் என்ற குற்றச்சாட்டில், முன்னாள் கடற்படைத் தளபதிகள் மூவர் மீதும், வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அவன்கார்ட் பாதுகாப்பு நிறுவனத்தினால் மிதக்கும் ஆயுதக் களஞ்சியங்களை சட்டவிரோதமாக இயக்கியதாக, இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு, நேற்று முன்தினம் கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தில், முன் னாள் பாதுகாப்புச் செயலர் கோத் தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தது.

இவ்வாறு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளவர்களில் மூவர் முன்னாள் கடற்படைத் தளபதிகளாவர்.

அட்மிரல் சோமதிலக திசநாயக்க, அட்மிரல் ஜெயநாத் கொலம்பகே, அட்மிரல் ஜெயந்த பெரேரா ஆகிய மூன்று முன்னாள் கடற்படைத் தளபதிகளுமே இந்த வழக் கில் குற்றம்சாட்டப்பட்டுள்ளனர். (இ-7-10)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா:35செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/6232 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 56செவ் 8 இல்<br>உயரம்: 150cm<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/6275 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 36<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/6234 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 26செவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BSc/ஆசிரியர்<br>தொ.இ: G/6281 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 101செவ் 7 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/6235 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 35செவ் 1 இல்<br>உயரம்: 166cm<br>தகைமை/தொழில்BSc, MSc/விரிவுரையாளர்<br>தொ.இ: G/6282 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 9<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:A/L/ பிரான்ஸ் PR<br>தொ.இ: B/6236 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 68செவ் 8 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்<br>தொ.இ: G/6283 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்,
( [illegible] செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )


# அமரர் தர்மலிங்கத்தின் 31ஆவது நினைவுதினம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை நாடாளுமன்றத்தில் 1960ம் ஆண்டு முதல் 1983 ஆம் ஆண்டுவரையில் தொடர்ந்து 23 ஆண்டுகள் உடுவில், மானிப்பாய் தொகுதிகளின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த விஸ்வநாதர் தர்மலிங்கத்தின் 31ஆம் ஆண்டு நினைவுதினம் இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

31 ஆவது நினைவுதின நிகழ்வுகள் யாழ் தாவடியில் அமைந்துள்ள அன்னாரின் நினைவுத் தூபிக்கு அருகாமையில் நடைபெறவுள்ளது. இதன்போது மலரஞ்சலியும் மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டு நினைவுக் கூட்டமும் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், அமரர் வி.தர்மலிங்கத்தின் புதல்வரும், புளொட் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சித்தார்த்தன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அமரர் வி.தர்மலிங்கத்தின் ஞாபகார்த்தமாக யாழ். கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் நிறுவப்பட்டுள்ள அன்னாரது உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது. (இ-7-10)


**மோட்டார் சைக்கிள் தேவை**

நல்ல நிலையிலுள்ள பாவித்த TVS Scoot pept மோட்டார் சைக்கிள் ஒன்று தேவை.

தொடர்புகளுக்கு 075 503 2515

(5781)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச சுயாதீன விசாரணையே தமிழ் மக்களுக்கு திருப்தியை ஏற்படுத்தும்

## ஐ.நா. இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதிக்கு கடிதம்

(மன்னார்)

யுத்தம்முடிவுற்று 7 ஆண்டுகள் கடந்த நிலையிலும் இலங்கை அரசாங்கம் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை மேற்கொள்கிறது. நிலப்பறிப்பு. குடிப்பரம்பல் மாற்றம். மொழிச் சிதைப்பு. பண்பாட்டு சீரழிப்பு. பொருளாதார அழிப்பு போன்றவை பாதுகாப்பு தரப்பு உதவியுடன் வளர்ச்சிபெற்றுவருகின்றன. இது நிறுத்தப்படாவிட்டால் மிகப் பெரிய ஆபத்து தமிழ்மக்களுக்கு ஏற்படும் என ஐக்கிய நாடுகள் சபைக்கு மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

பதவிக்காலத்தின் நிறைவில் இலங்கை வரும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் பான் கீ மூன் பயனுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்த வலுச் சேருங்கள். வெறுமனே வெறும் சம்பிரதாய பூர்வமான பயணமாக மாற்றி விடாதீர்கள். அதுதான் உங்கள் வாடிக்கை என்னும்விமர்சனமும் உண்டு எனவும் தெரிவித்து ஐ.நாவின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் தலைவர் வி.எஸ்.சிவகரனால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இரண்டாவது முறையாக இலங்கைவரும் தாங்கள் சுதந்திர வாழ்வுரிமைக்காகப் போராடும் இனத்தை அடக்கி ஒடுக்கி முடிவில் முள்ளிவாய்க்காலில் இலங்கை அரசு இன அழிப்புச் செய்த போதும் தாங்கள் எடுத்த வலுவான முன்னகர்வு என்ன?

சமாதானம். சமத்துவம். நீதி, நியாயம் எனும் கோட்பாட்டோடு தொடங்கிய ஐக்கிய நாடுகள் சபை ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைக்குரலாக ஒலிக்கத்தவறிவிட்டது என்பதை உங்களின் பேசவல்ல அதிகாரியே இலங்கை விடயத்தில் ஐ.நா.தோற்றுவிட்டது என ஒரு முறை கூறியிருந்தார் என்பதை நினைவூட்டுகின்றோம்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு அரணாக இருக்க வேண்டிய ஐ.நா. பார்வையாளராக வெறும்கண்டன அறிக்கை விடுவதும் காலக்கெடு வழங்கியதுமே இந்த 7 ஆண்டுகளில் கண்ட மிச்சம். முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை செய்யப்பட்ட 146,679 நபர்களின் நிலையியல் என்னவென்று பொறுப்புக் கூறும் பொறிமுறையை சாத்தியப் படுத்தினீர்களா? ஆட்சிமாற்றத்தின் பின்னர் நலிவுற்றுப் போய்விட்ட பிரேரணையாகவே தற்போது மாறிவிட்டது.

எதிர்காலத்தில் மனித உரிமைகள் விவகாரம் காணாமற் போய்விடக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடுமோ என அஞ்சுகின்றோம்.

இலங்கை அரசாங்கம் நன்கு திட்டமிட்ட முறையில் உணவு, மருந்து அனுப்பாமாலும் பன்னாட்டு நிறுவனங்களையும் யுத்த பிரதேசத்தில் இருந்து அகற்றிவிட்டு பாதுகாப்பு வலயத்திற்குள்ளும் வைத்தியசாலைகள் மீதும் சிறார்கள், பெண்கள் என்றும் சரணடைந்தவர்களையும் காயப்பட்டவர்களையும்விமானத்தாலும்எறிகணையாலும் கொத்துக் குண்டுகள் வீசியும் பொஸ்பரஸ் குண்டுகள் மூலமும் இன அழிப்பு செய்யப்பட்ட 146,679 பேரின் நிலை இதுவரை என்னவென்று தெரியவில்லை. இது உங்களுக்கு இன அழிப்பாக தெரியவில்லையா?

தமிழினத்தை நீங்களும் மனிதர்களாக கருதவில்லையா? ஒரு தேசிய இனம் சுதந்திர வாழ்வுரிமைக்காக போராடுவது உலக ஜனநாயக ஒழுங்கில் தவறா? எம்மை விட குறைந்த நிலப்பரப்பும் மக்கள் தொகையும் கொண்ட கிழக்குத்தீமோர், கொசோவா, தென்சூடான் போன்ற நாடுகள் தனிநாடாக்கியதும் அதை ஐ.நாவும் ஆதரித்ததே நாம் ஒன்றை தேச ஒழுங்கில் போராடாமைதான் தவறாகி விட்டதா?

இலங்கையில் நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமாயின் தமிழ் மக்களுக்கு நம்பகத்தன்மை ஏற்படக்கூடிய வகையில் சர்வதேச சுயாதீனமான விசாரணையே தமிழ்மக்களுக்கு திருப்தியை ஏற்படுத்தும். மாறாக உள்ளக பொறிமுறை என்பது குற்றவாளியே குற்றவாளியை விசாரிக்கும் கங்காரு நீதிமன்றம் போல் ஆகிவிடும்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் காட்சி மாற்றம் நிகழவில்லை. இலங்கை அரசாங்கம் தமிழ்மக்களுக்கு எந்த விதமான ஆக்கபூர்வமான தீர்வையும் ஒருபோதும் வழங்காது என்பது கடந்தகால அனுபவத்தின் நம்பிக்கை. மாறாக எம்மை அமைதியாக அழிக்கிறது.

எனவே தமிழ் மக்களின் இறுதி நம்பிக்கை ஐக்கிய நாடுகள் சபை தான். ஆகவே தார்மீக உரிமையுடன் நீங்களும் எம்மை காப்பாற்றாவிட்டால் கடவுளாலும் தமிழ் இனத்தை காப்பாற்ற முடியாது என்றே எண்ணுகின்றோம். எனவே நீதியின்பால் நியதியை தீர்த்துப்போக வைக்க மாட்டீர்கள் என நிறைவாக நம்புகின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-4)




# முன்னாள் போராளிகளுக்கான விஷ ஊசி மருத்துவப் பரிசோதனைகள் ஆரம்பம்

விஷ ஊசி விவகாரம் தொடர்பில் இவ்வாரம் முதல் மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் இவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது.

புனர்வாழ்வு பெற்று சமூகத்துடன் இணைக்கப்பட்ட முன்னாள் போராளிகள் மத்தியில் தமது உடல்நலம் தொடர்பில் நிலவுகின்ற கவலைகளைக் கருத்திற்கொண்டு. வடக்கு மாகாண சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக அவர்களது நலன்கள் தொடர்பாக எமது அமைச்சு கவனம் செலுத்தத் தீர்மானித்துள்ளது.

இதன் பிரகாரம் மேற்படி புனர்வாழ்வு பெற்றவர்கள் தமது உடல்நிலை தொடர்பாக மேற்கொள்ளக்கூடிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக மருத்துவ ஆலோசனைகளையும் மருத்துவக் கவனிப்பையும் வழங்க வடக்கு மாகாண சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

எனவே இத்தகைய மருத்துவ வசதிகள் தேவைப்படுபவர்கள் பின்வரும் வைத்தியசாலைகளில் உரிய வைத்திய அதிகாரிகளைச் சந்தித்து தமக்கான ஆலோசனைகளையும் சேவைகளையும் பெற்றுக்கொள்ளமுடியும். மருத்துவ ஆலோசனைகளை பெற விரும்புவோர் மாவட்ட வைத்தியசாலைகளிலுள்ள வரவேற்பாளரை அணுகி மருத்துவ பரிசோதனை நடைபெறும் இடத்திற்கு செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

முதற்கட்டமாக இன்று வெள்ளிக்கிழமை மற்றும் எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய திகதிகளில் வைத்தியசாலைகளில் இம் மருத்துவக் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்குச் சமுகமளிக்க முடியும்.

இதற்கமைய மாவட்ட பொது வைத்திய சாலை. கிளிநொச்சி-பி.ப. 4 மணிக்கும்.மாவட்ட பொது வைத்தியசாலை. முல்லைத் தீவு - காலை 8 மணிக்கும். மாவட்ட பொது வைத்திய சாலை, வவுனியா - பி.ப. ஒரு மணிக்கும்.மாவட்ட பொது வைத்தியசாலை. மன்னார் - காலை 8 மணிக்கும். போதனா வைத்தியசாலை. யாழ்ப்பாணம் - பி.ப. ஒரு மணிக்கும் நடைபெறும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-250)



தமிழ் வளர்ச்சிக்காக உழைத்த தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் 36 ஆவது நினைவு தினம் நேற்று வவுனியா மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள அடிகளாரின் திருவுருவச் சிலையில் நடைபெற்றது.

(படங்கள்:- குருமன்காடு செய்தியாளர்)

# பூந்தோட்டம் கூட்டுறவு பாடசாலையை விடுவிக்கக் கோரி ஜனாதிபதிக்கு கடிதம்

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர்

(குருமன்காடு)

இராணுவத்தினரால் அண்மையில் விடுவிக்கப் பட்ட வவுனியா குடியிருப்பு கலாசார மண்டபத்தை போன்று பூந்தோட்டம் கூட்டுறவு பயிற்சிக் கல்லூரியையும் விடுவிக்க வேண்டுமெனவும், குடியிருப்புகலாசாரமண்டபத்தை புனரமைப்பதற்கு நிதியொதுக்கீடு செய்யுமாறும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் தங்களின் தலைமையில் நடைபெற்ற வடகிழக்கு மீள்குடியேற்றம் தொடர்பிலான கூட்டத்தில் வவுனியா மாவட்டத்தில் பொது கட்டடங்களில் நிலைகொண்டுள்ள இராணுவ முகாம்களை விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தேன்.

அதன்பின்னர் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலும் இந்த விடயம் கலந்துரையாடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக கடந்த மாதம் 12 ஆம் திகதி தங்களை சந்தித்தபோது இந்த விடயத்தை மீண்டும் வலியுறுத்தியிருந்தேன்.

இந்த நிலையில் கடந்த 18 ஆம் திகதி தொடக்கம் குடியிருப்பு கலாசார மண்டபத்தில் நிலைகொண்டிருந்த இராணுவம் வெளியேறியுள் ளது.

நீண்டகாலமாக இராணுவத்தினர் பயன்படுத்தியமையினால் மண்டபம் சேதமடைந்து காணப்படுகின்றது. இதனை புனரமைப்பதற்கு நிதியொதுக்கீடு செய்யுமாறு தங்களை வினயமாக கேட்டுக் கொள்கின்றேன்.

அதேபோன்று பூந்தோட்டத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாண கூட்டுறவு பயிற்சிப் பாடசாலை 2009இல் இருந்து புனர்வாழ்வு முகாமாக இராணுவத்தினரால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

வடக்கு மாகாணத்தின் ஒரேயொரு கூட்டுறவு பயிற்சிப்பாடசாலை இதுவாகும். தாங்கள் உறுதியளித்ததன் பிரகாரம் கூட்டுறவு பயிற்சிப் பாடசாலையையும் மாகாண கூட்டுறவுத்திணைக்களத்திடம் கையளிக்க நடவடிக்கை எடுக்குமாறு தயவாக கேட்டுக் கொள்கின்றேன் என அந்தக்கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (2-250)

# 'நீர்த்தேக்கத்துடனான கிராமம் திட்டம்'

## வடக்கு மாகாணத்தில் 3 மாவட்டங்கள் தெரிவு

மத்திய மீன்பிடி அமைச்சின் நீர்த்தேக்கத்துடனான கிராமம் திட்டத்தில் தேசிய ரீதியில் 13 மாவட்டங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

அதில் வடக்கு மாகாணத்தில் மூன்று மாவட்டங்களில் இருந்து கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதற்கமைய யாழ். மாவட்டத்தில் நாகதீப, கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடு மற்றும் மன்னார் மாவட்டத்தில் கட்டுக்கரை குளத்தை அண்டிய குருவில் ஆகியன தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த மூன்றாம் மாதம் கொழும்பில் மத்திய மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர மற்றும் வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஆகியோருக்கிடையிலான கலந்துரையாடலில் இவ்விடயம் தொடர்பாக ஆராயப்பட்டது. அக்கலந்துரையாடல் தொடர்பாக கருத்து தெரிவித்த அமைச்சர் மேற்படி திட்டத்தினூடாக தெரிவு செய்யப்பட்ட கிராமங்களுக்கு காப்பு அணைகள், கட்டுமான வசதிகள், மக்களின் வாழ்வாதாரம். வீட்டுத்திட்டங்கள் போன்ற அபிவிருத்தி பணிகள் இரண்டு வருடங்களினுள் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் இதன் மூலம் அக்கிராமம் மட்டுமல்லாது அயல் கிராமங்களும் நன்மையினை பெறமுடியும் என்று தெரிவித்தார்.

மேலும் மன்னார் மாவட்டத்தில் இத்திட்ட ஆரம்ப நிகழ்வானது கடந்த வாரம் மத்திய மீன்பிடி அமைச்சர் மன்னாருக்கு விஜயம் மேற்கொண்டபோது மாந்தை மேற்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கட்டுக்கரை குளத்தை அண்டிய குருவில் கிராமத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் மத்திய மற்றும் மாகாண மீன்பிடி அமைச்சர்களுடன் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன். காதர் மஸ்தான் மற்றும் அமைச்சர் றிசாத் பதியுதீனின் பிரதிநிதியாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரிப்கான் பதியுதீன் ஆகியோர் கலந்துகொண்டனர்.(2-281)

# சமாதான நிகழ்ச்சித் திட்டம் இரு வருடங்களுக்கு நீடிப்பு

## கரிதாஸ் கியூடெக் வன்னி நிறுவன இயக்குநர் தெரிவிப்பு

வன்னி மறை மாவட்டத்தின் கிளிநொச்சி, முல்லைத் தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த நான்கு கிராமங்களில் கரிதாஸ் கியூடெக் வன்னி நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த சமாதான நிகழ்ச்சி திட்டம் மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக மேற்படி நிறுவனத்தின் இயக்குநர் அருட்தந்தை எம். எல் தயாகான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த 31 ஆம் திகதி மேற்படி கிராமங்களான கிளி நொச்சியில் மயவனூர் கோணாவில் மற்றும் முல்லைத்தீவில் மாமூலை, முள்ளியவளை ஆகிய கிராமங்களின் மக்களை மேற்படி நிறுவனத்தின் தலைமை காரியாலய மண்டபத்தில் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 31 ஆம் திகதியுடன் நிறைவு பெற்ற சமாதான நிகழ்ச்சித் திட்டத்தினுடைய மீளாய்வு மற்றும் மதிப்பீட்டு கலந்துரையாடல் குறித்த தினத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் சமாதானம், நல்லிணக்கம்,நல்லாட்சி போன்றவற்றை குடும்பம் மற்றும் கிராம மட்டங்களில் வலுவடையச் செய்வதை நோக்காக கொண்ட இந் நிகழ்ச்சித் திட்டத்தில் சென்ற வருடத்தை விட இருமடங்கு மக்கள் உள்வாங்கப் படவுள்ளார்கள்.

அதற்காகக் கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள சமாதானக் குழுக்கள் சிறப்பாக பணியாற்ற வேண்டும் எனவும் பங்குத்தந்தை கேட்டுக் கொண்டார். (2-310)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெலிஓயாவிலுள்ள வாக்காளர்களை நெடுங்கேணியுடன் இணைத்து இன விகிதாசாரத்தை குழப்ப முயற்சி

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. சுட்டிக்காட்டு



(குருமன்காடு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வெலிஓயா பிரதேசத்தின் மூன்றாயிரத்து 696 வாக்காளர்களை நெடுங்கேணி பிரதேசத்தின் பட்டிக் குடியிருப்பு கிராமத்துடன் இணைத்து இனவிகிதாசாரத்தை குழப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியா, நெடுங்கேணி, மருதோடை கிராமத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது பிரான்சில் வசிக்கும் அன்பர் ஒருவரின் 50 ஆவது பிறந்த நாளினை




முன்னிட்டு வறுமைக்கோட்டுக்குட்பட்ட 56 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கான நிதி உதவி, செட்டிகுளப் பகுதியைச் சேர்ந்த விசேட தேவைக் குடபட்ட ஒருவருக்கு வாழ வாதாரத்திற்கான தொழில் முயற்சி உதவி என்பனவும் வழங்கப்பட்டன. இதன் போது அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

கடந்த காலத்தில் இந்த நாட்டை ஆட்சி செய்த தலைவர்கள் தமிழ்த் தலைவர்களையும், தமிழ் மக்களையும் ஏமாற்றியதன் ஒரு விளைவாகத்தான் இந்த நாடு பாரிய தொரு யுத்தத்தையும் அழிவையும் சந்திக்க வேண்டியேற்பட்டது.

அன்று மிதவாதத் தலைவர்களோடு இந்தப் பிரச்சினையைச் சுமுகமாகப் பேசித் தீர்த்திருந்தால், 30 வருட காலமாக இடம்பெற்ற யுத்தம் ஏற்பட்டிருக்காது, ஆயிரக்கணக்கான இளைஞர்கள் ஆயுதம் தூக்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டிருக்காது.

இந்த ஆட்சி மாற்றத்தின் பிறகும், இன்றைக்கும், கடந்த அரசாங்கத்தின் அரசியல் நிகழ்ச்சிநிரலையே - முக்கியமாக குடியேற்றம், காணிப் பறிப்புகள் போன்றவற்றையே இந்த அரசாங்கமும் நடைமுறைப்படுத்தப் பார்க்கின்றது.

இன்றைக்கு முல்லைத்தீவு மாவட்டத்திலே, வெலிஓயா பிரதேசத்திலே இருக்கின்ற 5 கிராம சேவையாளர் பிரிவுகளுக்குரிய கிராமங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 696 வாக்காளர்களை வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்கின் நெடுங்கேணிப் பிரதேசத்திலுள்ள பட்டிக்குடியிருப்புக் கிராமத்துக்குள்ளே கொண்டுவந்து இணைக்கின்றார்கள். ஏற்கனவே இருக்கின்ற பட்டிக்குடியிருப்புக் கிராமம் என்பது 245 தமிழ் வாக்காளர்களைக்கொண்ட ஒரு கிராம சேவையாளர் பிரிவாகும்.

ஒரு மாவட்டத்தில் இருக்கினறவர்களை இன்னுமொரு மாவட்டத்தின் வாக்காளர் இடாப்பிலே இரகசியமாகப் பதிவு செய்கின்றார்கள். அவ்வாறு பதிவதன்மூலம் என்ன செய்ய நினைக்கின்றார் கள்? என்ன செய்ய யோசிக்கின்றார்கள்? ஆகவே, தொடர்ந்தும் கடந்த அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலையே இந்த அரசாங்கமும் நடைமுறைப்படுத்துவதற்குப் பார்க்கின்றார்கள்.

வெலிஓயாவுக்குள் வருகின்ற கஜபாகு மொனராவெவ, கவியாணபுர கிராமம், எத்தாவெட்டுவ, நுவவெவர, சம்பத்நுவர, நிக்வெவ என்ற ஐந்து கிராமங்களின் வாக்காளர்களையே பட்டிக்குடியிருப்பு கிராம சேவையாளர் பிரிவுக்குள்ளே உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயங்கள் தொடர்பாக பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களோடு நேரடியாகப் பேச வேண்டிய தேவை இருக்கின்றது. அவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டிய ஒரு தேவை இருக்கின்றது. அவற்றை விடுத்து, வெறுமனே பாராளுமன்றத்தில் இருந்து எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் மக்கள் மத்தியில் நம்பிக்கையீனத்தைத்தான் ஏற்படுத்துகின்றன.

இதை நான் காணாமற் போனோர் தொடர்பான பாராளுமன்ற விவாதத்தின் போதும தெரிவித்திருக்கின்றேன். தமிழர் நிலத்தை அபகரித்து வெலிஓயா பகுதியை விஸ்தரித்து அதனை தனிப்பிரதேச செயலாளர் பிரிவாக மாற்ற திரைமறைவில் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. (2-250)

# வீட்டில் தனித்திருந்த பெண் சடலமாக மீட்பு

(மல்லாவி)

கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் 47 வயதுடைய குடும்பப்பெண்ணொருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி வட்டக்கச்சி சிலவா வீதியில் உள்ள வீடொன்றில் தனித்திருந்த 47 வயதுடைய பெண்ணொருவரே சடலமாக மீட்கப்படவராவார்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

குறித்த பெண்ணுடைய கணவர், மகள் ஆகியோர் முத்தையன்கட்டுப்பகுதியில் வசித்து வரும் மகள் ஒருவரின் நிகழ்விற்கு சென்ற வேளை பிரஸ்தாப பெண் தனிமையில் இருந்ததாகவும் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இவரது மரணம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி இராமநாதபுரம் மற்றும் கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இச்சம்பவத்தின் போது சில்வாவீதி வட்டக்கச்சியைச் சேர்ந்த சிறிஸ்கந்தராஜா சந்தரபாரதி (வயது 47) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். (2-15)

# தனிநாயகம் அடிகளாரின் நினைவுதினம் வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது

(வவுனியா)

தமிழ் வளர்ச்சிக்காக உழைத்த தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் 36 ஆவது நினைவு தினம் வவுனியாவில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா வரியிறுப்பாளர் சங்கம் மற்றும் தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பின் ஏற்பாட்டில் வவுனியா மணிக்கூட்டு கோபுர சந்தியில் உள்ள அடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து, மலர்தூவி நினைவு கூரப்பட்டதுடன் அடிகளாரின் தமிழ் சேவை தொடர்பில் மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.எஸ்.வாசன் கருத்துரை வழங்கினார்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுபபினரும் திடீர் மரண விசாரணை அதிகாரியுமான சிவநாதன் கிசோர், வவுனியா நகரசபையின் முன்னாள் உபநகர பிதா சந்திரகுல சிங்கம், வரியிறுப்பாளர் சங்கத் தலைவரும் தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பின் தலைவருமான செ.சந்திரகுமார், சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க தலைவர் சேனாதிராசா, வவுனியா சைவப் பிரகாச வித்தியாலயத்தின் உயர்தர மாணவிகள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# மாகாண மட்ட போட்டிகளில் பங்கேற்கும் விளையாட்டு வீரர்களுடனான கலந்துரையாடல்



மாகாண மட்ட விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்ளும் விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் விளையர்ட்டு உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

மாவட்ட மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டி தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் மாகாண மட்டப்போட்டிகளில் பங்குபற்றும் வீர வீராங்கனைகள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள்,விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்களை மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சத்தியசீலன் ,மாவட்டச் செயலக உதவிப்பிரதேச செயலர் ரீ.பிருந்தாகரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்ததுடன் விளையாட்டு வீரர்களின் தேவைகள் குறித்தும் அவர்களுக்கான பயிற்சிகளை வழங்குவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.சகல துறைகளிலும் முன்னேற்றம் கண்டு வரும் மாவட்டமாக காணப்படும் கிளிநொச்சி மாவட்டம் விளையாட்டுத்துறையிலும் முன்னேற்றம் காண வேண்டும் என மாவட்ட அரச அதிபர் தனது உரையில் கேட்டுக் கொண்டார். (2-15)

# பரவிப்பாஞ்சான் மக்களின் 2ஆம் கட்டப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது



பரவிப்பாஞ்சானில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்துக் காணிகளையும் இரண்டு வாரத்தில் பெற்றுத் தருவதாக எதிர்கட்சி தலைவர் வழங்கிய உறுதிமொழி நிறைவேறாத நிலையில் பரவிப்பாஞ்சான் மக்கள் மீண்டும் தங்களின் கவனயீர்ப்பு போராட்டத்தை நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று இரண்டாவது நாளாகவும் முன்னெடுத்தனர். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் "நல்லாட்சி அரசே எங்களை ஏமாற்றாதே" "வாடகை வீட்டில் நாங்கள் எங்கள் வீட்டில் நீங்களா" "எமது நிலம் எமக்கு வேண்டும்" உள்ளிட்ட சுலோகங்களை தாங்கியவாறு அமைதிப் போராட்டத்தில்



நேற்று இரண்டாம் நாளாக தொடர்ந்தனர்.

பரவிப்பாஞ்சான் பகுதியில் உள்ள தமது காணிகளை விடுவித்து தருமாறு கோரி குறித்த போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் தொடர போராட்டத்தை 2 ஆம் கட்டமாக நேற்று முன்தினம் ஆரம்பித்திருந்தனர்.

கடந்த மாதம் 13 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் 5 நாட்களாக தொடர்ந்த வேளை எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களை சந்தித்து கலந்துரையாடினார்.

குறித்த பகுதியிலிருந்து பாதுகாப்பு செயலாளரை தொடர்பு கொண்ட எதிர்க்கட்சி தலைவர் அவருடன் பேசி 15 நாட்களிற்குள் காணி விடுவிக்கப்படும் என தெரிவித்தமையை அடுத்து மக்கள் போராட்டத்தினை கைவிட்டிருந்தனர்.

எதிர்க்கட்சித்தலைவர் வாக்குறுதியளித்தவாறு 14 நாடகள் காலவரையறை நேற்று முன்தினம் புதன்கிழமையுடன் நிறைவடைந்த நிலையில், பரவிப்பாஞ்சானில் சுமார் மூன்றரை ஏக்கர் காணி மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளது.

இதனை ஏற்றுக்கொள்ளாத பரவிப்பாஞ்சான் மக்கள் தங்களுடைய அனைத்து காணிகளும் விடுவிக்கப்பட வேண்டும் என்று கோரி மீண்டும் தங்களுடைய கவனயீர்ப்பு போராட்டத்தை நேற்று முன்தினம் ஆரம்பித்து இருந்தனர்

15 குடும்பங்களுக்கு சொந்தமான இன்னும் பத்து ஏக்கர் காணி விடுவிக்க வேண்டும் எனவே அந்தக் காணிகளும் விடுவிக்கும் வரை நாம் தொடர் போராட்டத்தை நடத்துவோம் அல்லது வடக்கு மாகாண ஆளுநர் அல்லது மீள்குடியேற்ற அமைச்சர் வந்து எமக்கு வாக்குறுதி தரவேண்டும் அவ்வாறு வழங்கப்பட்டால் மட்டும் போராட்டம்கைவிடப்படும்என பரவிப்பாஞ்சானில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். (2-15-312)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# பொய் பேசும் போது கூட உண்மை பேசும் நமது உடல் மொழி

## (Body language)

**கைகள்**

நாம் மறைக்க விரும்புகின்ற மனக் கருத்துக்களைக் கூட பளிச்சென்று வெளிச்சம் போட்டு காட்டிவிடும் உடல் மொழியின் வெளிப்பாடு கைகள் ஆகும். எதிராளியின் பார்வையில் படும்படி நன்கு விரித்து காண்பிப்பது நேர்மையின் அடையாளமாகக் கருதப்படுகிறது. அதிகாரத் தோரணையை காண்பிப்பதற்காக ஒரு சிலர் கைகளை பின்புறம் கட்டிக் கொள்வதும் உண்டு. ஆதிக்கம் செலுத்தும்போது கைகள் உயர்ந்தும், பணிந்து போகும் போது கைகள் தாழ்ந்தும் இருக்கின்றன. நம்முடைய கைகள் மூளை நரம்பு மண்டலத்தோடு நேரடியாகப் பிணைக்கப்பட்டிருக்கின்றன. எனவே மனதின் எண்ணத்திற்கு ஏற்ப கைகள் உடல் மொழியை உடனே வெளிப்படுத்தி விடுகின்றன. மற்றவரிடம் பேசும்போது. கைகளை கட்டிக் கொள்ளாதீர்கள். அது உங்களை பலவீனமானவராக காட்டுகிறது. மற்றவரின் கண்களை நேராகப் பார்த்து பேசவும். அது உங்களை நேர்மையானவராகக் காட்டும். மிகத்தொலைவிலிருந்து மற்றவரோடு குரலை உயர்த்திப் பேசாதீர்கள். நீங்கள் பேசுவதை மற்றவர் கேட்க வேண்டுமானால் அவர் முகத்தைப் பார்த்து பேசவும். நேராக அமர்ந்து அல்லது நின்று பேசவும். கூன் போட்டு அமர்ந்தால் மற்றவர் உங்களை சோம்பேறி என நினைக்கக்கூடும். பேசும்போது முடியை கோதிக் கொள்வதையோ அல்லது அடிக்கடி உடைகளை சரிப்படுத்துவதையோ தவிர்க்கவும். அது உங்களை நம்பிக்கையற்றவராகக் காட்டும். நகத்தையோ. பென்சில் அல்லது பேனா முனையையோ கடிப்பதை தவிர்க்கவும். அது உங்களை பயந்தவராக காட்டக் கூடும். நம்பிக்கையோடு கூடிய புன்னகை நீங்கள் சொல்வதை கேட்க விரும்பாதவரையும் கேட்க வைக்கும். குழந்தைகளோடு பேசும்போது, அருகில் அமர்ந்து பரிவோடு பேசவும். உங்கள் பேச்சை விளக்குவதற்கு, உங்கள் கைகளையும் பயன்படுத்தவும். சைகைகள் நீங்கள் சொல்வதை மேலும் விபரிக்கும்.

பொதுவாக உங்களுக்கு விருப்பமானவரை கவர (நீங்கள் ஆணாக இருந்தால்) தோற்றம் முக் கியம். இதை வைத்துத்தான் ஒரு பெண் உங்களை சாதிக்கக் கூடியவனா, நல்லவனா? என்று முடிவு செய்கிறார்கள். கால்களை அகட்டிய நிலையில் விசாலமாக அமருங்கள். நிமிர்ந்து நேர் கொண்ட பார்வையுடன் நடவுங்கள். அது உங்கள் ஆண்மைத் தன்மையைக்காட்டும். மூன்று விநாடி நேரத்துக்கு ஒரு முறை உங்கள் முழங்கையைத் தொடுங்கள். அது உங்களை நோக்கி மற்றவர்களை ஈர்க்கவைக்கும்.

இதுவே நீங்கள் பெண்ணாக இருந்தால் உங்கள் தோற்றத்தில் கவனம் தேவை. உங்களின் உடை, உடம்பு, ஒப்பனை எல்லாமே கனகச்சிதமாக இருக்க வேண்டும். விழியோடு விழி பேசுங்கள். அவர் உங்களைப் பார்க்கும்போது அந்தப் புறமாகப் பார்க்காதீர்கள். உங்கள் விழிகள் அவருக்குள் ஒரு மாயாஜாலத்தையே நிகழ்த்தும். பேசிக்கொண்டிருக்கும்போதோ, பார்த்துக் கொண்டிருக்கும் போதோ உங்கள்விரல்களைப்பிணைக் காதீர்கள், கைகளைக் குறுக்காகக் கட்டாதீர்கள். பேசும் போது உங்கள் மணிக்கட்டின் உட்பகுதியைக் காட்டியபடி பேசுங்கள். அது பணிந்து போவதற்கான அடையாளம். ஓரளவு பழக்கமானவராக இருந்தால் அவரது கையின் கீழ்ப்பகுதியைத் தொடுங்கள். அது நெருக்கத்தின் அடையாளம். இவை ஆண்கள் தங்களை அறியாமல் பெண்களை ரசிக்கும் விடயங்கள்

**கைகுலுக்கல்**

கைகுலுக்கலில் ஆதிக்கம், பணிவு, சமநிலை ஆகியவற்றை வெளிப்படுத்தலாம். கைகுலுக்கலில் மேலே உள்ள கைக்குரிய நபர் ஆதிக்கம் செலுத்துபவராகவும், கீழே உள்ள கைக்குரிய நபர் பணிந்து செல்பவராகவும் கருதப்படுகிறார். கை குலுக்கும் இரு நபர்களின் கைகளும் சம நிலையாக இருக்கும் பட்சத்தில் இருவரும் இணையாகப் பழக விரும்புகிறார்கள் என்ற அர்த்தம் வெளிப்படுகிறது. எதிராளியை ஒரு கையால் கையை குலுக்கியபடி இன்னொரு கையால் அவரது தோளைத் தொடுவது அவருக்கு நம்பிக்கை மற்றும்தெம்புதருவதற்காகவெளிப்படும் உடல் மொழியாகும்.

**கால்கள்**

கால்களைப் பொறுத்தவரை எல்லோருக்கும் தெரிந்த பொதுவான உடல் மொழி கால் மேல் கால்போட்டு அமர்வது. இதற்கான அர்த்தம் பயந்து போய், உடம்பை குறுக்கிக் கொண்டு உட்கார்கிறார்கள் என்பதாகும். கால் மேல் கால் போட்டு ஆட்டுகிறவர்கள் அலட்சியமான வர்கள். அதீத தன்னம்பிக்கை கொண்டவர்கள், அடுத்தவர்கள் மீது ஆதிக்கம் செலுத்த விரும்புகிறவர்கள் என்றெல்லாம் கருதப்படுகிறது. இருவர் நின்று கொண்டு பேசிக் கொண்டிருக்கும் போது இருவருடைய கால்களும் ஒரே கோணத்தில் இருந்தால், பேசுகிற விடயத்தில் இருவரும் ஈடுபாடு உள்ளது என்றும் இருவருடைய கால்களும் வேறு வேறு கோணத்தில் இருக்கும் போது பேசுகிற விடயத்தில் ஈடுபாடு இல்லை என்றும் உடல் மொழியில் குறிப்பிடப்படுகின்றது.

நிற்பது போலவே நடப்பதிலும் உடல்மொழி அம்சங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. தரையில் அழுத்தமாகக் கால் பதித்து நடக்கிறவர்கள், விறைப்பாக நடக்கிறவர்கள் தாங்கள் எடுத்த முடிவில் உறுதியாக இருப்பார்கள். எப்போதும் வேகமாக நடக்கிறவர்கள், பொறுமையற்றவர்கள், எளிதில் உணர்ச்சி வயப்படக்கூடியவர்கள் ஆவே சமானவர்களாக இருப்பர்.

**நேர்முக தேர்விற்கு செல்லும் போது:**

நேர்முக தேர்விற்கு செல்லும் இடத்தில் உங்கள் வாகனத்தை நிறுத்தும் போதே தன்னம்பிக்கைத் தோற்றத்தை காட்டுங்கள். யாராவது உங்களைக் கவனித்துக் கொண்டிருக்கலாம். பலநேரங்களில், வாகனம் நிறுத்தும் பகுதியிலிருந்தே நேர்முகத் தேர் தொடங்கிவிடுகிறது. வரவேற்பறையில் உடனே உட்கார வேண்டாம். நின்று கொண்டிருங்கள். அது உங்களைத் தன்னம்பிக்கை யானவராகக் காட்டும். நேர்முகத்துக்காக காத்திருக்கும்போது அங்கிருக்கும் அறிவுறுத்தல் பலகையை நன்கு அவதானித்து வைத்துக் கொள்ளுங்கள். கையில் மடிக்கணனி (கைத்தொலைபேசி அல்ல) மாதிரி ஏதாவது ஒன்றில் ஆழ்ந்திருங்கள். நேர் முகத்துக்கு அழைக்கப்படுகையில், இதோ ஒரு நொடியில் முடிக்கிறேன் என்று அணைத்து விட்டு எழுந்து செல்லுங்கள். சும்மாவே என்று இருக்க வேண்டாம்.

நேர்முகத் தேர்வு அறை நோக்கிச் செல்கையில் ஒரே சீரான வேகத்தில் நடவுங்கள். வேகம் சீரற்று இருப்பதாகத் தோன்றினால், நேர் முகத் தேர்வு அறைக்கு முன் ஒரு கணம் நின்று நிதானப்படுத்திக் கொள்ளுங்கள். நேர்முகத் தேர்வாளர்களுடன் சரியான விதத்தில் கைகுலுக்குங்கள். அவர்களை நெருங்கும்போதே குலுக்குவதற்காகக் கையை உயர்த்துங்கள். தள்ளுவதைப் போல கையை நீட்டாதீர்கள். எதிராளியின் அதே அழுத்தத்தைக் கொடுங்கள். கையை நேரே வைத்திருங்கள். (கை கீழ்ப்புறமாகப் பார்த்த மாதிரி



இருப்பது ஆதிக்கத்தையும், மேல்புறமாகப் பார்த்தவாறு இருப்பது தாழ்மையையும் காட்டும்). உங்கள் நேர்முகத் தேர்வாளரை 45 டிகிரி கோணத்தில் பாருங்கள். நேருக்கு நேராகப் பார்ப்பது, மோதல் முகபாவத்தைக் காட்டும். கைகளைப் பற்றிக் கொண்டிருப்பது, உங்களின் பாதுகாப்பின்மையை எடுத்துக்காட்டும். கைகளை குறுக்காகப் போடுவது, நீங்கள் அமுக்கமானவர் என்பதன் அடையாளம். இரு கை விரல்களையும் ஒன்றோடு ஒன்று அழுத்தியவாறு பேசலாம். உள்ளங்கையை மேலே காட்டியவாறு பேசுவது, நம்பிக்கையை உணர்த்தும்.

இறுதியாக பொய் சொல்லப்படும் போதான விசேட அடையாளங்களை பார்ப்போம். பொய் சொல்பவர் தனது முகத்தைத் தொடுவார். குருதி மூக்கை நோக்கிப் பாயும் என்பதால், மூக்கு பெரிதாகும். அதை அடிக்கடி தொட ஆரம்பிப்பார். உண்மையைச் சொல்லணும்னா.. என்று ஒருவர் ஆரம்பித்தால், பொய் சொல்லப் போகிறார் என்று அர்த்தம். ஆண்களுடன் ஒப்பிடும்போது பொய்யைக் கண்டுபிடிப்பதில் பெண்கள் கில்லாடிகள். (பெண்கள் தானே தமது குழந்தைகளின் சமிக்ஞைகளை சரியாக அறிகிறார்கள்? எனவே தம் மனைவியிடம் பொய் சொல்ல முனையும் ஆண்கள், அந்த வேலையைபோஸில் வைத்துக்கொள்வது நல்லது!)

உடல் மொழி என்பது நம் அன்றாட வாழ்வில் மிகவும் முக்கியமானது. வீடு. அலுவலகம் எங்கே இருந்தாலும், நாம் பேசும் மொழியை விட நம் உடல் பேசுவதில் தான் அதிக பாதிப்புகள் இருக்கின்றன.

நோயுற்று இருக்கும் ஒருவனை சென்று பார்க்கும் டாக்டர் முகத்தில் சிரிப்பை பார்க்கும் போதே அவனுக்கு நோய் அவனை விட்டு போய் விடும் என்ற எண்ணம் தோன்ற வேண்டும். அந்த டாக்டரின் பேச்சு, மருந்து போன்றவற்றை விட அவரின் புன்னகை தரும் அன்பு பாதி மேல் வியாதியை குறைத்து விடும். சேவை தொழிலில் இருப்பவர்களின் உடல் மொழி எப்போதும் அடுத்தவருக்கு நம்பிக்கையை தருமாறு இருக்கவேண்டும்.

உடல் மொழி என்பது அடுத்தவரை பாதிக்கக்கூடிய வகையில் நாம் அனுமதிக்க கூடாது, நம்மை மீறி நம் உடல் உறுப்புகள் பேசாதவாறு பார்த்து கொள்ள வேண்டும். நம் மூளை இடும் கட்டளைக்கு தகுந்தாற் போல் தான் நம் அசைவுகளும் இருக்கின்றன. நம் மூளைக்கு நாம் நல்ல எண்ணங்களை கொண்டு சென்றாலே அது தன் வேலையை ஒழுங்காக செய்யும்.

உங்கள் வீட்டில் உடல் மொழிக்கு அதிக முக்கியத்துவம் தருவார்கள். அதாவது நீங்கள் எப்படி நடக்க வேண்டும், எப்படி பார்க்க வேண்டும், பேசும் போது உங்கள் உடல் அசைவுகள் எப்படி இருக்க வேண்டும், பொது இடங்களில் எப்படி நிற்க வேண்டும், உட்கார வேண்டும், வீட்டில் கூட உட் காரும் போது எப்படி உட்கார வேண்டும் என்று உங்களு டைய பெற்றோர் சொல்லி கொடுப்பார்கள். சரியாக இல்லையென்றால் திருத்திக் கொள்ளும் வரை பழக்குவார்கள். பெண் குழந்தை என்றால் உடல் மொழியை மிக கவனமாக சொல்லிக் கொடுத்து வளர்ப்பார்கள். வாய் திறக்காமல் கண்ணால் பேசியே பாதி வேலையை வாங்குவார்கள். இந்த பழக்க வழக்கங்கள் அலுவலகத்திலும், வெளி இடங்களிலும் நல்ல பலனை தரும்.

உடல்மொழியின் புரிதல் மிக அவசியம். உடல் மொழியில் கற்றுக்கொள்ள நிறைய உண்டு. அது தவறாக, மற்ற வரை பாதிக்கும் வகையில் இருப்பின், நாம் நம்மை கவனித்து கண்டிப்பாக மாற்றிக்கொள்ள வேண்டும். நிறைவாகக் கூறும் ஆலோசனை, புதியவர் ஒருவரைப் பற்றிய முதல் அபிப்பிராயம் 4 நிமிடங்களில் உருவாகிவிடுகிறது. பல வேளைகளில், பத்தே நொடிகளில் அந்த முடிவுக்கு வந்துவிட முடியும். எனவே அதற்குள் மற்றவர்களைக் கவர்ந்துவிட வேண்டும். முயற்சி செய்யுங்கள். முயற்சி திருவினையாக்கும்.

காலிங்கராசா ஹறிச்சந்திரா தொழில்நுட்ப அலுவலர், மீன்பிடியியல் விஞ்ஞானத்துறை, விஞ்ஞானபீடம், யாழ். பல்கலைக்கழகம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 168

ஆவர்த்தன அட்டவணையில் புதிதாக இணைக்கப்பட்ட Nihonium (Nh)-113 எனும் மூலகத்தின் பெயர் யாரால் கண்டறிந்து முன்மொழியப்பட்டது?

கலாநிதி. (செல்வி) ஷிவதர்சினி இராசலிங்கம்
ஆசிரியர், பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இரசாயனவியற்றுறை
யாழ். பல்கலைக்கழகம்.

புதிர் 168இற்கான விடைகளை 12.09.2016 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும். இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான சங்கம் பிரிவு A பிரிவிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**புதிர் 167 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

பரிசுபெறுபவர்
ரூபவதனா துரைராசா
சங்கரத்தை வீதி,
வட்டுக்கோட்டை.

புதிர் 167க்கான கேள்வியும் விடையும்:


நடைபெற்று வரும் ஒலிம்பிக் தொடரில் இந்தியாவிற்கான பதக்கப்பட்டியலை ஆரம்பித்து வைத்த வீரர், வீராங்கனை யார்? சாக்ஷி மாலிக்

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 168**

சரியான விடை:-....................
முழுப்பெயர்:-....................
முகவரி:-....................
தொ.பே. இல:....................
கையொப்பம்:....................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலய சூழலில் இன்று



## ஆன்மீகச் சொற்பொழிவு

நல்லைக் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ். கதிர்கலையகத்தின் ஏற்பாட்டில் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் முன்பாக அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் பண்டிதர் பொ.சுகுந்தன் தலைமையில் தினமும் மாலை 6 மணியளவில் ஆன்மீக நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

இன்று வெள்ளிக்கிழமை நல்லூரான் பற்றி கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் அதிபர் மலர் சின்னையா சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (இ-3)

## வில்லிபாரதத்தில் 'தர்மர் பட்டாபிஷேகம்'

நல்லூர்க் கந்தப் பெருமானின் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவமகா சபை நடத்தி வரும் தெய்வீகத் தொடர் இசைப்பேருரை நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணியளவில் இடம்பெற்று வருகின்றது.

இந்நிகழ்வில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மாவின் வில்லிபாரதம் பற்றிய தொடரில் இன்று வெள்ளிக்கிழமை ''தர்மர் பட்டாபிஷேகம்'' பற்றி சங்கீத கதாப்பிரசங்கம் இடம்பெறும். (இ-3)

## தெய்வீக இசையரங்கு

யாழ். இளங்கலைஞர் மன்றத்தின ஏற்பாட்டில் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை நடைபெற்று வருகின்ற தெய்வீக இசையரங்கில் இன்று வெள்ளிக்கிழமை பாட்டு- கலாநிதி நா.வி.மு.நவரட்ணம், உடன் பாடுபவர்- ந.பரந்தாமன், வயலின்- சு.கோபிதாஸ், மிருதங்கம்- கலாநிதி எஸ். மகேந்திரன், முகர்சிங்- ந.சதீஸ்குமார் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர். (இ-3)

## அருள்நெறி விழா

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் யாழ். மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் அருள்நெறி விழா இன்றும் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை இடம்பெறும். இந்து சமய கலாசார அலுவல்கள் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு மற்றும் இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி கலந்து கொள்வார். (இ-3)

## தெய்வீக இசைச்சங்கமம்

(யாழ்ப்பாணம்)

மொடேர்ண் சர்வதேச இந்து ஆகம கலை கலாசார நிறுவனம் நல்லூர்க்கந்தனின் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை ஆதீன மண்டபத்தில் இரவு 7 மணி முதல் 8 மணிவரை நடத்தி வரும் ''தெய்வீக இசைச் சங்கமத்தில்'' பூங்காவனத் திருவிழாவான இன்று வெள்ளிக்கிழமை செல்வி. மதுஜா சிவநாதன், செல்வன் அழகரட்ணம் கல்யாண் சரண் ஆகியோரின் இசைக் கச்சேரி இடம்பெறும். (இ-3)

## அரசடி விநாயகருக்கு புதிய வசந்த மண்டபம்

### 8ம் திகதி அடிக்கல் நாட்டும் நிகழ்வு

கட்டுடை அரசடி வீரகத்தி விநா யகர் ஆலய வசந்த மண்டபத் திருப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள் ளன.

இந்நிலையில் எதிர்வரும் 8 ஆம் திகதி காலை 8 மணியள வில் புதிய வசந்த மண்டபத்துக் கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண விவசாயம், சுற்றுச் சூழல், கூட்டுறவுத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தசித்தார்த் தன், வடக்கு மாகாண சபை உறுப்பி னர் பாகஜதீபன் ஆகியோர் விருந் தினர்களாக பங்கேற்கவுள்ளனர்.

எனவே அன்றைய தினம் அடி யவர்கள் அனைவரையும் நிகழ் வில் பங்கேற்குமாறு ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் திருக்கு மரன் கேட்டுள்ளார்.

நூற்றாண்டு பழைமையான கட்டுடை அரசடி வீரகத்தி விநாய கர் ஆலய திருப்பணிகளுக்கு மீள்குடியேற்றம், இந்துமத விவகார அமைச்சும் நிதியொதுக்கீடு வழங் கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ

## வகுப்புக்கள் மீள ஆரம்பம்

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்று வந்த இலவச மிருதங்க, வயலின், சங்கீத மற்றும் பண்ணிசை வகுப்புக்கள் இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில் அவை மீளவும் நாளை 3 ஆம் திகதி தொடக்கம் நடைபெறும்.

மேலும் புதிய யோகாசனப் பிரிவுகளும் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்வதோடு இவ்வகுப்புக்கள் அனைத்தும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் இலவசமாக நடத்தப்பட்டு வருகின்றது.

வகுப்பு விபரங்கள் (சனி மற்றும் ஞாயிறு காலை தொடக்கம்) யோகாசனம் ஆண்கள் பிரிவு I-6.00-7.00, யோகாசனம் ஆண்கள் பிரிவு-II- 7.00-8.00, யோகாசனம் பெண்கள் பிரிவு -8.00-9.00, மிருதங்கம் -9.00-10.00, வயலின் -10.00-11.00, சங்கீதம் மற்றும் பண்ணிசை-11.00-01.00. மேலதிக விபரங்களைப்பெற 077 582 1041, 077 424 2143 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அபிவிருத்தி உத்தியோகத்தர் கேகேசுதாகரன் அறிவித்துள்ளார். (இ-7)

# யாழ்.மாவட்டத்தில் நிரந்தர வணிக கப்பற்றுறை செயலகம்

## அமைச்சர் அர்ஜூன இன்று திறந்து வைக்கிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பயணிகள் சேவையில் ஈடுபடும் படகுகளுக்கான தரப்பரிசோதனை மற்றும் பாதுகாப்பான பயணிகள் படகுச் சேவைக்கான வசதிகளை மேற்கொள்ளும் பொருட்டு யாழ். மாவட்டத்தில் நிரந்தரமாக வணிக கப்பற்றுறை செயலகத்தின் அலுவலகமானது இன்று ஊர்காவற்றுறை சுருவில் வீதியில் துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் அர்ஜூன ரணதுங்கவால் திறந்து வைக்கப்படவுள்ளது.

மேலும் யாழ்.மாவட்டத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள படகுகள் பரிசோதிக்கும் தளத்திற்கான வேலைகளும் ஊர்காவற்றுறை கடற்கரை வீதியில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

வணிக கப்பற்றுறை செயலகத்தின் யாழ்ப்பாண அலுவலகத்திற்கான நிரந்தர கட்டடம் அமைக்கும் பணிகளும் கடற்கரை வீதியில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

இதன்மூலம் யாழ். மாவட்டத்தில் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் படகுகளின் உரிமையாளர்கள் தங்களது படகுகளை பரிசோதிக்கவும் தரமேம்பாட்டை மேற்கொண்டு பாதுகாப்பான பயணிகள் படகுச் சேவையினை நடைமுறைப்படுத்தக்கூடியதாக இருக்கும் என யாழ். மாவட்ட அரச அதிபர் அறிவித்துள்ளார். (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூரானுக்கு இன்று பூங்காவனத்திருவிழா



## எல்லோருக்கும் வரமளிக்கும் கந்தா

நல்லூரில் கோயில் கொண்டு
எல்லோர்க்கும் வேண்டும் வரமளிக்கும்
பொல்லா நோயும் போக்கி யொரு
பொல்லாப்புமில்லாமல் எமைக் காக்கும் கந்தனே
அல்லும் பகலுமுனை அகத்திலே நிறுத்தி-ஏதும் இல்லாரும்,
உள்ளாரும் உனைநாடி வந்து
சொல்லாலும் செயலாலும் தன்னிலை பகர்வர்
எல்லோர் குறையும் போக்கியருள் நல்லூரானே

*புதுவை பொன்- தங்கராசா*

## ஆறுமுக வேலனுக்கு ஆறுபாடல் அபலைகளின் வாழ்வுக்காய் ஆறுபாடல்

கோல முறு நின்னழகுக் கோலம் காண இங்கே, கூடுகின்
றார் மக்களெல்லாம் கூட்டமாக
வேலவனே நின்னடியார் கூட்டம் அங்கே
விதியை நொந்து மதியிழந்து நிற்குதையா
சீலமுறு வாழ்வதனைத் தேடி நிற்கும் இந்த
சீரழிந்த நிலை எப்போ மாறுமையா
காலமிது கருணை செய்வாய் நல்லூர்க்கந்தா
காத்திருக்கும் அடியவர்க்காய் கண் விழிப்பாய்

*நயினை நா.யோகநாதன்.*

## எங்கும் அவன் பேரருள் நிலைத்திட

நல்லைக் கந்தன் எழிலைக் காண
ஆயிரம் கண் வேண்டுமே
பல்வினை போக்கும்
அவன் பாதக் கமலம் தொழ
பாவி மனம் ஏங்குதே -
எல்லையில்லாப் பெருஞ்ஜோதி
யொன்று என்னுள் தெரிகிறதே
தங்கும் ஞானப் பொருள்
ஜோதி மயமானதே
எங்கும் அவன் பேரருள்
நிலைத்திட மாய இருள் நீங்கிடுமே
பேரின்பம் கிடைத்திடுமே



*க.நாகேஸ்வரா சண்டிலிப்பாய்.*

## வினை தீர்ப்பான் வேலால்



குன்றுகள் தோறும் குடி கொண்ட பாலா
முத்தமிழால் நக்கீரன் முருகாற்றுப் படை பாட
மூவிரு முகத்துடன்
முன் வந்தருள் தந்த
நல்லூரான் புகழ் பாடி நாமவன் பாதம் பணிய
வினை தீர்ப்பான் வேலன் வீரம்
விளைந்த வேலால்.

சி.நிலாஜினி
யா/ப.மெ.ம.வி.

## நல்லைக்கந்தன் சந்தவிருத்தம்

தாயினும் மேலாகத் தழுவியே காத்திடும்
தங்கவுரு வானசுடரே
வாயினும் மனத்தினும் மருவியே போற்றிடின்
வாராது மென்றுமிடரே
நாயனார் பாடலை நயமுடன் கண்டதால்
நற்றமிழ்ப் பற்றிலூறி
நாயனேன் பாடுவேன் நவில்வது நீயன்றோ
நல்லூரின் கந்தவேளே!

*கலாபூஷணம், சந்தக்கவிஞர். நவ.பாலகோபால்*

# 103 படகுகளை விடுவிக்கக்கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையறையற்ற வேலை நிறுத்தம்

(இராமேஸ்வரம்)

**இலங்கையில் உள்ள தமிழக மீனவர்களின் 103 படகுகளை விடுவிக்க வேண்டும் என்பது உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்று காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.**



தமிழக மீனவர்கள் கச்சதீவு அருகே மீன்பிடிக்க செல்லும்போது எல்லை தாண்டி வந்ததாக கூறி அவர்களை சிறை பிடிப்பது. தாக்கி விரட்டியப்பது போன்ற செயல்களில் இலங்கை கடற்படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். இது தொடர்பாக இலங்கை அரசுடன் பல்வேறு கட்ட பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற பின்னரும் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இந்நிலையில் கச்சதீவு பகுதியில் பாரம்பரிய மீன்பிடி உரிமை பெறுவது குறித்து நேற்று முன்தினம் இராமேஸ்வரத்தில் மீனவர் சங்க ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் இலங்கையில் உள்ள 103 தமிழக மீனவர்களின் விசை படகுகளை உடனே விடுவிக்க வேண்டும். இலங்கை கடற் படையால் சிறைபிடிக்கப் பட்ட 4 மீனவர்களை விடுவிக்க வேண்டும். கச்சதீவு பகுதியில் பாரம்பரிய மீன்பிடி உரிமையை பெற்று தர வேண்டும்.

இதற்காக இந்திய அரசு இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் எனவும், மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று முதல் காலவரையறையற்ற வேலைநிறுத்தம் மற்றும் பல்வேறு போராட்டங்களில் ஈடுபடுபடுது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன்படி நேற்று இராமேஸ்வரம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனால் சுமார் 1000இற்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கடலில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்தன. வேலை நிறுத்தம் காரணமாக இராமேஸ்வரம் துறைமுக வெறிச் சோடி காணப்பட்டது.(இ-7-10)

# தொடரும் அசாதாரண நிலை; காஷ்மீரில் மூன்று இடங்களில் மீண்டும் ஊரடங்கு உத்தரவு



காஷ்மீர் மாநிலத்தில் அசாதாரண நிலை தொடரும் சூழலில் நோவட்டா, ஸ்ரீநகர், பாரமுல்லா ஆகிய இடங்களில் மீண்டும் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பிரிவினைவாதிகள் தங்கள் போராட்டத்தை எதிர்வரும் 8ஆம் திகதி வரை நீட்டித்துள்ளதால் பாதுகாப்புப் படையினர் ஊரடங்கு உத்தரவை அமுல்படுத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் பாரமுல்லா மாவட்டத்தில் ராபியாபாத்தில் பாதுகாப்பு வாகனத்தின் மீது கல்வீசி தாக்குதல் நடத்திய டானிஷ் அகமது என்ற 18 வயது இளைஞர் படையினரால் கொல்லப்பட்டார்.

இதனையடுத்து ஏற்பட்ட கலவரங்களில் மக்கள் ஜனநாயக கட்சியின் ராஜ்யசபா எம்.பி. நாஜிர் அகமதுவின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

கலவரங்கள் தொடர்வதால் காஷ்மீர் மாநிலத்தில் நோவட்டா, ஸ்ரீநகர், பாரமுல்லா ஆகிய இடங்களில் மீண்டும் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

நேற்றும் ஆங்காங்கே கல்வீச்சு சம்பவங்கள் இடம் பெற்றன. சோபூர் மாவட்டத்தல் மூன்று சக்கர வாகனம் ஒன்றுக்கு போராட்டக்காரர்கள் தீவைத்து எரித்தனர்.

பிரிவினைவாதிகள் இம்மாதம் 8ஆம் திகதிவரை முழுஅடைப்புப் போராட்டத்தைத் தொடருமாறு பொது மக்களிடம் புதிய அட்டவணையை வழங்கியுள்ளனர்.

காஷ்மீரில் கடந்த ஜூலை 8ஆம் திகதி முதல் இது வரை நடைபெற்ற மோதல்களில் பொதுமக்களில் 69 பேர் உட்பட 72 பேர் பலியாகினர். 11 ஆயிரம் பேர் காயமடைந்தனர். (இ-7-10)

# எதிர்க்கட்சி வெளிநடப்பு

தமிழக சட்டசபையில் முன்னாள் தலைமை செயலாளர் ஞானதேசிகன் இடைநிறுத்த விவகாரம் தொடர்பாக பேசுவதற்கு அனுமதி மறுத்ததால் தி.மு.க.-காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

முன்னாள் தலைமை செயலாளர் ஞானதேசிகன் உள்ளிட்ட மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இடைநிறுத்தம செய்யப்பட்டது குறித்து சட்டசபையில் நேற்று எதிர்க்கட்சி தலைவர் மு.க.ஸ்டாலின் பேசத் தொடங்கும்போது குறுக்கிட்ட சபாநாயகர் தனபால் அதிகாரிகள் பற்றி இங்கு பேச முடியாது. நீங்கள் பேசுவது அவை குறிப்பில் ஏறாது. இது சம்பந்தமாக பேச அனுமதி இல்லை.

நிர்வாகத்தில் செய்வதை வெளியே சொல்ல முடியாது. எனவே நீங்கள் வேறு பிரச்சினை பற்றிபேசலாம் என்றார்.

ஆனால் மு.க.ஸ்டாலின் தொடர்ந்து இதே பிரச்சினை பற்றி பேச முற்பட்டார். அவருக்கு சபாநாயகர் அனுமதி அளிக்கவில்லை. இதனால் சபையில் இருந்து மு.க.ஸ்ராலின் தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

இதேபோல் காங்கிரஸ் சட்டமன்ற கட்சி தலைவர் கே.ஆர். ராமசாமியும் இதே கருத்தை பேச முற்பட்டார். அவருக்கும் சபாநாயகர் அனுமதி மறுத்ததால் காங்கிரசும் வெளிநடப்பு செய்தது. அவருடன் இந்திய யூனியன் முஸ்லிம் உறுப்பினர் அபுபக்கரும் வெளிநடப்பு செய்தார். (இ-7)

# அமைச்சர் சுஷ்மா சுவராஜின் சிங்கப்பூர் பயணம் இரத்து



இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தனது சிங்கப்பூர் சுற்றுப்பயணத்தை திடீர் என்று இரத்து செய்துள்ளார். சிங்கப்பூரில் ஷிகா வைரஸ் பரவி வருவதால் தனது பயணத்தை சுஷ்மா சுவராஜ் இரத்து செய்துள்ளதாக கூறப்படுகிறது.

பயணத்தை இரத்து செய்துள்ளதையடுத்து சிங்கப்பூரில் நடக்கும் இந்திய கடல் சார் மாநாட்டில் காணொளி காட்சி வாயிலாக சுஷ்மா சுவராஜ் கலந்து கொள்வார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, சிங்கப்பூரில் உள்ள இந்தியர்கள் 13 பேருக்கு ஷிகா வைரஸ் தாக்கி இருப்பது உறுதி செய்யப் பட்டுள்ளது. (இ-7-10)

# ரூ.75 கோடி மோசடி வழக்கு; பச்சமுத்துவைச் சிறையில் அடைக்க நீதிமன்று உத்தரவு



75கோடிரூபாமோசடிவழக்கில் கைது செய்யப்பட்டுள்ள எஸ்.ஆர்.எம் குழும தலைவர் பச்சமுத்துவை சிறையிலடைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மோசடி வழக்கு தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள பச்சமுத்துவை நேற்று முன்தினம் நீதிமன்ற அனுமதியுடன் பொலிஸார் காவலில் எடுத்து விசாரித்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலையுடன் பச்சமுத்துவின் பொலிஸ் காவல் முடிவடை ந்த நிலையில. பொலிஸார்பச்சமுத்துவை சைதாப்பேட்டை நீதி மன்றத்தில் மீண்டும் ஆஜர்படுத்தினர்.

அப்போது பச்சமுத்துவை, வரும் இம்மாதம் 9ஆம் திகதி வரை புழல் சிறையில் அடைக்க சைதாப்பேட்டை 11வது நீதித்துறை நடுவர் பிரகாஷ் உத்தரவிட்டதை தொடர்ந்து பொலிஸார் பச்சமுத்துவை புழல் சிறையில் அடைத்துள்ளனர். (இ-7)

# ராணுவ விமானம் அதிரடித் தாக்குதல்

## 17 பேர் உயிரிழப்பு

கிளர்ச்சிப்படை ஆக்கிரமிப்பு பகுதிகளில் நேற்று முன்தினம் சிரியா ராணுவம் அதிரடி விமான தாக்குதல் நடத்தியதில் 17 பேர் உயிரிழந்தனர்.

சிரியாவில் கடந்த பல ஆண்டுகளாக உள்நாட்டு போர் நிலவி வருகிறது. அலெப்போ நகரின் பெரும்பாலான பகுதிகள் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. கிளர்ச்சியாளர்களுக்கும், ஜனாதிபதி ஆசாத்தின் அரசுப் படைகளுக்குமிடையே உக்கிரமான போர் நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் சிரியா இரா ணுவம் கிளர்ச்சிப்படை ஆக் கிரமிப்பு பகுதிகளில் வான் வழித்தாக்குதல் நடத்தியது. இதில் வடக்கு சிரியாவை இட்லிப் மாகாணத்தை சேர்ந்த 17 பேர் உயிரிழந்ததாக சிரியா மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. (இ-7-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2050ம் ஆண்டு உலக மக்கள் தொகை ஆயிரம் கோடியை எட்டும் என கணிப்பு

### இந்தியா முதலிடத்தைப் பிடிக்கும்

(லண்டன்)

உலக மக்கள் தொகை தற்போது சுமார் 740 கோடியாக உள்ளது. இதில் சீனா முதல் இடத்திலும், இந்தியா இரண்டாவது இடத்திலும் உள்ளது.

ஆண்டுக்கு ஆண்டு உலக மக்கள் தொகை மிக வேகமாக உயர்ந்து வருகிறது. கடந்த நூற்றாண்டுகளுடன் ஒப்பிடுகையில் இந்த நூற்றாண்டில் மக்கள் தொகை அதிகரிப்பு பிரமிக்கத்தக்க வகையில் இருக்கும் என்று ஆய்வில் தெரிய வந்துள்ளது.

2050 ஆம் ஆண்டில் உலக மக்கள் தொகை 1000 கோடி எட்டிவிடும் என்று ஆய்வாளர்கள் கணித்துள்ளனர்.

அந்த சமயத்தில ஆசிய நாடுகளின் மக்கள் தொகை 530 கோடியாக இருக்கும். ஆபிரிக்கா நாடுகளின் மக்கள் தொகை 250 கோடியாக உயர்ந்திருக்கும்.

அமெரிக்காவின் மக்கள் தொகை 120 கோடியாக இருக்கும். ஐரோப்பிய நாடுகளின் மக்கள் தொகை 72 கோடியாக உயர்ந்திருக்கும். அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளின் பங்களிப்பு 6.6 கோடியாக இருக்கும் என்று ஆய்வுத் தகவலில் கூறப்பட்டுள்ளது.

2050 ஆம் ஆண்டில் சில நாடுகளில் மக்கள் தொகை உயர்வு சதவீதம் மிகமிக குறைவாக இருக்கும். ஆனால் ஆசிய நாடுகளில் மட்டும் மக்கள் தொகை அதிகரிப்பு பிரமிக்கத்தக்க வகையில் இருக்கும்.

2050 ஆம் ஆண்டில் உலக மக்கள் தொகையில் பாதிக்கு பாதி ஆசிய நாடுகளில்தான் இருக்கும். அதிலும் இந்தியா சீனாவை பின்னுக்கு தள்ளி விட்டு, மக்கள் தொகையில் முதலிடத்தை பிடிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## ஜனாதிபதியின் பதவி பறிப்பு

(பிரேசிலியா)

**பிரேசிலில் முறைகேடு குற்றச்சாட்டு காரணமாக பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஜனாதிபதி தில்மா ரூசெப் நீக்கப்பட்டு, புதிய ஜனாதிபதியாக மைக்கேல் டெமர் பதவியேற்றுள்ளார்.**



பிரேசில் நாட்டில் தில்மா ரூசெப் (வயது-68), 2011 ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதி பதவி வகித்து வருகிறார். கடந்த 2014 ஆம் ஆண்டு அவர் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோது, வெற்றி பெறுவதற்காக நாட்டின் பொருளாதார நிலைமை சிறப்பாக இருக்கிறது என்று காட்டிக்கொள்வதற்காக, நாட்டின் வருமானத்தை உயர்த்தி காட்டி மோசடியில் ஈடுபட்டுள்ளார் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதன் அடிப்படையில் அவரை பதவியில் இருந்து அகற்றுவதற்கு பாராளுமன்றத்தில் குற்றத் தீர்மானம் கொண்டு வர பாராளுமன்றத்தின் சிறப்பு குழு அனுமதி அளித்தது.

அதைத் தொடர்ந்து பாராளுமன்றத்தின் கீழ்சபையில் குற்றத் தீர்மானம் கொண்டு வர தயாரானபோது, உச்ச நீதிமன்றில் தில்மா ரூசெப் வழக்குத் தொடுத்தார்.

ஆனால் அங்கே அவருக்கு எதிராக தீர்ப்பு வந்தது.

இதையடுத்து அந்நாட்டு பாராளுமன்றத்தில் தில்மா ரூசெப்பிற்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டது. பாராளுமன்றத்தில் 81 உறுப்பினர்களில், 61 பேர் ரூசெப்புக்கு எதிராக வாக்களித்தனர். இதையடுத்து தில்மா ரூசெப்பின் பதவி பறிக்கப்பட்டது.

அதேநேரத்தில், தில்மா ரூசெப், அடுத்த எட்டு ஆண்டுகளுக்கு பொதுப் பதவிகளை வகிப்பதற்கு எதிராக தடை விதிப்பதில்லை என்று செனட் உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

துணை ஜனாதிபதியாக இருந்த மெக்கெல் டெமர் (வயது-75) நாட்டின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்றார்.

இதற்கிடையே தில்மா ரூசெப் பதவி நீக்கம் செய்யப்பட்டது வெனிசுலா, பொலிவியா மற்றும் ஈக்வடோர் ஆகிய நாடுகள் விமர்சனம் செய்தன.

எனவே, அந்நாடுகளில் உள்ள தூதர்களை நாடு திரும்பும்படி பிரேசில் அழைத்துள்ளது. இதேபோல் வெனிசுலாவும் பிரேசில் நாட்டில் உள்ள தனது தூதரை திரும்ப பெற்றுள்ளது. (இ-7)

## 50ஆண்டுகளுக்கு பிறகு அமெரிக்காவிலிருந்து கியூபா நோக்கிப் பறந்தது பயணிகள் விமானம்




அமெரிக்கா, கியூபா நாடுகளுக்கிடையே முதன் முறையாக வர்த்தக ரீதியான விமான போக்குவரத்து 50 ஆண்டுகளுக்கு பிறகு தொடங்கியுள்ளது.

அமெரிக்கா மற்றும் கியூபா நாடுகளுக்கிடையே 50 ஆண்டுகளாக பகைமை இருந்து வந்தது.

இவ்விரு நாடுகளுக்கிடையேயான பகைமையை மறந்து அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கியூபா சென்று அந்நாட்டு ஜனாதிபதி ராவல் காஸ்ட்ரோவை சந்தித்து, இரு நாடுகள் தொடர்பான உறவை புதுப்பித்தார்.

இது இரு நாடுகளுக்கிடையே வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாக இருந்தது. இதன் பயனாக இரு நாடுகளிலும் தூதரகங்கள் திறக்கப்பட்டன.

மேலும் இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தக ரீதியாக விமான போக்குவரத்து சேவை தொடங்கவும் முடிவு செய்திருந்தனர்.

இதை தொடர்ந்து அமெரிக்கா மற்றும் கியூபா நாடுகளுக்கிடையே 50 ஆண்டுகளுக்கு பிறகு முதன்முறையாக பயணிகள் விமான போக்குவரத்து சேவை தொடங்கியது.

ஜெட்புளு என்ற விமான நிறுவனம் 150 பேருடன் தெற்கு புளோரிடாவில் இருந்து, கியூபாவின் சாண்டா கிளாரா விமானநிலையம் சென்றடைந்தது. அவ்விமானத்தில் அமெரிக்க போக்குவரத்துத்துறை அமைச்சர், ஜெட்புளு நிறுவனத்தின் தலைமை நிர்வாகி ஆகியோரும் பயணித்தனர்.

இருநாடுகளுக்கும்இடையே கடந்த 1961 ஆம் ஆண்டு கடைசியாக விமான சேவை நடத்தப்பட்டது. அதன் பின் தற்போது மீண்டும் தொடங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 12 செயற்கைக் கோள்களை ஏவ இந்தியாவை நாடும் அமெரிக்கா

### இஸ்ரோ உயர் அதிகாரி தகவல்

(டில்லி)

12 செயற்கை கோள்களை விண்ணில் செலுத்த இந்தியாவின் உதவியை அமெரிக்கா நாடியுள்ளதாக இஸ்ரோ உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்திய விண்வெளி ஆய்வுக்கழகமான இஸ்ரோ நிறுவனம், இந்தியாவின்செயற்கை கோள்களை மட்டுமன்றி வெளிநாடுகளின் செயற்கை கோள்களையும் விண்ணில் செலுத்தி வருகிறது.

இதன் மூலம் இஸ்ரோ நிறுவனத்துக்கு வணிக ரீதியில் கணிசமான அளவுக்கு வருவாய் கிடைக்கிறது.

இந் நிலையில் எதிர்வரும் ஆண்டுகளில் 12 செயற்கை கோள்களை விண்ணில் செலுத்த இந்தியாவின் உதவியை அமெரிக்கா நாடியுள்ளது. வெளிநாடுகளின் வருகை அதிகரிப்பால் இஸ்ரோவுக்கு கிடைக்கும் வருமானம் உயர்ந்துள்ளது.

இஸ்ரோ நிறுவனம் கடந்த மாதம் ஒரே ஒரு பி.எஸ்.எல்.வி. ரொக்கெட் மூலம் 20 செயற்கை கோள்களை பறக்க விட்டு சாதனை படைத்தது. அதை முறியடிக்க 25 இற்கும் மேற்பட்ட செயற்கை கோள்களை விண்ணில் ஏவ இஸ்ரோ நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இது தவிர அடுத்த 10 ஆண்டுகளில் சுமார் 2500 செயற்கைக்கோள்களை தயாரிக்கவும் இஸ்ரோ முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. இந்த தகவல்களை இஸ்ரோவின் அண்ட்ரிக்ஸ் நிறுவன தலைவரும், நிர்வாக இயக்குநருமான ராகேஷ் சசிபுஷன் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## செவ்வாய்க் கிரகத்தில் வாழ ஒத்திகை ஆய்வை வெற்றிகரமாக முடித்த நாசா

செவ்வாய்க்கிரகத்தில் வாழ ஒரு வருட ஒத்திகை ஆய்வை வெற்றிகரமாக முடித்த நாசா குழுவினர் செவ்வாய்க்கிரகத்தில் வாழ்வதற்கான நம்பிக்கையை அளித்துள்ளதாகத் தெரிவித்தனர்.

அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசா செவ்வாய்க் கிரகத்திற்கு மனிதர்களை அனுப்புவதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் செவ்வாய்க்கிரகம் செல்லும் மனிதர்கள் அங்கு தாங்கள் வாழ்வதற்கான சூழ்நிலை எவ்வாறு இருக்கும், அதனை எப்படி சமாளிப்பது என்பதை உணர செவ்வாயக்கிரகத்தில் வாழ்வதற்கான ஒத்திகை சோதனையை நாசா நிறுவனம் நடத்த முடிவு செய்தது.

இதற்காக அமெரிக்காவை சேர்ந்த விமானி, கட்டட வடிவமைப்பாளர், பத்திரிகையாளர் மற்றும் மணல் ஆய்வாளர் என 4 பேர் மற்றும் பிரான்ஸ் நாட்டு உயிரியல் வல்லுநர், ஜேர்மனை சேர்ந்த இயற்பியலாளர் ஆகியோர் அடங்கிய 6 பேர் கொண்ட குழுவை நாசா தேர்வு செய்தது. இக்குழுவில் 2 பெண்களும் அடங்குவர்.

இக்குழு அமெரிக்காவின் ஹவாய் தீவில் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி தங்களது ஒத்திகை ஆய்வை தொடங்கியது. தீவில் தனிமைப் படுத்தப்பட்ட இடத்தில் செவ்வாய்க்கிரக சூழ்நிலைபோல மிகப்பெரிய கூடாரம் அமைத்து அதில் தங்கி இருந்தனர். அதாவது அவர்கள் பூமியில் இருந்த போதும் பூமியில் வாழ்வது போல் இல்லாமல், தூய்மையான காற்று, திடமான உணவுகள் உள்ளிட்டவை இன்றி விண்வெளியில் வாழ்வது போலவே வாழ்ந்து வந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அக்குழு தங்களது ஒரு வருட ஒத்திகை ஆய்வை வெற்றிகரமாக முடித்தனர். இந்த ஒத்திகை ஆய்வு செவ்வாய்க்கிரகத்தில் வாழ்வதற்கான நம்பிக்கையை அளித்துள்ளதாக அக்குழு உறுப்பினர்கள் தெரிவித்தனர். (இ-7)

## சீனாவிடமிருந்து எட்டு போர் நீர்மூழ்கி கப்பல்களை வாங்குகிறது பாகிஸ்தான்

(இஸ்லாமாபாத்)

ரூ.3.5 ஆயிரம் கோடி அளவிலான ஒப்பந்தம்படி சீனாவிடம் இருந்து 8 போர் நீர்மூழ்கி கப்பல்களை பாகிஸ்தான் வாங்குகிறது.

பாகிஸ்தான் கடற்படை அதிகாரிகள் பாகிஸ்தான் பாதுகாப்பு நிலைக்குழுவிடம் கடந்த 26 ஆம் திகதி 5 பில்லியன் அமெரிக்க டொலர் அளவிலான இந்த ஒப்பந்த விபரத்தை எடுத்துரைத்து உள்ளனர் என்று பாகிஸ்தான் அரசு தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் பாதுகாப்பு துறை நிலைக் குழுவிடம் அந்நாட்டு கடற்படை அதிகாரிகள்கொடுத்து உள்ள அறிக்கை, அடுத்த தலைமுறை நீர்மூழ்கி கப்பல்கள் திட்டம் முன்னோக்கி செல்கிறது என்பதை காட்டுகிறது என்று பாகிஸ்தான் தகவல் வெளியிட்டு உள்ளது. கடந்த ஏப்ரலில் பாகிஸ்தான் கடற்படையின் மூத்த அதிகாரி, 8 நீர்மூழ்கி கப்பல்களில் 4 கப்பல்களை வழங்கும் ஒப்பந்தத்தை கராச்சி கப்பல்கட்டும் மற்றும் இன் ஜினியரிங் ஒர்க்ஸ் பெற்று உள்ளது, ஏர் இண்டிபெண்டன் ப்ரோபல்சன் சிஸ்டத்தை கொண்டிருக்கும் என்று அறிவித்தார்.

இத்திட்டத்திற்கான மொத்த செலவிற்கும் தேவையான நிதியுதவியை குறைந்த வட்டியில் வழக்கு பாகிஸ்தானுக்கு வழங்கும் நீண்டகால கடனை நீட்டிக்க சீனா எதிர்பார்ப்பதாக தகவல் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

சீனாவின் கப்பல் கட்டும் மற்றும் விற்பனை நிறுவனத்தினால் எந்த வகையான நீர்மூழ்கி கப்பல்கள் பாகிஸ்தான் கடற்படைக்கு வழங்கப்படும் என்று அதிகார பூர்வமாக உறுதி செய்யப்படவில்லை. முதற்கட்டமாக 4 நீர்மூழ்கி கப்பல்கள் 2023ம் ஆண்டு இறுதிக்குள்ளும், மீதம் இருக்கும் 4 நீர்மூழ்கி கப்ப ல்கள் கராச்சியில் 2028ம் ஆண்டுக்குள்கட்டப்படும்என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன-இலங்கை உறவுகளை கெடுப்பதற்கு அனுமதியோம்

## சீனத் தூதுவர் எச்சரிக்கை

(கொழும்பு)

**கொழும்பு நிதி நகரத் திட்டத்தைப் பயன்படுத்தி சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளை கெடுப்பதற்கு எவரையும் சீனா அனுமதிக்காது என்று இலங்கைக்கான சீனத் தூதுவர் ஜி ஷியான்லியாங் தெரிவித்துள்ளார்.**



'சீன நிறுவனங்களால் கட்டப்படவுள்ள நிதி நகரத்தை, உலகின் எந்தப் பகுதியில் உள்ள நிறுவனங்களும் தமது வெளிப் படையான வர்த்தக நோக்கங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்த திட்டத்தில் ஏற்கனவே சில இந்திய நிறுவனங்களும் தொர்டர்புபட்டுள்ளன. இந்தியாவின் பங்களிப்பு அவசியமானது. எந்தமூன்றாவது தரப்பினதும் பங்களிப்பை நாம் வரவேற்கிறோம்.

மூலோபாய. அரசியல் மற்றும் கலாசார உறவுகளை விட. வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை அனைத்துலக அளவில் கட்டியெழுப்புவது இலங்கைக்கு மிகவும் முக்கியமானது.

இருதரப்பு உறவுகள் மற்றும் உறுதிப்பாட்டுக்கு பொருளாதார உறவுகள் மாத்திரமே. உறுதியான அடித்தளமாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(இ-7-10)

# தென்னைகளுக்கிடையில் தேங்காய் மட்டைக்குழி உற்பத்தியை அதிகரிக்கும்



ஜெ.சத்தியேந்திரன்
தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்,
தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை,
நல்லூர், யாழ்ப்பாணம்.

**02.09.2016- உலக தென்னை தினம். இத்தினத்தையொட்டி இன்று இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

தேங்காய் உற்பத்தியை அதிகரிக்க தென்னைகளுக்கு இடையில் தேங்காய் மட்டைக்குழிஅமைத்து தேங்காய் மட்டைகள்தாழ்க்கலாம். இதற்காக தென்னைப் பயிர்ச் செய்கை சபையினால் வடமாகாணம் உட்பட நாடு முழுவதும் தென்னைகளுக்கு இடையில் தேங்காய் மட்டைக்குழிகள் அமைத்து தேங்காய்மட்டைகள் தாட்டலிற்காகஏக்கருக்கு 15,000/= மானியப் பணமாக தென்னைச் செய்கையாளர்களுக்கு வழங்கிக்கொண்டிருக்கின்றது.

ஆகக்குறைந்தது அரை ஏக்கர் விஸ்தீரணம் இருத்தல் வேண்டும் (ஆகக் கூடியது 50 ஏக்கர் விஸ்தீரணம் வரை)

ஒரு ஏக்கருக்கு 20 தேங்காய் மட்டைக்குழிகள் வெட்டவேண்டும்.

ஒரு குழியில் 350 தேங்காய் மட்டைகள் தாட்டல் வேண்டும்.

குழியின்அளவு 8' x 4' x 3' (நீளம், அகலம், ஆழம்)

வெட்டும் முறை மற்றும் விபரங்கள் கட்டுரையில் தரப்பட்டுள்ளது.

இம்மானியத் திட்டத்தில் இணைந்து பயன் பெற விரும்புவோர் உங்கள் பகுதியில் அமைந்துள்ள கமநல சேவை நிலையங்களில் தென்னைப் பயிர்ச் செய்கை சபை அலுவலகத்தில் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தருடன் அல்லது அபிவிருத்தி உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளவும்.

### தேங்காய் மட்டைக் குழிகள் அமைத்தல்

தேங்காய் மட்டையும் தும்புச் சோற்றியும் தென்னையின் கீழ் ஆறு அடிக்கு அப்பால் தாட்டால் அதிகளவு நீரைச் சேமித்து வைக்கும். வரண்ட காலங்களில் தென்னையின் நீர்த்தேவையைப் பூர்த்தி செய்ய ஏதுவாக இருக்கும்.

இந்தத் தேங்காய் மட்டை தும்புச் சோற்றிக்குழியிலும் அகழியிலும் தாட்டால் அண்ணளவாக 60 நாட்கள் ஈரலிப்பினை மண்ணின் தன்மைக்கேற்ப வைத்திருந்து வரட்சியினைத் தாக்குப் பிடிக்கும்.

தேங்காய் மட்டைகள், தும்புச் சோற்றிகள் என்பனவற்றை 3 அடி ஆழத்தில் தாட்டால் வேர்கள் ஈரலிப்பினை உறிஞ்சி முழுப்பயனைப் பெறும். எப்படியாயினும் வன்மையான மண்ணில் கிடங்கு வெட்ட செலவு கூடுதலாக இருக்கும்.

தென்னந் தோட்டங்களின் தொடர்ச்சியான பிரயோசனத்திற்காக மண்ணுக்கு இடப்படும் உரிமட்டைகளை மீள் சுழற்சிக்கு உட்படுத்தலாம்.

அதனுடைய நிறையினை விட 6 மடங்கு நிறையுடைய நீரை உறிஞ்சி வைத்திருக்கும் வரண்ட நேரத்தில் இந்நீரை மெதுவாக மண்ணுக்கு வெளிவிடும்.

வித்தியாசமான இடைவெளியில் தேங்காய் மட்டைக் குழிகளை அமைக்கலாம்.

முறை I

கிடங்கின் அளவு: 8' × 4' × 3' உடைய கிடங்கினை இரண்டு தென்னைகளுக்கிடையில் ஒன்றைவிட்டு ஒரு வரிசையில் வெட்ட வேண்டும். (350- 400 தேங்காய் மட்டைகள் தேவைப்படும்)

முறை II

ஒவ்வொரு தென்னை மரத்திற்கும் தனித்தனியே அடி மரத்திலிருந்து 6 அடி தூரம் தள்ளி (பசளை வட்டத்தினைத் தவிர்த்து) 4' × 4' × 3' நீள, அகல, ஆழமுடைய கிடங்கினை வெட்டி அதனுள் தேங்காய்மட்டை அல்லது தும்புச் சோற்றி இடலாம். (ஒரு குழிக்கு 200 தேங்காய் மட்டைகள் தேவை)

முறை III

2' × 3' உடைய கிடங்கினை மரத்திலிருந்து 6 அடி தூரம் தள்ளி அரை வட்டத்திற்கு மட்டும் வெட்டி (பசளை, வட்டத்திற்கு அப்பால்) அதனுள் தேங்காய் மட்டைகள் தாழ்க்கலாம்.



முறை IV:

அகழிகள் (Trenches)

இதில் பெரியளவில் தேங்காய் மட்டை அல்லது தும்புச் சோற்றி இட வேண்டியிருக்கும். இதனை உயர் விளைச்சலைத் தரக்கூடிய தென்னந்தோட்டங்களில் செய்யலாம்.

அகழியின் அகலம் 3 அடி, நீளம் தேவைக்கு ஏற்ற வாறும் 3 அடி ஆழம் உடையதுமாக இருத்தல் வேண்டும்.

### தேங்காய் மட்டைகளை அகழியில் தாட்டல் தேவையான தேங்காய் மட்டைகள்

ஒரு சதுர மீற்றருக்கு (Cubic meter) 250-300 தேங்காய் மட்டைகள் (கிட்டத்தட்ட 1 சதுர அடிக்கு 7-8 தேங்காய் மட்டைகள் தேவை)

குறிப்பு: குறிப்பாக குடாநாட்டிலும் (கொழும்புத்துறை, அரியாலை கச்சாய் பிரதேசங்கள்) குடாநாட்டுக்கு வெளியிலும் (கிராஞ்சி, பூநகரி பளை, கண்டாவளை போன்ற பிரதேசங்களிலும் தும்புத் தொழிலில் ஈடுபடுபவர்கள் கழிவாக சோற்றியினை ஒரு இடத்தில் கொட்டி எரிக்காமல் மேற்கூறிய முறையில் தென்னைக்கு தாட்டு விடலாம்.

ஆரம்பத்தில் 1 ஹெக்டயர் நிலப்பரப்பிற்கு 78 குழிகளும் ஏக்கருக்கு 32 குழிகளும் வெட்டலாம்.

ஒரு குழிக்கு 350- 400 தேங்காய் மட்டைகள் தேவை.

இந்தச்செயன்முறைசெய்வதனால் 5-6 வருடங்களுக்கு இதன் பலனை எதிர் பார்க்கலாம். இரண்டாவது தடவையாக உரிமட்டைகளை குழிக்குள் தாழ்க்கும் போது ஏற்கனவே உள்ள பழைய குழிகளைத் தவிர்த்து ஒன்று விட்டொன்று என்ற ஒழுங்கில் மீண்டும் புதிய குழிகளில் தாட்டல் வேண்டும்.

தேங்காய் மட்டை செயன்முறை ஒவ்வொரு வருடமும் செய்தல்வேண்டும்.

### தேங்காய் மட்டைகள், தும்புச் சோற்றிகளை கிடங்கு அகழியில் தாட்டல் முறை

### தேங்காய் மட்டை (Coco nut Husk)

தேங்காய்மட்டைகள் மண்படைக்கேற்றவாறு ஒழுங்காக அமுத்தமான பக்கம் கீழ்ப்பக்கம் இருக்கத்தக்கவாறு அடுக்கினால் தென்னை வேர்கள் அதனுள் சென்று நீரை உறிஞ்சிக் கொள்ளக்கூடியதாக இருக்கும். பின்பு நில மட்டத்துடன் மண்ணை கிடங்கிற்குள் மூடிவிடவும். தேங்காய் மட்டைகளை எதுவித காரணம் கொண்டும் நில மட்டத்திற்கு மேலே போடக்கூடாது. ஏனெனில் தேங்காய்மட்டை உக்கும் போது அதனுள் கருவண்டுகள் முட்டையிட்டு உற்பத்தியாக ஏதுவாகின்றன.

### உரிமட்டைக்குழி குறுக்கு வெட்டு முகத் தோற்றம்

குழிகளை வெட்டும் போது கூலியாட்களுக்குப் பதிலாக நவீன தொழில்நுட்பத்தினைக் கொண்டு பைக்கோ இயந்திரத்தினைப் பயன்படுத்தலாம். குழியின் அளவு 8' × 4' × 3' (நீளம், அகலம், ஆழம்) உரிமட்டைகள் கடற்பஞ்சு போல் தொழிற்படும்.

### தும்புச் சோற்றி (Coir Dust)

தும்புச் சோற்றியினை கிடங்கில் படைபடையாகப் போடுதல் வேண்டும்.

ஒவ்வொரு படையும் 8 செ.மீ. (3 அங்குலம் ) தடிப்பும் பின்பு 5 செ.மீ. (2 அங்குலம்) தடிப்புடைய மண்ணும் அதன் மேல் போட்டு படை படை யாக இச்செயன் முறையினைச் செய்து கிடங்கினை மூடலாம்.

தும்புச் சோற்றியின் அளவு மண்வகையில் தங்கியிருக்கும்.

உதாரணமாக கிடங்கின் அளவு 2.4 மீற்றர் × 1.2 மீற்றர் × 1 மீற்றர் (8' × 4' × 3') இதன் அடிப்படையில் 12 கூடை தும்புச் சோற்றியும் மேற்படைக்கு 8 கூடை தும்புச் சோற்றியும் தேவை.

தும்புச்சோற்றியினை ஒரேதாக கிடங்கு முழுவதும் போடுவதும் இடையே மண் படை இல்லாது போடுவதும் தவிர்த்தல் வேண்டும்.

எதுவித காரணம் கொண்டும் தும்புச் சோற்றியினை நிலமட்டத்தில் குவித்தல் கூடாது.

இது கருவண்டு முட்டையிட்டு பெருகுவதற்கான காரணியாக அமைந்து விடும்.

குறிப்பு: தண்ணீர் தேங்கியுள்ள இடங்களில் தேங்காய் மட்டையோ அல்லது தும்புச் சோற்றியையோ தாட்டல் கூடாது.

மூடுபயிர்களைக் கிடங்கின் மேல் வளர விடலாம்.

கிடங்கு அகழியினை மழைகாலம், மண் ஈரலிப்பாக உள்ள நேரம் வெட்டுதல் வேண்டும்.

தேங்காய் மட்டை தாட்டல், தும்புச்சோற்றிக் கிடங்கில் இருத்தல் தொடரான செயன்முறையாக வருடா வருடம் செய்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த.(சா/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்


## கணிதம் பகுதி-I (பயிற்சிக்குரியது)

### பகுதி-A

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.


1. ஒரு தொலைக்காட்சிப் பொறியின் பெறுமானம் ரூ.35000 ஆகும். அதற்காக அறவிடப்படும் தீர்வைச் சதவீம் 6% எனின், அத் தீர்வைப் பணம் எவ்வளவு?

2. இங்கு உள்ள வலையைப் பயன்படுத்திச் செய்யத்தக்க திண்மத்தின் பெயர் யாது?



3. சுருக்குக : $\frac{6}{xy} \times \frac{y}{3}$ ; இங்கு $x, y \neq 0$.

4. தரப்பட்டுள்ள உருவில் குறிக்கப்பட்டுள்ள தகவல்களுக்கேற்ப $\hat{QPS}$ இன் பருமனைக் காண்க.





5. எந்த இரு அடுத்துவரும் முழு எண்களுக்கிடையே $\sqrt{15}$ இருக்கும்?

6. ஒரு பெட்டியில்சமனான 2நீலப் பேனைகளும்5 கறுப்புப்பேனைகளும் 3சிவப்புப்பேனைகளும் உள்ளன. அவற்றிலிருந்து எழுமாற்றாக வெளியே எடுக்கும்ஒரு பேனை சிவப்புப்பேனையாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

7. $x^2, 2x, 6y$ என்னும் அட்சரகணித உறுப்புக்களின் பொது மடங்குகளுள் சிறியதைக் காண்க.


8. தரப்பட்டுள்ள வட்டத்தின் மையம் $O$ ஆகும். x இன் பெறுமானத்தைக் காண்க.




9. p={x:x ஆனது ஒரு வர்க்க எண்ணாகும் $x \leq 16$} தொடை P ஐ அதன் மூலகங்களைக் கொண்டு எழுதுக.

10. மடக்கை வடிவத்தில் $7^2=49$ ஐ எழுதுக.


11. தரப்பட்டுள்ள வட்டத்தின் மையம் $O$ ஆகும் நாண் $AB$ இன் நீளத்தைக் காண்க.




12. ஒரு செவ்வட்ட உருளையின் ஆரை 7cm உம் உயரம் 20cm உம் ஆகும். அதன் வளைபரப்பின் பரப்பளவைக் காண்க.($\pi=22/7$ எனக் கொள்க)


13. பின்வரும் பெருக்கல் விருத்தியின் பொது விகிதத்தைக் காண்க.
1,3,9,27................

14. தரப்பட்டுள்ள உருவில் $AB=10cm$ எனின். பக்கம் AC இன் நீளத்தைக் காண்க.





15. புள்ளி (0.2) இனூடாகச் செல்வதும். படித்திறன் 3 ஆகவுமுள்ள நேர்கோட்டின் சமன்பாட்டை எழுதுக.


16. தரப்பட்டுள்ள உருவில் AP=CR, BC=QR ஆகும். $\Delta ABC$ உம் $\Delta PQR$ உம் ஒருங்கிசைக்கின்றன.
   1) $AB$ இற்கு நீளத்திற் சமமான பக்கத்தைப் பெயரிடுக.
   2) $\hat{BAC}$ இற்குப் பருமனிற் சமமான கோணம் யாது?




17. சமனிலி $2x-1<3$ இன் தீர்வுத் தொடையைச் சரியாகக் காட்டும் எண் கோட்டைத் தெரிந்தெடுத்து அதன் கீழ் ஒரு கோட்டினை வரைக.





18. சீரான கதியில் செல்லும் மோட்டார்கார் ஒன்றின் இயக்கத்தைக் கொண்டு வரையப்பட்ட தூர-நேர வரைபு உருவிற் காட்டப்பட்டுள்ளது. மோட்டார் வாகனத்தின் கதியைக் காண்க.





19. தீர்க்க: $4/x+3/x=14$

20. ABCD எனும் நாற்பக்கலானது இணைகரமாவதற்கு அதன் மூலை விட்டங்கள் மூலம் திருப்திப்படுத்த வேண்டிய தேவைப்பாட்டை எழுதுக.





21. நிலத்தில் ஒரு புள்ளி A யிலிருந்து ஒரு கொடிக்கம்பம் BC இன் உச்சி C ஐப் பார்க்கும்போது ஏற்றக் கோணம் $40^0$ ஆகும். அதனை வரிபடத்தில் குறிக்க.





22. எல்லா மெய் x இற்கும் $x^2+8x+7=(x+a)(x+b)$ ஆகுமாறு a,b ஆகியவற்றைக் காண்க.


23. ஒரு வகுப்பில் உள்ள மாணவர் குழு ஒன்று மொத்தப் புள்ளிகள் 40 ஆன வினாத்தாள் ஒன்றுக்குப் புள்ளிகளைப் பெற்றுள்ள விதம் இவ்வலையுரு வரையத்தில் காட்டப்பட்டுள்ளது. வினாத்தாளுக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை யாது?




24. தரப்பட்டுள்ள சாய்சதுரம் ABCD இல் $\hat{ABD}=50^0$ ஆகும். $\hat{BCD}$ இன் பருமனைக் காண்க.




25. தரப்பட்டுள்ள கோடு AB இலிருந்து 3cm தூரத்திலும் புள்ளி A இலிருந்து 5cm தூரத்திலும் உள்ள ஒரு புள்ளி P இன் அமைவைப் பெறுவதற்கு ஒரு மாணவனால் வரையப்பட்ட பரும்படிப் படத்தின் ஒரு பகுதி உருவில் காட்டப்பட்டுள்ளது. அதனைப் பூரணப்படுத்திப் புள்ளி P இன் அமைவைக் குறிக்க.




### பகுதி B

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலே விடை தருக.

01. மனிதனொருவர் பயணத்தின்போது செல்ல வேண்டிய தூரத்தில் 3/5 ஐப் புகையிரதத்திலும் எஞ்சிய தூரத்தில் 2/3 ஐப் பேருந்திலும் எஞ்சிய தூரத்தை நடந்தும் சென்றார்.

1) புகையிரதத்தில் சென்ற பின்னர் செல்வதற்கு எஞ்சியிருந்த தூரம் மொத்தத் தூரத்தின் என்ன பின்னமாகும்?


2) பேருந்தில் சென்ற தூரம் மொத்தத் தூரத்தின் என்ன பின்னமாகும்?

3) புகையிரதத்தில் சென்ற தூரத்திற்கும் நடந்து சென்ற தூரத்திற்குமிடையே உள்ள விகிதத்தை எளிய வடிவில் எழுதுக?

4) பயணத்தின் மொத்தத் தூரம் 30 கிலோமீற்றராகும். புகையிரதத்தில் சென்ற நேரம் 20 நிமிடங்களுக்கும் புகையிரதத்தின் சராசரிக் கதியைக் கிலோமீற்றர்/மணித்தியாலத்தில் தருக.

02. விட்டம் 14மீற்றரான ஓர் அரைவட்ட நிலப் பகுதி உருவிற் காணப்படுகின்றது. அதன் நீளம் 7 மீற்றர் ஆகவும் அகலம் 3 மீற்றர் ஆகவும் உள்ள ஒரு செவ்வகப் பகுதியில் மணல் பரப்பப்பட்டுள்ளது. எஞ்சிய பகுதியில் புல் வளர்க்கப்பட்டுள்ளது.

1) அரைவட்ட நிலப்பகுதியின் சுற்றளவு யாது?




2) புல் வளர்க்கப்பட்ட நிலப் பகுதியின் பரப்பளவு யாது?

3) புல் வளர்க்கப்பட்ட நிலப் பகுதியின் பரப்பளவுக்கும் மணல் பரப்பப்பட்டுள்ள நிலப் பகுதியின் பரப்பளவுக்குமிடையே உள்ள விகிதத்தைக் காண்க.

4) புல் வளர்க்கப்பட்ட நிலப் பகுதியின் பரப்பளவிற்குச் சமனான பரப்பளவைக் கொண்ட ஒரு செவ்வக நிலப் பகுதியை அதனுடன் சேர்க்க வேண்டியுள்ளது. அதன் ஓர் எல்லை AB ஆகவும் அரைவட்டப் பகுதி நிலத்திற்கு வெளியே இருக்குமாறும் அளவீடுகளுடன் பரும்படிப் படத்தை இந்த உருவத்திலேயே வரைந்து காட்டுக.

03. a) ஒரு நிதி நிறுவகம் 12% ஆண்டு எளிய வட்டியின் கீழ் கடனை வழங்குகின்றது. மோகன் அந் நிறுவனத்திலிருந்து ரூ. 80 000 கடனை 3 ஆண்டுகளின் இறுதியில் கடனிலிருந்து விடுபடுவதாக எதிர்பார்த்து, பெற்றார்.

1) ஓர் ஆண்டில் செலுத்த வேண்டிய வட்டிப் பணத்தைக் காண்க

2) 3 ஆண்டுகளின் இறுதியில் கடனிலிருந்து விடுபடுவதற்குச் செலுத்த வேண்டிய மொத்தப் பணத்தைக் காண்க.

3) இந்நிறுவனத்திலிருந்து கடனைப்பெறாமல்வேறொரு நிறுவகத்திலிருந்து 4 ஆண்டுகளில் செலுத்துவதற்கு இக்கடனைப் பெற்றால், ரூ 32 000 வட்டியைச் செலுத்த வேண்டும். இந்த இரண்டாம் நிறுவகம் அறவிடும் ஆண்டு எளிய வட்டி வீதம் யாது?

16 ஆம் பக்கம் பார்க்க...


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கணிதம் பகுதி-I தொடர்ச்சி...

(b) 10 நாட்களில் ஒரு மதிலைக் கட்டுவதற்கு 12 மனிதர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால் முதல் 10 நாட்களில் 6 மனிதர்கள் மாத்திரம் வேலை செய்தனர். மேலும் 4 நாட்களில் மதிலைக் கட்டி முடித்தல் வேண்டும். அதற்காக அந் நான்கு நாட்களில் எத்தனை மேலதிக மனிதர்களை ஈடுபடுத்தல் வேண்டும்?

04. 7 சர்வசம பாத்திரங்களில் 3 இல் சிவப்புப்பச்சை அரிசியும் எஞ்சிய பாத்திரங்களில் வெள்ளைப் பச்சை அரிசியும் உள்ளன.


I)நிமலன் இப்பாத்திரங்களிடையே எழுமாற்றாக ஒரு பாத்திரத்தைத் தெரிந்தெடுத்து அதிலிருந்து ஓர் அரிசிப் பையை வெளியே எடுக்கின்றான். அச் சந்தர்ப்பத்தின் பேறுகளுக்கேற்ப ஒரு பூரணமற்ற மர வரிப்படம் கீழே தரப்பட்டுள்ளது. அதனைப் பூரணப்படுத்துக.




II) நிமலனுக்குப் பின்னால் கமலாவும் மேற்குறித்த பாத்திரங்களிடையே எழுமாற்றாக ஒரு பாத்திரத்தைத் தெரிந்தெடுத்து அதிலிருந்து ஓர் அரிசிப் பையை வெளியே எடுக்கின்ற அச்சந்தர்ப்பத்திற்கு உரிய பேறுகளை உள்ளடக்கி மேற்குறித்த மர வரிப்படத்தை விரிபுபடுத்துக.


III)நிமலனுக்கு வெள்ளைப் பச்சை அரிசியும் கமலாவுக்குச் சிவப்பு பச்சையரிசியும் கிடைப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.

IV)நிமலன், கமலா ஆகிய இருவரும் பாத்திரங்களிலிருந்து அரிசியை வெளியே எடுப்பதற்கு உரிய மாதிரி வெளி நெய்யரியில் காணப்படுகின்றது. அவ்விருவரும் ஒரே பாத்திரத்திலிருந்து அரிசியை வெளியே எடுப்பதற்கான நிகழ்ச்சியை நெய்யரியில் குறிக்க.




V)இருவரும் ஒரே பாத்திரத்தை தெரிவு செய்வதற்கான நிகழ்தகவை நெய்யரியில் இருந்து காண்க.

05.சித்திரம், நடனம், சங்கீதம், நாடகம், இலக்கியம் என்னும் அழகியற் பாடங்களுக்காக ஒரு வகுப்பில் உள்ள மாணவர்கள் பகிரப்பட்டுள்ள விதம் ஒரு பூரணமற்ற வட்ட வரைபினால் காட்டப்பட்டுள்ளது.




I) சங்கீதத்தை தெரிந்தெடுத்த மாணவர்களின் எண்ணிக்கை சித்திரத்தைத் தெரிந்தெடுத்த மாணவர் எண்ணிக்கையின் அரைவாசியாகும். சங்கீதத்தைத் தெரிந்தெடுத்த மாணவர்களை வகைக்குறிக்கும் ஆரைச் சிறையின் மையக் கோணம் யாது?

II)நாடகத்தைத் தெரிந்தெடுத்த மாணவர்களை வகை குறிக்கும் ஆரைச்சிறையின் மையக் கோணம் $120^0$ ஆகும். இலக்கியத்தைத் தெரிந்தெடுத்த மாணவர்களை வகைக்குறிக்கும் ஆரைச்சிறையின் மையக் கோணத்தின் பருமனைக் கண்டு அதனை உரிய பிரதேசத்தில் குறிக்க.

III) 8 மாணவர்கள் நடனத்தை தெரிந்தெடுப்பின், வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?

IV) குறித்த இரு பாடங்களுக்குரிய மாணவர்களின் எண்ணிக்கை ஏனைய மூன்று பாடங்களுக்கு உரிய மாணவர்களின் எண்ணிக்கைக்குச் சமம். அவ்விரு பாடங்களும் எவை?

## பகுதி II

### பகுதி A

ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

01. a) ஒரு வீட்டின் மதிப்பிட்ட வருமானம் ரூ.48 000 ஆகும்., அதற்கான இறை வரியாக ஆண்டுதோறும் 5% பணம் அறவிடப்படுகிறது. ஒரு காலாண்டிற்காகச் செலுத்த வேண்டிய இறை வரியைக் காண்க.

b)

1. சுனில் ரூ. 60 000 ஐ 8% ஆண்டுக் கூட்டு வட்டி வீதத்தை வழங்கும் ஒரு நிறுவகத்தில் வைப்புச் செய்தார். அவ்வாறு வைப்புச் செய்தால், இரு ஆண்டுகளின் இறுதியில் அவருக்குக் கிடைக்கும் மொத்தப் பணத்தைக் காண்க.
2. நிறுவகத்தில் வைப்புச் செய்வதற்கு இருந்த பணத்தை ஒரு பங்கிற்கு ரூ.1.50 வீதம் ஆண்டுப் பங்கிலாபத்தைச் செலுத்தும், ஒரு பங்கின் சந்தை விலை ரூ.15 ஆன பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு 2 ஆண்டுகளுக்காக ஒரு கம்பனியில் முதலீடு செய்யலாம். அவருக்குக் கூட்டு வட்டிக்குப் பணத்தை முதலீடு செய்வதா? அல்லது கம்பனியில் முதலீடு செய்வதா அனுகூலமானது? என்பதைக் காரணங்களுடன் காட்டுக.
3. மேற்குறித்த பணத்தை அதே கம்பனியில் இரு ஆண்டுகளுக்கு முதலீடு செய்வதால் அவர் பெறும் வருமானச் சதவீதமானது கம்பனி எவ்வளவு பங்குலாபத்தைச் செலுத்தினால் 30% ஆக இருக்கும்.

02.சார்பு $y=x^2-4x-3$ இன் x இன் சில பெறுமானங்களை ஒத்த y இன் பெறுமானங்கள் இடம்பெறும் ஓர் அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| $x$ | −1 | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|---|
| $y$ | 2 | −3 | −6 | −7 | −6 | −3 | 2 |

I) உகந்த ஓர் அளவிடையைப் பயன்படுத்திச் சார்பு $y=x^2-4x-3$ இன் வரைபை வரைக.

II)சார்பின் இழிவுப் பெறுமானத்தை எழுதுக.

III)ஆயிடை $-6<y<0$ இல் சார்பின் பெறுமானம் அதிகரிக்கும் x இன் பெறுமான ஆயிடையை எழுதுக.

IV)$x^2-4x-3=0$ இன் மூலகங்களைக் கண்டு, அதிலிருந்து $\sqrt{7}$ இன் பெறுமானத்தை கிட்டிய முதலாம் தசம தானத்திற்குப் பெறுக.

V)ஓர் உகந்த நேர்கோட்டினை வரைவதன் மூலம் வரைபு மீது x ஆள்கூறு y ஆள்கூறின் இருமடங்காக சமமாக இருக்கும் ஒரு புள்ளியின் ஆள்கூறுகளை எழுதுக.

03. a) பின்வரும் ஒருங்கமை சமன்பாட்டுச் சோடியைத் தீர்க்க.

$3x+y=11$

$2x-5y=-4$

b) A,B என்னும் இரு வர்த்தக நிலையங்களில் ஐஸ்கிறீம், யோகட் ஆகியவற்றின் விலைகள்முறையே கீழே தரப்பட்டுள்ளன.

வர்த்தக நிலையம் A:ரூ. 40, ரூ. 30


வர்த்தக நிலையம் B:ரூ. 38, ரூ. 35

I) வரிசை 2x2 ஆன ஒரு தாயத்தில் நிரைகளினால் ஒரு வர்த்தக நிலையம் காட்டப்படுமாறு மேற்குறித்த தகவல்களை வகைக் குறிக்க. அதனை P எனப் பெயரிடுக.

II) ஒரு விருந்துபசாரத்திற்காக 20 ஐஸ்கிறீமும் 30 யோகட்டும் தேவை. இந்த அளவுகளை வரிசை 1x2 ஆகவுள்ள ஒரு தாயத்தில் காட்டி, அவ்விரு தாயங்களினது பெருக்கத்தை பெறுக.

III) அப்பெருக்கத்தைக் கொண்டு 20 ஐஸ்கிறீமையும் 30 யோகட்டையும் கொள்வனவு செய்தல் அனுகூலமானதாக இருக்கும் வர்த்தக நிலையத்தைக் காரணங்களுடன் எழுதுக.

04. உருவில் H இனால் ஒரு துறைமுகம் L இனால் ஒரு கலங்கரைவிளக்கமும் காட்டப்பட்டுள்ளன. ஒரு சந்தர்ப்பத்தில் கப்பல் A, கப்பல் B, துறைமுகம் H ஆகியன ஒரு கோட்டில் உள்ளன. அச்சந்தர்ப்பத்தில் கப்பல் A ஆனது துறைமுகம் H இலிருந்து $040^0$ திசைகோளிலும் 4.5km தூரத்திலும் கலங்கரைவிளக்கம் L ஆனது கப்பல் A இலிருந்து $110^0$ திசைகோளிலும் 3km தூரத்திலும் உள்ளன. மேலும் அச் சந்தர்ப்பத்தில் $A\hat{B}L=90^0$




I) உருவைப் பிரதிசெய்து மேற்குறித்த தரவுகளை அதில் சேர்க்க.

II) திரிகோணகணித அட்டவணைகளைப் பயன்படுத்தி $B\hat{H}L$ இன் பெறுமானத்தைக் காண்க.

05.ஒரு பேருந்தில் நகரம் A இலிருந்து நகரம் B இற்கு ஒவ்வொரு நாளும் சென்ற பயணிகளின் எண்ணிக்கை பற்றி 30 நாட்கள் உள்ள ஒரு மாதத்தில் பெற்ற தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வகுப்பு ஆயிடை (பயணிகளின் எண்ணிக்கை) | மீடிறன் (நாட்களின் எண்ணிக்கை) |
|---|---|
| 5 – 9 | 2 |
| 10 – 14 | 5 |
| 15 – 19 | 4 |
| 20 – 24 | 6 |
| 25 – 29 | 8 |
| 30 – 34 | 3 |
| 35 – 39 | 2 |


I) தரப்பட்டுள்ள தரவுகளுக்கேற்ப ஒரு நாளில் A யிலிருந்து B யிற்குச் சென்றதாக எதிர்பார்க்கத்தக்க கூடுதலான பயணிகளின் எண்ணிக்கை யாது?

II) ஒரு நாளில் A இலிருந்து B யிற்குச் சென்ற பயணிகளின் எண்ணிக்கையின் இடையைக் கணிக்க.

III) இத்தகைய 03 மாதங்களில் பேருந்தில் சென்ற பயணிகளில் 3/5 மாத்திரம் A இலிருந்து B இற்குச் சென்றவர்களாவர். இம் மூன்று மாதங்களிலும் பேருந்தில் சென்ற பயணிகளின் எண்ணிக்கை யாது?

IV) A இலிருந்து B இற்குச் செல்லும் ஒரு பயணியின் பயணக் கட்டணம் ரூ.30 உம் ஏனைய ஒரு பயணியின் பயணக் கட்டணம் ரூ.15 உம் ஆகும். மூன்று மாதங்களில் A இலிருந்து B இற்குச் செல்லும் பயணிகளிடமிருந்து கிடைக்கும் வருமானமானது ஏனைய பயணிகளிடமிருந்து கிடைக்கும் வருமானத்தின் மும்மடங்கெனக் காட்டுக.

06.




உருவில் உள்ள சரிவகம் ABCD இல் AB=(x+3)cm, DC=(2x-3)cm, BE=EC ஆகும். சரிவகத்தின் பரப்பளவு $15cm^2$ எனின் DC யின் நீளத்தைக் கிட்டிய முதல் தசம தானத்திற்குக் காண்க.

($\sqrt{19}$ =4.36 எனக் கொள்க)

### பகுதி-B

ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.


07.ஓர் அலங்காரத்திற்காகக் கீதா றிபன் பட்டிகளை முதல் துண்டு 20cm ஆகவும் இரண்டாம் துண்டு 25cm ஆகவும் மூன்றாம் துண்டு 30cm ஆகவும் இருக்குமாறு உள்ள கோலத்திற்கு ஏற்ப வெட்டினார். அலங்காரத்திற்காகக் கீதாவிற்குத் தேவையான மிகவும் நீளமான றிபன் பட்டித்துண்டு 95cm நீளமுள்ளது.

I) அவ்வலங்காரத்திற்கு 10 மீற்றர் நீளமுள்ள றிபன் பட்டிச் சுருள் போதுமானதெனக் காரணங்களுடன் காட்டுக.

II) அலங்காரத்திற்காக மேற்குறித்த வெட்டப்படும் மிகவும் நீளமான றிபன் பட்டித் துண்டு மேற்குறித்த நீளமான துண்டின் இருமடங்காகும். அவ்வாறு இருப்பதற்கு 10 மீற்றர் வீதம் நீளமுள்ள இரு றிபன் பட்டிச் சுருள்கள் போதுமானவையா எனக் கணித்துக் காட்டுக.

08.பின்வரும் அமைப்புகளுக்காக ஒரு cm/mm அளவிடையுள்ள ஒரு நேர் விளிம்பையும் கவராயத்தையும்மாத்திரம்பயன்படுத்துக. உங்கள் அமைப்புக்கோடுகளை தெளிவாக காட்டுக.

I) தரப்பட்டுள்ள பரும்படிப்படத்தில் உள்ள அளவீடுகளுக்கேற்ப முக்கோணி ABC ஐ அமைக்க.




II) A இலிருந்து BC இற்கு ஒரு செங்குத்து கோட்டினை அமைத்து அது BC ஐச் சந்திக்கும் புள்ளியை D என பெயரிடுக.

III) A,C,D ஆகிய புள்ளிகளினூடாகச் செல்லும் வட்டத்தை அமைக்க

IV) அவ் வட்டத்திற்கு C யில் ஒரு தொடலியை அமைத்து அது நீட்டப்பட்ட AD ஐ சந்திக்கும் புள்ளியை X எனப் பெயரிடுக.

V) $A\hat{X}C=A\hat{C}B$ எனக் காட்டுக.

மிகுதி நாளை வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மாமன்றம் நடத்தும் மாருதம்-2016




தமிழறிவையும் ஆற்றலையும் தமிழ்ப்பற்றுடையதொரு சமுதாயத்தையும் உருவாக்க வேண்டும் என்ற நல் நோக்கத்தை அடிப்படையாக கொண்டு, தங்களாலான பங்களிப்பை கலை இலக்கிய துறைக்கு ஆற்ற வேண்டும் என்ற எண்ணாங்களைக் கொண்ட இளம கலை இலக்கிய ஆர்வலர்களின் ஒன்றிணைவில், அவர்களின் உணர்வுகளின் வடிவமாக உருப்பெற்ற தமிழ்மாமன்றம் வவுனியா மாவட்டத்திலே 2013 முதல் தமிழ் மொழி, இலக்கிய மற்றும் கலைத்துறைகளில் பலதரப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது.

பிரதேச கலை இலக்கிய ரசனை மேம்பாட்டினை ஏற்படுத்தும் பொருட்டு 2014 முதல் ஒவ்வொரு வருடமும் முத்தமிழுக்கும் விழா எடுத்து வருகின்றது.

2014 இல் இயல் விழா என்னும் பெயரிலும் 2015 இல் தமிழ் மாருதம் 2015 எனும் பெயரிலும் ஒரு நாள் விழாவாக இடம்பெற்றுக் கலை இலக்கிய ஆர்வலர்களின் பாராட்டைப் பெற்ற இவ்விழாவானது.இந்த ஆண்டு தமிழ் மாருதம் 2016 என்னும் பெயரில், இரு நாட்கள் இடம்பெறும் விழாவாக வவுனியா நகரசபைக் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. செப்டெம்பர் 3ஆம் திகதி மாலை 4 மணிக்கு வவுனியா பொது நூலக சரஸ்வதி சிலையில் இருந்து ஊர்வலமாக ஆரம்பிக்கும் இந்நிகழ்வு, செப்டெம்பர் 4ஆம் திகதி காலை மாலை இடம்பெறவுள்ளது. காலை நிகழ்வுகள் 9 மணிக்கு ஆரம்பமாக பிற்பகல் 12.30க்கு நிறைவு பெறுவதுடன், மாலை நிகழ்வுகள் மாலை 4 இற்கு ஆரம்பமாகி 8.30 மணிக்கு நிறைவு பெறும் வகையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் பூபாலசிங்கம் புத்தக சாலையின் பங்களிப்புடனான புத்தக மலிவு விற்பனைக் கண்காட்சியும், சித்திரக் கண்காட்சியும் இணைந்ததாக இவ்விழா சிறக்கவுள்ளது. வவுனியா, கொழும்பு, யாழ்ப்பாணம் என இலங்கையின் பல பாகங்களில் இருந்து சிறப்புப் பேச்சாளர்கள் பங்கேற்கிறார்கள். கம்பவாரிதி. இ. ஜெயராஜ் சிறப்புப் பேச்சாளராக நிகழ்வைப் பெருமைப்படுத்துகிறார். அத்துடன் பேராசிரியர் தி. வேல்நம்பி, சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல், கலாநிதி. செ. சேதுராஜா, அ. வாசுதேவா போன்ற விசேட பேச்சாளர்களும், கவிஞர் ச.முகுந்தனும் யாழ்ப்பாணத்திலிருந்து பங்கேற்கிறார்கள். தமிழ்மணி மேழிக்குமரன், இலக்கியச்சுடர் ஜ. கதிர்காமசேகரன், பண்டிதர் வீ. பிரதீபன், வித்தியா ரத்னா சி. வரதராஜன், என். கே. கஜரூபன் போன்ற சிறப்புப் பேச்சாளர்கள் வவுனியாவில் இருந்து பங்கேற்கிறார்கள். இவர்கள் அனைவரின் ஒன்றிணைவிலும் வழக்காடு மன்றம், பட்டி மன்றம், சுழலும் சொற்போர், கவியரங்கம் போன்ற இயற்றமிழ் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

'சிதம்பரம் இசைமைந்தன்', நயினை. ப. சிவமைந்தன் குழுவினர் வழங்கும் இசை அரங்கோடு, வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவர்களின் நாட்டார் பாடலும், வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய மாணவி அ. கவிநயாவின் இசையும் அசைவும் ஆகியன இசைத்தமிழ் நிகழ்வுகளாக இடம் பெறவுள்ளது. "சிதம்பரேஸ்வரம் நடனாலயம்" வழங்கும் "தமிழ் மூச்சு" என்னும் நாட்டிய அளிக்கையும், "பாரத நர்த்தனாலயா" மாணவிகளின் கலச நடனமும் நிகழ்வைச் சிறப்பிக்கவுள்ளது. "கலைநிலாக் கலையகம்" வழங்கும்"மறந்துபோன சுவடுகள்" நாடகம் நாடகத்தமிழ் நிகழ்வாக இடம் பெறவுள்ளது. வன்னிப்பிரதேசத்தின் மாபெரும் கலை இலக்கிய நிகழ்வான தமிழ் மாருதம் 2016 இலே ஆர்வம் கொண்ட அனைவரையும் பங்கேற்று நிகழ்வினைச் சிறப்பிக்குமாறு தமிழ் மாமன்றத்தினர் தாழ்மையுடன் அழைக்கிறார்கள்.

"தமிழால் வையகத்தலைமை கொள்வோம்"

**Dr.செல்வராசா மதுரன்,**
**மருத்துவ சிகிச்சைப்பிரிவு,**
**ஓமந்தை,வவுனியா.**

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 823

ராஜீப்




ஆரவி




ஜெசி




சோசன்




சங்கர்




சிந்து




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்கில் கோயில்கள் உடைக்கப்பட்ட போது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை

## அமைச்சர் ராஜித குற்றச்சாட்டு

**முன்னைய ஆட்சிக்காலத்தில் தெற்கில் பல இந்து கோயில்களும் கிறிஸ்தவ தேவாலயங்களும் உடைக்கப்பட்டன. தாக்குதல் நடத்தப்பட்டது. ஆனால் அப்போது அந்த சம்பவங்கள் தொடர்பில் எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன குற்றம் சாட்டியுள்ளார்.**

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கேள்வி:- கிளிநொச்சியில் புத்தர் சிலையொன்று உடைக்கப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பில் அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் கூறப்படுகின்றதே?

பதில் :- அது தொடர்பில் ஆராய்ந்து பார்க்கலாம். ஆனால் ஒரு முக்கிய விடயத்தையும் குறிப்பிட வேண்டும். அதாவது முன்னைய ஆட்சிக்காலத்தில் தெற்கில் பல கோயில்களும் கிறிஸ்தவ ஆலயங்களும் உடைக்கப்பட்டன. தாக்குதல் நடத்தப்பட்டன. ஆனால் அப்போது இந்த சம்பவங்கள் தொடர்பில் எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அது தொடர்பில் யாரும் பேசுவதில்லை. ஏன் என்று தெரியவில்லை.

கேள்வி :- கிளிநொச்சியில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கின்றதே?

பதில் :- தற்போது நாங்கள் நடவடிக்கை எடுப்போம். ஆனால் கடந்த காலங்களில் தெற்கில் இந்துக் கோயில்களும் கிறிஸ்தவ ஆலயங்களும் தாக்கப்பட்ட போது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்பதைக் குறிப்பிட்டுக் கூறுகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# SLS தரநிர்ணய தலைக்கவசங்களுக்கான சட்டம் நேற்று முதல் கட்டாய அமுலாக்கம்

இலங்கை தர நிர்ணயம் கொண்ட மோட்டார் சைக்கிள் தலைக்கவசங்கள் நேற்று முதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாகன விபத்துக்களால் ஏற்படும் மரணங்களை குறைக்கும் நோக்குடன் இந்த சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக நுகர்வோர் சேவை அதிகாரிகளின் தலைவர் ஹசித திலகரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த சட்டமானது பல வருடங்களுக்கு முதலே வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டதாகவும், தலைக்கவசம் அணியாமல் நாளொன்றிற்கு 7 அல்லது 8 மரணங்கள் சம்பவிப்பதாகவும் தெரிவித்துள்ள அவர், இதன் காரணமாகவே தர நிர்ணயம் கொண்ட தலைக்கவசங்களை மோட்டார் சைக்கிள் செலுத்துபவர்கள் பயன்படுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கமைய இலங்கைத்தர நிர்ணய சான்றிதழ் அல்லாத தலைக்கவசங்கள் விற்பனை தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அவ்வாறான தலைக்கவசங்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7-10)



யாழ் .கரவெட்டிப் பகுதியிலுள்ள மூன்று ஆலயங்களிற்கு வடமாகாண சபை உறுப்பினர் எஸ். அகிலதாஸினால் தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலாளர் தலைமையில் அண்மையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பெற்றியாட்டுப்பிள்ளையார் கோவில் ,கலட்டி பிள்ளையார் கோவில் ,கரணவாய் முருகன் கோயில் ஆகியவற்றிற்கு தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன.

வடமாகாண சபையின் 2016 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டில் இருந்து இவ் நிதி வழங்கப்பட்டது. (இ-60)

# தமிழ் சினிமா வரலாறு

## "மிஸ்ஸியம்மா "வில் நடித்தபோது ஜெமினிகணேசன்-சாவித்திரி காதல்

**243**

இரண்டு மாதம் வரைதான் இப்படி கணவன் மனைவியாக நடிப்பது என்பது அவர்களுக்கு இடையேயான ஒப்பந்தம். ஆனால் இருவருடைய இதயங்களும் மெல்ல மெல்ல நெருங்குகின்றன. பல திருப்பங்களுடனும் நகைச்சுவை சம்பவங்களுடனும் கதை விறு விறுப்பாகச் செல்கிறது.

கடைசியில் காணாமற் போன ஜமீன்தாரின் மகள் தான் மேரி என்று தெரிய வருகிறது. மேரியும் பாலுவும் ஒன்று சேருகிறார்கள்.

1954 நவம்பர் மாதம் படப்பிடிப்பு தொடங்கி ஒரே மாதத்தில் படம் தயாராகி விட்டது. 1955 பொங்கலையொட்டி ஜனவரி 11ஆம் திகதி படம் ரிலீஸ் ஆகியது.

படத்தில் ஜெமிகணேசனும் சாவித்திரியும் வெகு இயற்கையாக நடித்திருந்தார்கள். எஸ்.வி. ரங்காராவ், எம்.என்.நம்பியார், கே.ஏ.தங்கவேலு, கே.சாரங்கபாணி ஜமுனா ஆகியோருடைய நடிப்பும் சிறப்பாக அமைந்தது.

படத்தின் வெற்றிக்கு பாடல்களும் துணை நின்றன. வாராயோ வெண்ணிலாவே, பிருந்தாவனமும் நந்தகுமாரனும், மாயமே நானறியேன், தெரிந்து சொன்னும் பெண்ணே முதலிய பாடல்கள் (ஏ.எம். ராஜா,லீலா ஆகியோர் குரலில்) ஹிட்டாக அமைந்தன.

தரமான படம், குடும்பப் பாங்கான படம் என்று ரசிகர்களாலும் பாராட்டப்பட்ட இப்படம் பல தியட்டர்களில் நூறு நாட்களைக் கடந்து ஓடியது.

பிறகு இப்படம் தெலுங்கு, இந்தி ஆகிய மொழிகளிலும் தயாராகியது.

இந்தியில் இப்படத்தை மிஸ்மேரி என்ற பெயரில் ஏவி.எம்.தயாரித்தது.

இந்தியிலும் கதாநாயகனாக ஜெமினிகணேசன் நடித்தார். கதாநாயகியாக (சாவித்திரி வேடத்தில்) மீனா குமாரி நடித்தார். இதுவும் வெற்றிப்படமாக அமைந்தது.

தெலுங்கு படத்தில் ஜெமினிக்கு பதில் என்.டி.ராமராவ் நடித்தார்.

மிஸ்ஸியம்மாவில் நடித்தபோது ஜெமினிகணேசனும் சாவித்திரியும் நெருங்கிப் பழகினார்கள். படத்தில் அவர்களுடைய காதல் எப்படி மெல்ல மெல்ல வளர்ந்ததோ அதேபோல் நிஜ வாழ்க்கையிலும் காதல் வளர்ந்தது.

### கணவனே கண்கண்ட தெய்வம்

இதே ஆண்டில் நாராயணன் கம்பனி தயாரித்த படம்



கணவனே கண்கண்ட தெய்வம்.

இது ராஜா-ராணி கதை. கதாநாயகன் விஜயன் ஒரு ராஜகுமாரன். நாககன்னியின் சாபத்தால் குரூபியாக மாறுகிறான். அவன் ஒரு பெண்ணை திருமணம் செய்து ஒரு மகனைப் பெற்று அவன் பாதாள குகைக்குச் சென்று ஒரு மணியைக் கொண்டு வந்தால் தான் மீண்டும் சுயரூபத்தை அடைய முடியும். தான் யார் என்பதை யாரிடமாவது சொன்னால் விஜயன் தலை வெடித்து இறந்து விடுவான்.

இந்த சாபத்தோடு வரும் ஜெமினிகணேசன் தான் காதலித்த இளவரசியை (அஞ்சலிதேவி) மணந்து குழந்தையையும் பெற்று சாபவிமோசனம் அடைந்து சுயரூபத்தை அடைவார்.

இதில் கதாநாயகன் வேடத்துக்கு ஜெமினிகணேசன் தேர்ந்தெடுக்கப்பட்டதில் ஒரு கதையே இருக்கிறது.

அழகான தோற்றம் கொண்ட ஜெமினிகணேசன் குரூபி வேடத்தில் நன்றாக நடிக்க முடியுமா என்று நாராயணன் கம்பனி நாராயண அய்யங்காருக்கு சந்தேகம் இருந்தது. அதனால் அவருடைய நம்பிக்கையைப் பெற ஜெமினிகணேசன் ஒரு யுக்தி செய்தார். கூன் விழுந்தவன் போல் மேக்கப் போட்டுக்கொண்டு நாராயண அய்யங்கார் வீட்டுக்குச் சென்றார். அவர் முன் போய் நின்றார்.

அவரைப் பிச்சைக்காரன் என்று நினைத்த நாராயணன் அய்யங்கார் உன்னை யார் உள்ளே விட்டது? போ போ! என்று விரட்டி அடித்தார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இக்கட்டான காலகட்டத்திலும் மக்களோடு வாழ்ந்தவர் தர்மலிங்கம்

உலக வரலாற்றில் உன்னதமான இலட்சியத்திற்காக அயராது உழைத்த பல பெரியார்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். அந்த வரிசையில் இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் அரசியல் போராட்ட வரலாற்றில் இருபத்தைந்து வருடங்களுக்கு மேல் மறக்க முடியாத பங்களிப்புச் செய்து மக்களோடு மக்களாக நின்று இன விடுதலைப் போராட்டங்களை முன்னெடுத்துச் சென்ற இலங்கைத் தமிழரசுக்கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணியின் உடுவில், மானிப்பாய் தொகுதிகளின் நாடாளுமன்ற உறுப்பினராக இருபத்திமூன்று வருடங்கள் சேவையாற்றி சுட்டுக் கொல்லப்பட்ட அமரர் விஸ்வநாதர் தர்மலிங்கத்தின் 31 ஆவது சிரார்த்த தினம் (02.09.2016) இன்றாகும்.

செல்வச் சிறப்புமிக்க மிகவும் வசதியான குடும்பத்தில் 1918 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 5 ஆம் திகதி பிறந்த ''தர்மர்'' பண்டைய இராசதானியும் புதை பொருள் சிறப்புமிக்க கந்தரோடைக் கிராமத்தில் வாழ்ந்து வந்தார். இவரின் தந்தையார் விஸ்வநாதர் அமெரிக்க பல்கலைக் கழகத்தில் முதுமாணிப் பட்டம் பெற்ற கல்விமானாகத் திகழ்ந்தவர். அமரர் "தர்மர்" சிறு வயதிலேயே தனது தந்தையாரையும் தொடர்ந்து தனது தாயாரையும் இழந்தபடியினால் இவரின் பெரிய தந்தையாரான மாவட்ட சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் சி.சுப்பிரமணியம் இவருக்கு தாயாகவும் தந்தையாகவும் இருந்து கண்ணை இமை காப்பது போல தர்மரை வளர்த்தெடுத்து நல்ல கல்வி புகட்டி அவருக்கு நெருங்கிய உறவினரான கன்னாசும் வேலும் மயிலும்-விசாலாட்சி பிள்ளை தம்பதியரின் புதல்வி கமலாம்பிகையை திருமணம் செய்து வைத்தார். இத் திருமணத்தால் சித்திரலேகா, சித்தார்த்தன் (இன்றைய நாடாளுமன்ற உறுப்பினர்) என்ற இரு செல்வங்களைப் பெற்றெடுத் தார். துரதிர்ஷ்டவசமாக மனைவி கமலாம்பிகை காலமாகிய பின் தனது இரு செல்வங்களை வளர்த்தெடுக்க மனைவியின் இளைய சகோதரியான சரஸ்வதியை பெரியோர்களின் ஆசியுடன் திருமணம் செய்து கந்தரோடைக் கிராமத்தில் வாழ்ந்து வரும் போது உள்ளூராட்சி அரசியலில் ஈடுபட்டு உடுவில் கிராமசபையின் தலைவராக போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டு பல வருடங்கள் பதவி வகித்தார்.

1960 ஆம் ஆண்டு மார்ச் மாதம் " உடுவில்" என்ற பெயரில் புதிய தொகுதி உருவாக்கப்பட்டது. அப்பொழுது அத் தொகுதியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளராக வருவதற்கு பல பெரியோர்கள் விண்ணப்பித்திருந்தார்கள். ஆனால் வேட்பாளர் தெரிவு தந்தை செல்வா தலைமையிலான குழு "தர்மர்" தான் உடுவில் தொகுதிக்கு பொருத்தமான வேட்பாளர் என தெரிவு செய்தது. அத்தேர்தலில் தர்மர் பல்லாயிரக்கணக்கான வாக்குகளால் வெற்றி வாகை சூடினார்.

இத்தேர்தலில் இவருடன் பல கல்விமான்களான ஹன்டி பேரின்பநாயகம், கூட்டுறவாளர் அதிபர் வி.வீரசிங்கம், பிரபல சட்டத்தரணி ஆசீர்வாதம் போன்றோரும் போட்டியிட்டு தோல்வியைத் தழுவினர். அன்று தொடக்கம் உடுவில் மற்றும் மானிப்பாய் தொகுதிகளின் நாடாளுமன்ற உறுப்பினராக தொடர்ச்சியாக இருபத்து மூன்று ஆண்டுகள் மக்கள் சேவையாற்றி 1983 ஆம் ஆண்டு ஆறாவது அரசியலமைப்பு திருத்தச் சட்ட மூலத்துக்கு அமைய சத்தியம் செய்ய மறுத்ததனால் அவரின் பதவி பறிபோனது.

1956 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை இலங்கைத் தமிழரசுக் கட்சி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மையான ஆசனங்களைக் கைப்பற்றி வந்துள்ளது. ஆரம்பகாலத்தில் சமஷ்டி என்பது பிரிவினை என்றும் தமிழரசுக்கட்சி பிரிவினைவாதக் கட்சியென்றும் அவர்கள் வகுப்புவாதிகள் என்றும் சிங்களத் தலைவர்கள் பிரசாரம் செய்த பொழுதிலும் கூட சிங்களத் தலைவர்கள் "தர்மர்" மீது பெருமதிப்பு வைத்திருந்தார்கள்.

அதன் காரணமாக இவரை ஆபிரிக்க, ஆசிய விடுதலை இயக்கத்தின் உபதலைவராகவும் இலங்கை- சோவியத் நட்புறவுச் சங்கத்தின் அகில இலங்கைக் கிளையின் உபதலைவராகவும் மற்றும் பல இடதுசாரி இயக்கங்களில் இவரை உறுப்பினராக்கி கௌரவித்துள்ளார்கள்.



அமரர் "தர்மர்" சொல்லிலும் செயலிலும் எவரையுமே புண்படுத்தாதவர். அவரின் பேச்சிலும் எழுத்திலும் தொனிக்கும் நயத்தக்க நாகரிகத்தை நினைத்துப் பார்க்கிறேன். அவர் அரசியல் கூட்டங்களில் தனது கட்சியின் கொள்கைகளை சாதாரண மக்கள் விளங்கக் கூடியதாக மிகவும் ஆணித்தரமாக எடுத்துரைப்பார். சகல தரப்பினர்களோடும் அன்பாகவும் பண்பாகவும் பழகுபவர். கிராம மட்டத்தில் அவர் காட்சிக்கு எளியவராகவும் எல்லா மக்களும் மனம் திறந்து பேசக் கூடியவராகவும் இருந்தார்.

1970 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தமிழரசுக் கட்சியின் முக்கிய தலைவரான அ. அமிர்தலிங்கம் வட்டுக் கோட்டைத் தொகுதியில் தோல்வியைத் தழுவினார். அவரின் பாராளுமன்ற வெற்றிடத்தை "தர்மர்" பொறுப்பேற்று சகல விவாதங்களிலும் பங்குபற்றி தனது வாதத் திறமையை வெளிப்படுத்தினார். 1971 ஆம் ஆண்டு அரசியல் நிர்ணய சபைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் சமஷ்டி ஆட்சிக்கான திட்ட வரைபு சமர்ப்பிக்கும் பொறுப்பு இவரிடமே விடப்பட்டது. இந்த யாப்பு அமைப்பு தர்மரின் ஓயா உழைப்பின் வெளிப்பாடு. அவரின் சிந்தனைத் தெளிவினை சித்திரிக்கும் சீரிய சான்று.

1972 ஆம் ஆண்டு தமிழ் மாணவர்கள் தரப்படுத்தல் மூலம் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். இதனால் அப்போதைய அரசுக்கு எதிராகச் செயற்பட்டார்கள். அதன் காரணமாக அப்போதைய அரசு தமிழ் இளைஞர்களை வகை தொகையின்றி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சிறைக் கூடங்களில் வைத்த நேரத்தில் அவ்விளைஞர்களின் குடும்பத்தினரின் கஷ்டமான நிலையை மனிதநேயத்துடன் அணுகி ஒவ்வொரு இளைஞர் வீடுகளுக்கும் சென்று ஆறுதல் கூறி மாதாமாதம் உதவி புரிந்தது மாத்திரமன்றி சர்வதேச மன்னிப்பு சபையிடம் முறையிட்டு அவர்களை விடுதலை செய்ய பெரு முயற்சியெடுத்தவர்.

1961 ஆம் ஆண்டு தமிழ் இனத்தின் விடுதலைக்காக இலங்கைத் தமிழரசுக்கட்சி மேற்கொண்ட யாழ்ப்பாணம் கச்சேரிக்கு முன் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் "தர்மர்" முழு நாளும் கலந்து கொண்டார். அப்பொழுது நடைபெற்ற தடியடி தாக்குதலில் நெற்றியில் காயம் ஏற்பட்டு இரத்தம் பாய்ந்த நிலையில் பனாகொடை முகாமில் அடைக்கப்பட்ட பின்பு விடுதலை செய்யப்பட்டார்.

முன்பு மன்னாரில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஒரு மாகாநாட்டில் மலை நாட்டு தமிழ் மக்களின் உரிமைக்காக " இலங்கைத் தொழிலாளர் கழகம்" என்ற பெயரில் ஒரு இயக்கம் ஆரம்பிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. சில வருடங்கள் இக்கழகத்தின் தலைவராகச் செயற்பட்டு பாராளுமன்றத்தில் அவர்களின் உரிமைக்காக பல தடைவை குரல் கொடுத்தது மாத்திரமன்றி மலையகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் அடிக்கடி பங்கு பற்றியுமுள்ளார். மலையக மக்களின் பெருந் தலைவர்களில் ஒருவராக இருந்த ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எ. அசீஸ் தர்மரைப் பற்றி குறிப்பிடுகையில்,

''தர்மர்'' வடக்கு, கிழக்கு மக்களுக்கு மாத்திரமல்ல மலையக தோட்டத் தொழிலாளரின் நன்மைக்காக அயராது பாடுபட்டவர். மலையக தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்காகவும் வாழ்க்கை முறைக்கும் குரல் கொடுத்ததை வார்த்தைகளில் கூற இயலாது என கூறியது குறிப்பிடத்தக்கதாகும்.

1983 ஜூலை அனர்த்தங்களின் பின்னர் தமிழ் பேசும் மக்களின் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் இந்த நாட்டில் தங்கி தமது மக்களுக்கு ஆற்றவேண்டிய அரசியல் கடமைகளை செய்ய முடியாமல் இருந்த படியினாலும் எப்போது எது நடக்கும் என்பதைக் கூற முடியாத சூழ்நிலையில் அவர்கள் தென்னிந்தியாவில் தங்கியிருந்தார்கள். ஆனால் "தர்மர்" எந்தவொரு நாட்டிற்கும் செல்லாது இந்த நாட்டிலே தங்கியிருந்து மக்களுக்கு தொண்டாற்றினார். ''காய்க்கிற மரத்துக்குதான் கல்லால் எறிவார்கள்'' என்ற முதுமொழிக்கு அமைவாக தர்மருக்கு பல தடவைகள் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. ஒரு முறை இனம் தெரியாத நபர்கள் இவரின் வீட்டுக்கு வந்து தொலைபேசிகளை அறுத் தெறிந்து அட்டகாசம் புரிந்துள்ளனர். பின்பு இவர் பயணம் செய்கிற ஜீப் வண்டி வடமராட்சிப் பகுதியில் தீயிடப்பட்டது மிகவும் கண்டிக்கப்பட வேண்டியது.


அமரர் தமிழ் கலாசாரத்தையும் சைவ சமய த்தையும் இறுகக் கடைப் பிடித்து வாழ்ந்தவர். அரசியலில் மட்டுமன்றி ஆன்மீக வழியிலும் அதிக ஈடுபாடு கொண்ட இவர் தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் தேவஸ்தானத்தின் அறங்காவலராக இருந்து ஆலய வளர்ச்சிக்காக அயராது உழைத்தவர். ஆலயத்தில் உள்ள ஆதரவற்றோருக்கான இல்லத்திற்கு அடிக்கல் நாட்டி தொடக்கி வைத்தவரும் இவரே. மக்களுக்கு சேவையாற்று வதற்காக அரசியலில் புகுந்து தனது சொத் துக்கள் சுகங்களை ஏழை எளிய மக்களின் நல்வாழ்வுக்காக அர்ப்பணம் செய்து அவர்களின் சிரிப்பில் இன்பம் கண்டார். இதன் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் கல்வியியற் கல்லூரி அமைக்க காணி தேடி அலைந்தபோது தர்மரின் புதல்வனும் இன்றைய யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சித்தார்த்தன் தர்மரின் கோப்பாயில் உள்ள இருநூறு பரப்பு நிலத்தை இலவசமாக வழங்கியுள்ளது போற்றுதற்குரியது. இன்று அக் கல்லூரி வருடாவருடம் பல நூற்றுக்கணக்காக ஆசிரியர்களை உருவாக்கி வருவது யாவரும் அறிந்ததே.

தர்மர் படுகொலை செய்யப்பட்டதை அறிந்த முன்னாள் தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி இக் கொலை கொடுமையானதும் கொடூரமானதும் எனக் கூறியிருந்தார். தர்மரின் உடல் அழிக்கப்பட்டாலும் அவரின் நினைவையும் இலட் சியத்தையும் மக்கள் இதயங்களிலிருந்து என்றுமே அழிக்க முடியாது.

**ஆ.சி.கணேசவேல் (J.P),முன்னாள் பிரதேச சபை உறுப்பினர், ஆனைக்கோட்டை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு வேண்டும்



வன்னியிலிருந்து வந்து கரவெட்டிப் பிரதேச செயலாளர் பிரிவில் மீளக்குடியமர்ந்த குடும்பம் ஒன்றிற்கு ஆறு வருடங்கள் கடந்த நிலையில் இதுவரை வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லை.

கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஜே /360 கிராம அலுவலர் பிரிவில் கரணவாய் வடக்கு குஞ்சந்தோட்டம் பகுதியில் சாமித்தம்பி முருகுப்பிள்ளை என்பவர் வசித்துவருகின்றார்.

இவர் வன்னியில் இருந்து வந்து இங்கு மீள்குடியமர்ந்துள்ளார். மீள்குடியமர்ந்த பின்னர் இவர்களிற்கு பன்னிரண்டு தகரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதனால் கொண்டு அமைக்கப்பட்ட தகரக் கொட்டகையின் கீழ் வசித்து வருகிறார்.

சிறுபிள்ளைகளுடன் தகரத்தின் கீழ் ஆறு வருடத்திற்கு மேலாக வசித்து வரும் இக் குடும்பத்திற்கு ஏன் வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லை எனக் கேள்வி எழுப்பியுள்ள அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட தரப்பினர் மீள்குடியேறியுள்ள குடும்பத்திற்கு வீடுகட்ட உதவி வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-60)

# வீடுகள் பார்வையிடப்பட்டன



யாழ்.பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் அமைக்கப்படும் வீடுகளை மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை நண்பகல் பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பூம்புகார் மற்றும் பூவக்கரை ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டு வரும் 50 இற்கும் மேற்பட்ட வீடுகளை பார்வையிட்டதுடன வீட்டுத்திட்ட பயனாளிகளுடனும் கலந்துரையாடினார்.

இதில் பருத்தித்துறை பிரதேச செயலக உத்தியோகத்தாகளும, அப்பகுதி கிராம அலுவலர்களும் சென்றிருந்தனர். (இ-60)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 30 | 50 | 50 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 85 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 100 | 70 | 80 | 80 | 100 | 100 |
| தக்காளி | 50 | 50 | 40 | 40 | 40 | 60 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 50 | 80 | 100 | 90 | 60 | 80 |
| கோவா | 60 | 100 | 70 | 80 | 90 | 100 | 100 |
| கரட் | 100 | 100 | 80 | 120 | 120 | 120 | 120 |
| பூசணி | 30 | 20 | 20 | 40 | 40 | 50 | 50 |
| புடோல் | 40 | 20 | 20 | 30 | 40 | 60 | 40 |
| வாழைக்காய் | 100 | 100 | 70 | 70 | 80 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 70 | 100 | 70 | 60 | 80 | 100 | 70 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 85 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 80 | 100 | 60 | 120 | 60 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 40 | 20 | 30 | 60 | 50 | 80 | 40 |
| கருணைக்கிழங்கு | 80 | 150 | — | 120 | — | 120 | 100 |
| பயற்றங்காய் | 120 | 50 | 30 | 100 | 50 | 80 | 80 |
| லீக்ஸ் | 100 | 100 | 80 | 110 | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 40 | 30 | 30 | 40 | 40 | 40 | 70 |
| கறிமிளகாய் | 120 | 100 | 80 | 120 | 100 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 80 | 120 | 100 | 80-120 | 80 | 80 | 80 |
| போஞ்சி | 200 | 180 | 130 | 180 | 160 | 200 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 20 | 25 | 40 | 50 | 40 | 40 |
| கீரை - 1பிடி | 20 | 10 | 20 | 30 | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 250 | 250 | 200 | 240 | 200 | 200 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30-50 | 15-30 | 40 | 25 | 20-30 | 40 |
| இராசவள்ளி | — | — | — | — | — | — | 160 |
| வெங்காயப்பூ | 100 | 150 | 100 | 120 | 60 | 160 | 100 |
| முள்ளங்கி | 30 | 30 | 25 | 40 | 50 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 10 | 30 | 30 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 40 | 30 | 30 | 60 | 40 | 80 | 60 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## இலங்கை வடக்கு மாகாண தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆட்சியைப் பிடித்தது

**265**



இறுதியில் வடக்கு மாகாணத்தில் மொத்தம் உள்ள 38 இடங்களில் 30 இடங்களை ( 2 போனஸ் இடங்கள் உட்பட) தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கைப்பற்றி அமோக வெற்றி பெற்றது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆளும் கூட்டணி 7 இடங்களைக் கைப்பற்றியது. மீதி உள்ள ஒரு இடம் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குக் கிடைத்தது.

### 80 சதவீத வாக்குகள்

தமிழ்த் தேசிய கூட்டணிக்கு யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி ஆகிய மூன்று மாவட்டங்களில் 80 சதவீதத்துக்கு அதிகமான வாக்குகளும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 78 சதவீத வாக்குகளும் மன்னார் மாவட்டத்தில் 61 சதவீத வாக்குகளும் கிடைத்திருந்தன.

தமிழர்களின் கலாசார தலைநகராகக் கருதப்படும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பதிவான வாக்குகளில் 8[illegible] சதவீத வாக்குகள் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குக் கிடைத்திருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த வெற்றியின் மூலம் மொத்தம் உள்ள 38 இடங் களில் 30இடங்களைக் கைப்பற்றிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆட்சியைக் கைப்பற்றியது.

### பதவி ஏற்பு

இந்த நிலையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சிறப்புக் கூட்டம் யாழ்ப்பாணம் ரில்கோ விடுதியில் நடைபெற்றது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் கூட்டணியின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட 28 உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

அவர்கள் வடக்கு மாகாண முதலமைச்சராக சி.வி. விக்னேஸ்வரனை ஒரு மனதாகத் தேர்ந்து எடுத்தனர். இதன் பின்னர் அவர் முதலமைச்சராகப் பதவி ஏற்றுக் கொண்டார்.

### போட்டி

முதலமைச்சர் விக்னேஸ்வரன் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

தமிழ்மக்கள் ஜனநாயக ரீதியில் பேசி இருக்கிறார்கள். எங்கள் வெற்றியில் இருந்து இலங்கை அரசு பாடம் படித்துக்கொள்ள வேண்டும். தமிழர்கள் தங்களுக்குத் தன்னாட்சி உரிமை வேண்டும் என்பதை வலியுறுத்தி அபரிமிதமாக வாக்களித்து வெற்றி தேடித்தந்து உள்ளனர்.

### இராணுவம் வாபஸ்

வடக்கு மாகாணத்தில் இராணுவம் குவிக்கப்பட்டு இருப்பதுதான் தற்போதைய அடிப்படை பிரச்சினையாகும். இராணுவம் முழுவதையும் உடனடியாக வாபஸ் பெற்று தங்கள் முகாமுக்குத் திருப்பி அனுப்ப வேண்டும். ஒன்றுபட்ட இலங்கையில் கூட்டாட்சியின் கீழ் தன்னாட்சி அமைக்கவே நாங்கள் விரும்புகிறோம்.

இவ்வாறு விக்னேஸ்வரன் கூறினார்.

### கூடுதல் அதிகாரம் வழங்கப்படுமா?

அமைச்சரும் அரசு செய்தித் தொடர்பாளருமான ஹெகலிய ரம்புக்வெல தமிழ்த் தேசிய கூட்டணிக்கு கிடைத்த வெற்றி ஜனநாயகத்தின் பிரதிபலிப்பு என்று கருத்து தெரிவித்தார்.

தமிழர்கள் ஆதிக்கம் நிறைந்த வடக்கு மாகாண சபைக்கு கூடுதல் சுயாட்சி அதிகாரம் வழங்கப்படுமா? என்று கேட்டதற்கு தற்போதைய அரசியல் சட்ட விதிகளுக்கு உட்பட்ட மாற்றங்கள் மட்டுமே அனுமதிக்கப்படும் என்று அவர் பதில் அளித்தார்.

பெரும் சர்ச்சைக்கிடையே இலங்கை தலைநகர் கொழும்பில் பொதுநலவாய மாநாடு நடந்தது.

பொதுநலவாய அமைப்பில் இங்கிலாந்து, இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், கனடா, மொரீஷியஸ் உட்பட 53 நாடுகள் உறுப்பு நாடுகளாக உள்ளன.

பொதுநலவாய அமைப்பின் 22 ஆவது மாநாடு இலங்கை தலைநகர் கொழும்பில் 15.11.2013 நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

### சர்ச்சை

இலங்கையில் இனப்போர் உச்சக்கட்டம் அடைந்தபோது போர் இல்லாத பிரதேசங்கள் என அறிவிக்கப்பட்ட இடங்களில் கூட இலட்சத்துக்கும் மேற்பட்ட அப்பாவி தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டனர். போர்க் குற்றங்கள் அரங்கேற்றப்பட்டன.

சர்வதேச சமூகத்தைக் கடும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய இந்தச் சம்பவங்களால் பொதுநலவாய மாநாட்டைக் கொழும்பில் நடத்தக்கூடாது என பலத்த எதிர்ப்பு கிளம்பியது. பெரும் சர்ச்சையும் உருவானது.

### இந்தியா பங்கேற்க எதிர்ப்பு

அது மட்டுமன்றி போர்க் குற்ற விசாரணையை ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் முன்னிலையில் சந்திக்க வேண்டிய நிலையில் உள்ள மகிந்த ராஜபக்ஷவின் கரத்தை வலுப்படுத்த உதவும் என கருதப்படுகிற இந்த மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக்கூடாது என உலகமெங்கும் உள்ள தமிழ் அமைப்புகள், தமிழக அரசியல் கட்சிகள் போர்க் கொடி உயர்த்தின.

இது தொடர்பாக தமிழக சட்டசபையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### மாநாடு தொடங்கியது

இருந்த போதிலும் திட்டமிட்டபடி கொழும்பில் மாநாடு 15ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) தொடங்கியது. 3 நாட்கள் நடைபெற்ற இந்த மாநாட்டில் இங்கிலாந்து நாட்டின் ராணி எலிசபெத் (வயது-87) சார்பாக இளவரசர் சார்லஸ் பங்கேற்று நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்துப் பேசினார். இலங்கை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மாநாட்டில் பங்கேற்ற பல்வேறு நாட்டுத் தலைவர்களை வரவேற்று பேசினார்.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடைபெற்ற போரின் போது நடைபெற்ற மனித உரிமைகள் மீறல் மற்றும் அப்பாவி தமிழர்கள் படுகொலையைக் கண்டித்து கனடா மற்றும் மொரீஷியஸ் நாட்டு பிரதமர்கள் மாநாட்டைப் புறக்கணித்தனர்.

### இந்தியப் பிரதமர்

இந்த மாநாட்டில் இந்தியா பங்கேற்பதற்கு தமிழ்நாட்டில் கிளம்பிய கடும் எதிர்ப்பு காரணமாகப் பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொள்ளவில்லை. இந்தியா சார்பில் வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் பங்கேற்றார்.

இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன் மாநாட்டில் பங்கேற்றாலும் போரின் போது நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து பிரச்சினை எழுப்ப இருப்பதாகக் கூறி இருந்தார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் சார்பில் கலந்து கொண்ட இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் மகிந்த ராஜபக்ஷவுடன் மாநாட்டு தொடக்க விழா மேடையில் அமர்ந்து இருந்தார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்திரமும் ஏமாற்றமும் அறநெறி நிற்கப் போது மான அறிவில்லாத மூடர் செயலாகும்.

– ஓர் அறிஞன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## துண்டுப் பிரசுரங்களில் கடவுள் படங்களை அச்சிடலாமா?

இந்து சமயம் இறைவழிபாடு என்பது சுதந்திர மாக இடம்பெறவேண்டும் என்ற நோக்கைக் கொண்டது. கட்டாயப்படுத்தலின் பேரில் செய்யப்படும் இறை வழிபாட்டால் எந்தப் பிரயோசனமும் இல்லை என்பது இந்து சமயத்தின் கோட்பாடாகும்.

அதனால்தான் இந்து சமயத்திற்கு சனாதன தர்மம் என்றொரு பெயர் உண்டு. தர்மம் சார்ந்த ஒரு சமயம் கட்டுப்பாட்டை விதிக்குமாயின் அது தர்மம் ஆகாது.

ஆதலால் ஆன்மாக்கள் தன்னிலை உணர்ந்து பரம்பொருளை அறிய முற்படவேண்டும். எனவே எந்த விதமான கட்டுப்பாடுகளும் இன்றி இறை வழிபாட்டை மேற்கொள்வது அல்லது ஞானத்தைப் புரிந்து கொள்வது என்றவாறான சந்தர்ப்பம் இங்கு வழங்கப்படுகிறது.

இது தவிர, இறை வழிபாடு என்பதில் மூன்று நிலையினருக்கு வழிபாட்டுமுறை வகுக்கப்பட்டுள்ளது. ஆரம்ப நிலையில் இருக்கக் கூடியவர்கள் உருவ வழிபாட்டை மேற்கொள்ள வேண்டும்.

உருவ வழிபாட்டின் ஊடாக மனத்தை ஒரு நிலைப் படுத்துவது, தர்மத்தை உணர்வது, இறை சிந்தனையை மனத்திருத்துவது என்பன ஏற்படுத்தப்படுகிறது.

உருவ வழிபாட்டில் சரியை என்ற நெறி சம்பந்தப்படுகிறது. அதாவது இறைவனை அகத்தால் வழிபடுவதற்கு முன்னதாக உடம்பால் தொண்டு செய்வது என்ற புறம்சார்ந்த சரியைத் தொண்டுகள் இடம்பெறுகின்றன. இவை சில அடிப்படையானது.

இப்போது நாம் பேசவந்த விடயம் உருவ வழிபாட்டுடன் தொடர்புபட்டதாகும். உருவ வழிபாட்டில் ஈடுபடுவோர் தத்தம் கடவுள்களை சிலையாக; ஓவியமாக சிற்பமாக வடிவமைத்து வழிபாடாற்றுவர். இவ்வாறு அமைக்கப்படும் தெய்வ வடிவங்கள் வழிபாட்டுக் குறியவையாக மாறுகின்றன.

இங்குதான் ஒரு சிக்கல் ஏற்படுகின்றது. இந்துக்களின் வீடுகள் தோறும் சுவாமி அறை அமைக்கப்பட்டு அங்கு வழிப்பாட்டிற்காக சுவாமி படங்கள் வைக்கப்படுகின்றன.

அதேநேரம் நல்லூர்த் திருவிழா காலத்தில் வர்த்தக நிறுவனங்கள் தங்களின் வர்த்தகம் சார்ந்த விளம்பர துண்டுப் பிரசுரங்களில் கடவுள் படங்கள், நல்லூர் ஆலயத்தின் முகப்புத்தோற்றம், கோபுரங்கள், தேர், ஆறுமுக சுவாமி தேர் ஏறும் அழகிய காட்சி என்பனவற்றின் புகைப்படங்களை தங்கள் வர்த்தக துண்டுப் பிரசுரங்களில் பல வர்ணங்களில் அச்சிட்டு வெளியிடுகின்றன.

இவ்வாறு அச்சிட்டு வெளியிடப்படும் துண்டுப்பிரசுரங்கள் நல்லூர் திருவிழாவிற்கு வருபவர்களிடம் கையளிக்கப்படுகிறது. இவற்றை சிலர் தம்முடன் எடுத்துச் செல்கின்றனர். பலர் வீதியில் வீசிவிட்டு போகின்றனர். இவ்வாறு வீதியில் வீசப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் அடியார்களின் கால்களில் மிதிபடுவதை காணமுடிகிறது.

இந்த நிகழ்வு பலரையும் தாங்கொணா வேதனைப் படுத்தி வருகிறது. ஒரு இடத்தில் வழிபாடு இன்னொரு இடத்தில் அதே படம் கால்களில் மிதிபடுகிறது. எனவே இவ்வாறு செய்வது எந்தவகையில் நியாயமாகும் என்ற கேள்வி எழுவது தவறன்று.

ஆகையால் துண்டுப்பிரசுரங்களில் கடவுள் படங்கள், ஆலயத்தின் முகப்புத் தோற்றங்கள் தெய்வீக மான காட்சிகள் என்பவற்றை அச்சிடுவதற்கு தடை செய்கின்றதான நடவடிக்கை எடுக்காதவரை வழிபாட்டுக்குரிய புகைப்படங்கள் கால்களில் மிதிபடும் பாவச்செயல் நடக்கவே செய்யும்.

எனவே, இந்து அமைப்புகள் இது தொடர்பில் பொது வழக்கொன்றை தாக்கல் செய்து வர்த்தக துண்டு பிரசுரங்களில் சுவாமிப் படங்கள், கோயில்களின் முகப்புத் தோற்றங்கள், கோபுரங்கள், தேர் ஏறும் காட்சிகள் என்பவற்றை அச்சிடுவதற்கு தடை விதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் உருவ வழிபாடு என்பது பொருள் இழந்து போவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

# ஈழ அகதிகள் 90 பேர் தாயகம் திரும்புகின்றனர்

### மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் தகவல்

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினுடைய (UNHCR) வசதிப்படுத்தலுடனும் ஒருங்கிணைப்புடனும் 90 இலங்கை தமிழ் அகதிகள் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தரவுள்ளனர். இவர்களில் சுய விருப்பின் பேரில் 3 குழுவினர்களாக 54 பேர் (20 குடும்பங்கள்) திருச்சியிலிருந்து இலங்கை விமான சேவை (UL 132) இனூடாக மு.ப. 10.15 மணியளவிலும், 36 பேர் (15 குடும்பங்கள்) சென்னையிலிருந்து இலங்கை விமான சேவை (UL 122) இனூடாக பிற்பகல் 12.20 மணியளவிலும் எதிர்வரும் 13 ஆம் திகதியன்று இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

இவ் அகதிகள் 90பேரில் 45 ஆண்களும் 45 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவர்கள் மன்னார், திருகோணமலை, கிளிநொச்சி, அம்பாறை, கொழும்பு, யாழ்ப்பாணம மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு மீள்குடியமர்வதற்காக வருகை தருகின்றனர் என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இவர்களுக்கு இலங்கையை வந்தடைவதற்கு இலவசமாக விமான பயணச்சீட்டு அகதிகளுககான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் வழங்கப்படும். அத்துடன் மீள் சமூக ஒருங்கிணைப்பிற்கான நன்கொடையாக ஒவ்வொரு வருககும் 75 அமெரிக்க டொலரகளும், போக்குவரத்து நன்கொடையாக ஒவ்வொருவருக்கும் 19 அமெரிக்க டொலர்களும் உணவு அல்லாத பண நன்கொடையாக ஒவ்வொரு குடும்பத்தற்கும் 75 அமெரிக்க டொலர்களும் வழங்கப்படுகின்றது.

2011ஆம் ஆண்டிலிருந்து மொத்தமாக 4,945 இலங்கை தமிழ் அகதிகள் (1,798 குடும்பங்கள்) தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். மேலும் இந்தியாவில் 64 ஆயிரம் பேர் இந்தியாவிலுள்ள 109 முகாம்களில் இருக்கின்றனர். மொத்தமாக ஒரு இலட்சத்திற்கும் அதிகமான இலங்கை அகதிகள் இந்தியாவில் இருப்பதாகவும் அறியப்பட்டுள்ளது. சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் சுவாமிநாதன் மீள் குடியமர்த்தப்படும் மக்களுககு வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான நிதியுதவிகளை வழங்குவதற்கான அமைச்சரவை பத்திரம் ஒன்றை சமர்ப்பித்ததன் பேரில் தற்போது அமைச்சினால் ஆகக்கூடிய தொகையாக ஒரு இலட்சம் ரூபாய் தாயகம் திரும்பும் தமிழ் அகதிகள் தமது வாழ்வாதார நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக அமைச்சினால் வழங்கப்படுகின்றது.

அரசாங்கமானது இந்தியாவிலிருந்து கட்டம் கட்டமாக சுயவிருப்பில் இலங்கைக்கு அகதிகளை அழைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதுடன் அதிகரித்த அகதிகளின் வருகையானது நிரந்தர சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திற்கான சமிக்ஞையாக காணப்படுவதாக அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (இ-7,10)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து 5.30 மணி வரை **யாழ். பிரதேசத்தில** மறவன்புலோ - கேரதீவு வீதி, கோகிலாக்கண்டி, நாவற்காடு, குடமியன், மிருசுவில் வடக்கு, மயிலங்காடு, குப்பிளான், பளை ஒரு பகுதி, அரசர் கேணி, கச்சார்வெளி, இத்தாவில், முகமாலை, விளுப்பளை, கரம்பகம், கல்வி சார் தேர்ச்சி பெற்ற பெண்கள் பண்ணை, மருதங்குளம், உசன், விடத்தற்பளை, கெற்பெலி, கிளாலி, தவசிக் குளம், எழுதுமட்டுவாழ் 531ஆம் பிரிவு இராணுவ முகாம், மிருசுவில் 52ம் பிரிவு இரா ணுவ முகாம, ரோக்கியோ சீமெந்து மிக்ஸர் பிளான்ட், சங்கன் கொங் கிறீட் மிக்சர் பிளான்ட் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** கிறிட்டிலிருந்து வவுனியா நகரம், ஓமந்தையிலிருந்து புளியங்குளம் வரை, கொம்புவைத்த குளம் இராணுவமுகாம், ஓவியா விடுதி, SVR அரிசி ஆலை, ராணி அரிசி ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### கோவிலுக்குச் சென்று வருவதில் பின்பற்றவேண்டிய வழிமுறைகள்

சிவன் கோயிலுக்கு சென்று தரிசித்த பின் சிறிது நேரம் அமர்ந்து வர வேண்டும். விஷ்ணு கோயிலுக்கு சென்று தரிசித்த பின் நேராக வீட்டிற்கு வந்து விட வேண்டும் என்று ஏன் கூறுகிறார்கள்.

சிவன் கோயிலுக்கு சென்று தரிசனம் முடித்துவிட்டு வீடு திரும்பும்போது வழியில் ஏதேனும் இடையூறு ஏற்படாமல் இருக்க பூதகணங்களை நம்மோடு துணைக்கு அனுப்புகிறார் சிவன். அதனால் நாமும் சிறிதுநேரம் உட்கார்ந்து இறைவனிடத்தில் மகிழ்ச்சியை தெரிவித்துவிட்டு கிளம்புகிறோம்.

விஷ்ணு கோயிலில் தரிசித்துவிட்டு வரும்போது மகாலட்சுமி நம்மோடு வீட்டிற்கு வருகிறாள். அதனால் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர்க்கந்தனுக்கு



### ஈசனே நல்லூர் வாசனே

இராகம்: கமாஸ் தாளம்: ஆதி

பல்லவி

ஈசனே நல்லூர் வாசனே
இனிய வேல்முருகா உனைநம்பினேன் வாவா

சரணங்கள்

பண்ணரினோர் மொழியாள் பாலசுப்பிர மணியா
எண்ணும் எண்ணமெல்லாம் நண்ணும்
வண்ணம் வாவா (ஈசனே)
தாசனான யோகசுவாமி சாற்றும் பாவைக்
கேட்டுக்கி ருபைசுவர்ந்து வாட்டந்தீர்க்க வாவா (ஈசனே)

சிவத்திரு யோகர் சுவாமிகள்

# அல்வாயில் 25 பவுண் நகை திருட்டு

வீட்டில் வைக்கப்பட்டிருந்த 25 பவுண் நகை திருடப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை 6.00 மணிக்கும் இரவு 9.00 மணிக்கும் இடைப்பட்ட வேளையிலேயே இத்திருட்டு நடைபெற்றுள்ளதாக அல்வாய் வடக்கைச் சேர்ந்த புவனராஜப செங்குயில் என்பவர் பருத்தித்துறைப் பொலிஸில் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.

மாலை 6.00 மணிக்கும் இரவு 9.00 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் ஜன்னல் வழியாக தடியின் உதவியுடன் கைப்பை எடுக்கப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது. இது தொடர்பில் பொலிஸார்மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (60)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### மௌனத்தைக் கொண்டாடு

உனக்கு எல்லாவற்றையும் கொடுத்தவரே சுதந்திரத்தையும் கொடுத்திருக்கிறார். சுதந்திரத்தை மதித்து நட. கொடுக்கப்பட்டிருக்கிற எல்லாவற்றையும் நல்லபடியாகப் பயன்படுத்திக்கொள்.

உன் நோக்கங்களும் ஆசைகளும் தான் உன்னைத் தெய்வத்திடமிருந்து பிரிக்கின்றன.

அவைகள் எல்லாவற்றையும் தெய்வத்திற்குப் படைத்து அர்ப்பணம் செய்துவிடு. அப்பொழுதுதான் நீ தெய்வத் தன்மையுடையவனாவாய். (நீயே தெய்வம்). சுதந்திரமாக இருப்பாய், குறைவின்றி நிறைவுடன் இருப்பாய்.

உன்மனம் உன்னுடையது அல்ல. அதைக் குற்றம் சொல்லாதே. அதைப் பரம்பொருள் அணைத்துக் கொள்ளட்டும்.

உலக வாழ்விற்கு முயுற்சிதான் திறவுகோல்
முயற்சியில்லாதிருத்தல் மோட்சத்திற்கு திறவுகோல்.




### இறைவனுக்கே எல்லாம் தெரியும்

❖ இறைநம்பிக்கையாளர்களில் இரு குழுவினர் தங்களுக்குள் போரிட நேர்ந்தால் அவர்களிடையே சமாதானம் செய்து வையுங்கள். பிறகு, அவர்களில் ஒரு குழுவினர், மற்றொரு குழுவினரிடம் வரம்பு மீறி நடந்து கொண்டால், வரம்பு மீறிய குழுவினருடன் அவர்கள் இறைவனின் கட்டளையின் பால் திரும்பும் வரை போர் புரியுங்கள். அப்படி அவர்கள் திரும்பி விட்டால், அவர்களிடையே நீதியுடன் சமாதானம் செய்து வையுங்கள்.

❖ எந்த மனிதனும், அவன் நாளை என்ன சம்பாதிக்கப் போகின்றான் என்பதை அறிவதில்லை. தான் எந்தப் பூமியில் மரணமடைவோம் என்பதும் எந்த மனிதருக்கும் தெரியாது. திண்ணமாக, இறைவன் தான் யாவற்றையும் நன்கு அறிபவனாகவும் தெரிந்தவனாகவும் இருக்கின்றான்.

❖ அசத்தியத்தைக் கொண்டு சத்தியத்தைக் குழப்பி விடாதீர்கள். அறிந்து கொண்டே சத்தியத்தை நீங்கள் மூடிமறைக்காதீர்கள்.

❖ எவர் ஒருவர் எதை சம்பாதிக்கிறாரோ அதற்கு அவரே பொறுப்பாவார். மேலும் ஒருவரின் பாவச்சுமையை மற்றொருவர் சுமக்க மாட்டார்.

- வேதவரிகளும் தூதர் மொழிகளும் நூலில் இருந்து

# சங்கானை கிங்ஸ்டார் வி.கழகம் நடத்தும் மாவட்ட ரீதியிலான கிரிக்கெட்

## அரையிறுதியில் ஞானம்ஸ்

சங்கானை கிங்ஸ்டார் கழகம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரை யிறுதிப் போட்டிக்கு கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழ கம் தகுதி பெற்றுள்ளது.

சங்கானை கிங்ஸ்டார் விளையாட்டுக்கழகம்அணிக்கு 7 பேர் 5 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியை யாழ். மாவட்ட ரீதியாக நடத்துகின் றது.

இதில் முதலாவது போட்டி யில் கொக்குவில் காமாட்சி அணியையும், இரண்டாவது சுற்றில் கிங்ஸ்டார் அணியை யும் காலிறுதியில் இணுவில் கலைஒளியையும் வெற்றி கொண்டு அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

கரவெட்டி ஞானம்ஸ்விளை யாட்டுக்கழகம் கொக்குவில் காமாட்சியுடனான போட்டி யில் முதலில் துடுப்பெடுத் தாடிய கரவெட்டி ஞானம்ஸ் 5 ஓவர்களில் 2 விக்கெட் இழப் பிற்கு 68 ஓட்டத்தினைப் பெற் றது.

துடுப்பாட்டத்தில் ரஜிபன் 5 ஆறு ஓட்டங்கள் உள்ளடங் கலாக ஆட்டமிழக்காமல் 38 ஓட்டத்தினையும் ஜீவன் 11 ஓட்டத்தினையும் பெற்றனர்.

வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய கொக்கு வில் காமாட்சி விளையாட்டுக் கழகம் 5 ஓவர்கள் 3 விக் கெட்டினை இழந்து 47 ஓட் டங்கள் மாத்திரம் பெற்றுத் தோல்வி அடைந்தது. பந்து வீச்சில் செந்திரன், அனுதலா ஒரு விக்கெட்டினை கைப்பற் றினர்.

இரண்டாவது சுற்றில் சங் கானை கிங்ஸ்டாருடன் மோதி யது. கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம் முத லில் துடுப்பெடுத்தாடியது. சங்கானை கிங்ஸ்டார் 5 ஓவர் களில் 2 விக்கெட் இழப்பிற்கு 72 ஓட்டங்கள் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத் தாடிய கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம் 4.5 ஓவர் களில் 3 விக்கெட் இழப்பிற்கு வெற்றி இலக்கை அடைந் தது.

துடுப்பாட்டத்தில் ஜீவன் 23 ஓட்டத்தினையும் ரஜிபன் 19 ஓட்டத்தினையும் பெற்ற னர். பின்னர் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் இணு வில் கலை ஒளியுடன் மோதி யது கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம்

முதலில் துடுப்பெடுத்தா டிய கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம் 5 ஓவர் களில் 4 விக்கெட் இழப்பிற்கு 69 ஓட்டத்தினை பெற்றது.

துடுப்பாட்டத்தில் பிரகாஷ் 28 ஓட்டத்தினையும் றஜீபன் 14 ஓட்டத்தினையும் பெற்ற னர்.

வெற்றி இலக்கைநோக்கி துடுப்பெடுத்தாடிய இணு வில் கலைஒளி விளையாட் டுக்கழகம் 5 ஓவர்களில் 3 விக்கெட்டினை இழந்தது. 62 ஓட்டங்கள் மாத்திரம் இழந்து தோல்வி அடைந்தது.

பந்து வீச்சில் துவா, ரஜீ பன் தலா ஒரு விக்கெட்டினை கைப்பற்றினர். (கு)

# குப்பிளான் விக்னேஸ்வரா வி.கழக உதைபந்தாட்டச் சுற்றுத் தொடர்

## சென்லூட்ஸ்,றோயல் வெற்றி





குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத் தும் அணிக்கு 9பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி 30.08.2016 செவ்வாய்க்கிழமை மாலை 3.45 மணிக்கு நடை பெற்றது. இதில் அச்செழு வளர்மதி அணியை எதிர்த்து சென்.லூட்ஸ் அணி மோதி யது.

இதில் சென்லூட்ஸ் அணி யினர் 1:0 என்ற வித்தியாசத் தில் வெற்றி பெற்றனர்.

அடுத்தபோட்டியாக 4.45 மணிக்கு ஊரெழு றோயல் அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணிமோதி யது. அதில் ஊரெழு றோயல் அணியினர் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற் றனர். (கு)







உதய சூரியன் விளையாட்டுக்கழகத்தினால் 54 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு அண்மையில் சகல தரப்பினருக்குமான நீச்சல், படகு ஓட்டம், கட்டுமரம் வலித்தல் ஆகிய போட்டிகள் நடைபெற்ற போது... (க)

# நானாட்டான் றீகன் ஸ்ராரை வீழ்த்தி பெரியகமம் எவகிறீன் சம்பியன்

மன்னார் மாவட்ட காற் பந்தாட்ட லீக்கினால், லீக்கில் பதிவு செய்யப்பட்ட 'பி' டிவி ஷன் கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட மாபெரும் காற் பந்தாட்டச் சுற்றுப் போட்டி யில், பெரியகமம் எவகிறீன் விளையாட்டுக் கழகம் சம்பிய னாகி சாதனை படைத்தது. அணிக்கு 9 பேர் கொண்ட விலகல் முறையிலான காற் பந்தாட்டச் சுற்றுப் போட்டி யானது, மன்னார் நானாட் டான் இலகடிப்பிட்டி சென். மேரிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த வார இறுதியில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இதில் 22 அணிகள் பங்கு பற்றின. நானாட்டான் றீகன் ஸ்ரார் விளையாட்டுக் கழக மும் பெரியகமம் எவகிறீன் விளையாட்டுக் கழகமும் இறுதிப்போட்டியில் மோதின. போட்டி தொடங்கி முடியும் வரை இரு அணிகளும் மாறி மாறி முயற்சித்தும் கோல் எதனையும் போட முடிய வில்லை.

இதனால் போட்டி முடிந்த போது 0-0 என காணப்பட்டு இறுதியில்தலா ஐந்து பெனால்டி உதைகள் வழங்கப்பட்டன. பெனால்டி முறையில், 3-2 என்ற கோல் கணக்கில் பெரிய கமம் எவகிறீன் விளையாட் டுக் கழகம் சம்பியனாகியது. இவ்விறுதிப்போட்டியின் சிற ந்த வீரராக பெரியகமம் எவ கிறீன் விளையாட்டுக் கழக கோல்காப்பாளர், போட்டியின் சிறந்த வீரராகவும் தொடரின் சிறந்த வீரராக விடத்தல்தீவு புதிய யுனைற்றட் விளை யாட்டுக்கழக வீரர் சுயாட்டும் தெரிவாகி பரிசில்கள் வழ ங்கி கௌரவிக்கப்பட் டனர்.

அத்துடன் சம்பியன் அணி க்கு வெற்றிக்கிண்ணமும் பணப் பரிசும் காற்பந்தில் இரண்டாம் இடத்தைப் பெற்ற அணிக்கு வெற்றிக்கிண்ண மும் பணப்பரிசும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு, பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினராகிய வைத் திய கலாநிதி ஜீ.குணசீலனும் ஏனைய விருந்தினர்களாக முருங்கன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் மன்னார் காற்பந்தாட்ட லீக்கின் தலை வர், செயலாளர், உபதலைவர் கள், உப செயலாளர், பொரு ளாளர், உபபொருளாளர், சென்.மேரிஸ் விளையாட் டுக் கழக தலைவர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (க)

# கிளிநொச்சி உதய தாரகை இறுதிப் போட்டிக்கு தகுதி

கொடுக்கிளாய் சக்திவேல் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் அண்மையில் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் கிளி நொச்சி உதயதாரகை விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழகம் மோதியது. மிகவும் எதிர்பார்க்கப்பட்ட போட்டியில் 3:0 என்ற கோல்க்க ணக்கில் கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது. (கு)

# கொக்குவில் AB, பிரம்படி அரையிறுதிக்கு தெரிவு

கொம்மாந்துறை இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத் தும் Northern Kings Premier League கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நடைபெற்று முடிந்த 8 நபர்கள் கொண்ட 9 பந்துப் பரிமாற்றங்களை உள்ளடக்கிய போட்டியில் கொக்கு வில் AB விளையாட்டுக்கழகமும் பிரம்படி விளையாட்டுக் கழகமும் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளன.அரையிறுதிப் போட்டி பிரமாண்டமான முறையில் மின்னொளியில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் அறி வித்துள்ளனர். (கு)

# உதைபந்தாட்டத்திற்கு விண்ணப்பிக்குக

பருத்தித்துறை உதைபந் தாட்ட லீக் அனுமதியுடன் வல்வை நெடியகாடு இளைஞர் விளை யாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் Northern Challengers Cup 2016 உதைபந்தாட்டச் சுற்றுப் போட் டிக்கு விளையாட்டுக்கழகங் களிடமிருந்து விண்ணப்பம் கோரப் பட்டுள்ளது.

வெற்றி பெறும் அணிக்கு வெற்றிக் கிண்ணத்துடன் 2 இலட்சம் ரூபா பணப் பரிசும் இரண்டாம் இடத்தினை பெறும் அணிக்கு ஒரு இலட்சம் ரூபா பணப் பரிசு வழங்கப்படவுள்ளது.

மேற்படி போட்டிக்கு விண் ணப்பிக்கும் விளையாட்டுக் கழகங்கள் நெடியகாடு இளை ஞர் விளையாட்டுக்கழகத்தின் போட்டிஏற்பாட்டுகுழுவுடன்தொடர் பினை ஏற்படுத்துமாறு கேட் டுக் கொள்ளப்பட்டுள்ளது.(க)

# ஜனாதிபதி தங்கப்பதக்க கரப்பந்துக்கு விண்ணப்பிக்குக

(பனிக்கன்குளம்)

கிளிநொச்சி மாவட்ட கரப் பந்தாட்டச் சங்கம் நடத்தும் ஜனாதிபதி தங்கப் பதக்க கரப் பந்தாட்டப் போட்டிகள் கிளி நொச்சியில் நடைபெறவுள்ள தால் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிட மிருந்து விண்ணப்பம் கோரப் பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத் தில் பதிவு செய்யப்பட்ட விளை யாட்டுக் கழகங்களுக்கிடையே கரப்பந்தாட்டப் போட்டிகள் 22 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலாருக்கும் மட்டுப்படுத் தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற் றுப் போட்டிகளாகவும் ஆண், பெண் இருபாலாருக்குமான திறந்த கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளும் இடம்பெறவுள் ளன.

இப்போட்டிகள் எதிர்வரும் 10, 11ஆம் ஆகிய திகதிக ளில் காலை 8 மணிக்கு ஆரம்ப மாகி கிளிநொச்சி தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மைதானத்தில் நடைபெற வுள்ளதாகவும் பங்குபற்ற வுள்ள பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் இலக்கம் 104, YMCA வீதி, பாரதிபுரம், கிளிநொச்சி என்னும் முக வரியிலுள்ள கிளிநொச்சி மாவட்டக் கரப்பந்தாட்டச் சங் கத்துடன் தொடர்பு கொள்ளு மாறு அறிவிக்கப்பட்டுள் ளது.

இது தொடர்பான மேல திக விபரங்களை 077 764 0332 என்னும் தொலை பேசி இலக்கத்தினூடாகத் தொடர்புகொண்டு அறிந்து கொள்ள முடியும் என்றும் அறி விக்கப்பட்டுள்ளது. (க-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று யாழில்...

இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்த செயலரை பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்சா டி சில்வா வரவேற்றிருந்தார். பின்னர் கொழும்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடிய அவர், காலியில் நடைபெற்ற நல்லிணக்கத்துக்கான இளைஞர்களின் மாநாட்டிலும் கலந்து கொண்டு, பினனர் கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்திற்கும் சென்றிருந்தார்.

அங்கு 'ஐ.நாவின் பூகோள அபிவிருத்தி அடைவுகள்' என்ற தொனிப பொருளில் கொழும்பில் விஷேட உரை ஒன்றையும் நிகழ்த்தியிருந்தார்.

இந்த நிலையில் இன்று காலை பத்துமணியளவில் விமானம் மூலம் பலாலிக்கு வரும் ஐ.நா பொதுச் செயலர் வடக்கு மாகாண ஆளுனர் ரெஜினோல்ட் கூரேயை அவரது அலுவலகத்தில் பிற்பகல் ஒரு மணியளவில் சந்திக்கவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர், பின்னர் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை சந்திக்கவுள்ளார்.

யாழ்.பொது நூலகத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா. சம்பந்தனையும், கூட்டமைப்பின் பாராளு மன்ற உறுப்பினர்களோடு சந்திப்பில் ஈடுபடவுள்ளார். பின்னர் வலி வடக்கில் மீள்குடியேற்றப்பட்ட இடங்களுக்கு சென்று மக்களை பார்வையிடவுள்ளார்.

நலன்புரி முகாமுக்கு செல்வது ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரின் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்படாத போதிலும், அவர் முகாம் செல்வார் என கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் வருகை குறித்து தமக்கு எந்த அறிவித்தல்களும் கிடைக்கவில்லை என முகாம் தலைவர்கள் தெரிவிக்கின்றனர். இந்த செய்தி அச்சுக்கு போகும் போது கோணப்புலம் நலன்புரி முகாமிறகு செல்லும் சந்திப்பு இடைநிறுத்தப் படுள்ளதாக அறிய முடிகின்றது.

அண்மையில் விடுவிக்கப்பட்ட பிரதேசமான வீமன்காமத்தில் குடியேறியுள்ள மக்களையும் பளை வீமம்காமம் பகுதியில் யுனிசெப் நிறுவனத்தால் அமைத்துக் கொடுக்கப்பட்ட 65 வீட்டுத்திட்ட பொது நோக்கு மண்டபத்தில் சந்தித்து கலந்துரையாடவுள்ளார். பின்னர் கொழும்பு பயணிக்கும் அவர், நாளை மாலை சீனாவிற்கு பயணமாகவுள்ளார்.

அங்கு ஜி20 மாநாட்டுக்காக தனது தெற்காசிய நாடுகளுக்கான விஜயம் குறித்த அறிக்கை ஒன்றையும் சமர்ப்பிக்கவுள்ளார். இதன் பின்னர் கிழக்காசியாவிற்கான பயணங்களிலும் அவர் ஈடுபடவுள்ளார். (4-9)

# அச்சுவேலி முக்கொலை : பிணை நிராகரிப்பு

யாழ் குடாநாட்டை பெரும் பரபரப்புக்கு உள்ளாக்கிய அச்சுவேலி முக்கொலை வழக்கில் கொலைக் குற்றம் சாட்டப்பட்டுள்ள பொன்னம்பலம் தனஞ்செயன் என்ற எதிரியின் பிணை விண்ணப்பத்தை நிராகரித்துள்ள யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன்,

அந்தப் பிணை மனுவையும் தள்ளுபடி செய்து நேற்று முன்தினம் புதன்கிழமை தீர்ப்பு வழங்கியுள்ளார்.

அச்சுவேலி கதிரிப்பாய் என்ற இடத்தில், கடந்த 2014 ஆம் ஆண்டு மே மாதம் 4 ஆம் திகதி நித்தியானந்தன் அருள்நாயகி, நித்தியானந்தன் சுபாங்கன், யசோதரன் மதுஷா ஆகிய மூவரைக் கொலை செய்ததாக சந்தேகத்தின்பேரில் மறுநாள், பொன்னம்பலம் தனஞ்செயன் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றின் உத்தரவிற்கமைய விளக்கமறியலில் இருந்து வருகின்றார்.

இந்த சந்தேக நபரை பிணையில் விடுமாறு கோரி யாழ் மேல் நீதிமன்றத்தில் பிணை மனு தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெற்றுவந்த நிலையிலேயே நேற்று முன்தினம் அவருடைய பிணை மனு நிராகரிக்கப்பட்டுள்ளது. (11)

# கற்பகபிள்ளையாருக்கு மகா கும்பாபிஷேகம்

(மண்டைதீவு)

மண்டைதீவு கற்பகபிள்ளையார் கோவில் மஹா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெறும்.

இதனை முன்னிட்டு நாளை சனிக்கிழமை எண்ணெய்க் காப்பு இடம்பெறும். (ந)

# ஐ.நா. செயலர் மூன்...

கலந்துரையாடினர்.

அரசியல் சீர்திருத்தம், அதிகாரப் பகிர்வு மற்றும் கட்டமைப்பு சீர்திருத்தங்கள் தொடர்பில் அரசாங்கம் முன்னெடுத்துள்ள படிமுறைகள் தொடர்பாக ஐ.நா. பொதுச் செயலாளருக்கு ஜனாதிபதி இச்சந்தர்ப்பத்தில் விளக்கமளித்தார்.

அத்துடன் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்றம், நல உரிமையாளர்களுடைய காணிகள் விடுவிப்பு மற்றும் அவர்களின் வாழ்வாதார அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாகவும் மேலும் விளக்கமளித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் தொடர்ச்சியான உதவிகளினூடாக கடந்த ஒன்றரை வருட காலமாக இலங்கை பல்வேறுபட்ட துறைகளில் முன்னெடுத்துவரும் செயற்பாடுகள் தொடர்பில் தன்னுடைய மகிழ்ச்சியினை வெளியிட்ட ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் தன்னுடைய காலிக்கான விஜயத்தின்போது வெவ்வேறு துறைகளில் அடைந்துள்ள முன்னேற்றத்தினை நேரடியாக காணக்கூடியதாக இருந்ததாகவும் மேலும் தெரிவித்தார்.

மக்களுடன் அதிலும் குறிப்பாக இளையோருடன் உரையாடியதாக தெரிவித்த ஐ.நா. செயலாளர் தற்போதுள்ள சுதந்திரமான மற்றும் நட்புறவான சூழ்நிலை தொடர்பாகவும் தன்னுடைய திருப்தியினை வெளிப்படுத்தினார்.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, ஜனாதிபதியின் ஆலோசகர் ஒஸ்டின் பெர்ணாண்டோ, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் எசல வீரக்கோன் மற்றும் ஐ.நாவுக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி கலாநிதி ரொகான் பெரேரா ஆகியோரும் இந்த சந்திப்பில் பங்கு பற்றியிருந்தனர்.

அத்துடன் ஜனாதிபதியால் ஐ.நா. பொதுச் செயலாளருக்கு விசேட இராப்போசன விருந்தும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் இலங்கைக்கு வருகை தந்ததன் பின்னர் ஐ.நா. செயலாளர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அலரிமாளிகையில் சந்தித்திருந்தார். (11)

# குருநகரில் கத்திக்குத்து

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத இருவர் வீடு புகுந்து போத்தலால் குத்தியதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றிரவு 9.30 மணியளவில் குருநகரில் இடம் பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான அல்போர்ன் கொம்சன்ரைன் (வயது 46) என்ற குடும் பஸ்தரே படுகாயமடைந்தவராவார்.

இது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறையிட்டதனைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (30)

# மூனின் வருகையையிட்டு கவனயீர்ப்பு...

செயலாளரிடம் எமது கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம். சர்வதேச அழுத்தம் ஒன்றின் ஊடாகத்தான் எமது நிலங்கள் விடுவிக்கப்படும் என்பதனை நாம் உணர்ந்துள்ளோம்.

எங்களுடைய காணியின் பெறுமதியில் எத்தனை மடங்கு நஷ்டஈடு தந்தாலும் அதனை நாம் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். எங்கள் நிலங்களை விடுவியுங்கள். அதுவே போதும் என்ற கோரிக்கைகளையே நாம் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளரிடம் முன்வைக்க உள்ளோம்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் விஜயம் செய்யும் இடத்தில் கவனஈர்ப்பில் ஈடுபடவுள்ள நாம் பின்னர் உயர்பாதுகாப்பு வலயத்தில் இராணுவத்தின் எல்லைகள் அருகே எல்லைப் போராட்டத்திலும் ஈடுபடவுள்ளோம் என அவர்கள் அறிவித்துள்ளனர். இந்த போராட்டத்திற்கு அனைவரது ஒத்துழைப்பையும் அவர்கள் கோரியுள்ளனர்.

இதேவேளை பாதிக்கப்பட்ட எமக்கு நீதி வழங்குங்கள் என ஐ.நா செயலாளரின் கவனத்தினை ஈர்க்கும் வகையில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை பொது மக்களின் ஆதரவுடன் முன்னெடுக்கவுள்ளதாக வடமாகாண சபை உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் அறிவித்துள்ளார். யாழ்.ஊடக அமையத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு அறிவித்தார்.

போர் நடைபெற்ற போது, தமிழ் மக்களை ஐ.நா சபை காப்பாற்ற தவறியதென்ற குற்றச்சாட்டு பலரிடமும் இருக்கின்றது. அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான விசாரணை மற்றும் காணிகள் விடுவிக்கப்படாமல் உள்ள மக்களுக்கு நீதி வேண்டி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை முன்னெடுக்கவுள்ளதாகவும், இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகத்தின் முன்பாக பாதிக்கப்பட்ட ஈழ மக்கள் ஒன்று கூட வேண்டும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

அமைதியான முறையில் இந்த கவனயீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுக்கவுள்ளோம். ஆனால், இந்த கவனயீர்ப்பு போராட்டம் ஐ.நா செயலாளருக்கு எதிரான ஆர்ப்பாட்டம் அல்ல. நாங்கள் பாதிக்கப்பட்டுள்ளோம்.

எங்களுக்கு நீதி வழங் குங்கள் என அவரை எதிர்த்துக் கேட்பது போன்று இந்த கவனயீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுக்கவுள்ளோம். இந்த போராட்டத்தினை தவறான கண்ணோட்டத்தில் எடுத்துக்கொள்ள வேண்டாம் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துளளார்.

ஐக்கிய நாடுகள் சபை எமது பிரச்சினையில் இனிமேலும் தவறு விடக்கூடாது. இலங்கை அரசின் பசப்பு வார்த்தைக்கு ஏமாறாமல், எமக்கு நீதி வழங்க முன்வர வேண்டுமென்று பணிவான வேண்டுகோளைவிடுக்கின்றோம். இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் ஒன்று கூட வேண்டுமென அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (4)

# தமிழ் அரசியல் கைதிகளி...

செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளில் சிலரை விடுதலை செய்வது தொடர்பாக, கடந்த வெள்ளிக்கிழமை பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் அலுவலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

எனினும் குறித்த அரசியல் கைதிகளை நேற்றுமுன்தினம் புதன் கிழமைக்கு முன்னர் விடுப்பதாக தீர்மானிக்கப்பட்ட போதிலும் அவர்களின் விடுதலை தொடர்பாக எந்த விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப் படாத நிலையில், இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்.

அமைச்சர் டி.எம். சுவாமிநாதனுடன் தொலை பேசியூடாக தாம் வினவிய போது விடுதலை செய்யப்படவுள்ள கைதிகள் தொடர்பான பெயர் விபரங்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படும் என தெரிவித்ததாக அவர் கூறினார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு நீண்ட காலமாக தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு நல்லாட்சி அரசாங்கத்திற்கு பல்வேறு தரப்பினரிடமிருந்தும் தொடர்ச்சியாக அழுத்தங்கள் எழும் நிலையில், சில அரசியல் கைதிகளை விடுதலை செய்வது குறித்து அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

எவ்வாறாயினும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை் தொடர்பான நகர்வுகளில், கடந்தகால அரசாங்கம் மட்டுமன்றி நல்லாட்சி அரசாங்கமும் பின்வாங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (11)




# பல்கலை மோதல்...

எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிவான் எஸ்.சதீஸ்தரன் ஒத்தி வைத்துள்ளார்.

கடந்த மாதம் யாழ்.பல்கலைக் கழக விஞ்ஞான பீடத்தில் புதுமுக மாணவர்களை வரவேற்கும் நிகழ்வில் மாணவர்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தின் போது மாணவர்களிடையே மோதல் ஏற்பட்டது.

மோதல் சம்பவத்தையடுத்து தமிழ்சிங்கள மாணவர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டினை பதிவு செய்திருந்தனர்.

தமிழ் மாணவர்களின் வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் பெரும்பான்மையின மாணவர்கள் 4 பேரையும் நேற்றைய தினம் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு பொலிஸாரால் அறிவித்தல் விடுக்கப்பட்டது.

அதனடிப்படையில் 4 மாணவர்களும் நேற்றையதினம் மன்றில் ஆஜராகி இருந்தனர்.

வழக்கை எடுத்துக்கொண்ட நீதவான் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் மாணவர்கள் தமது வாக்குமூலங்களை பதிவு செய்யுமாறும் கட்டளையிட்டதுடன் வழக்கு விசாரணையை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார். (9)

# இலங்கை முன்...

ளகக் கலந்துரையாடல் அமர்வின் ஆரம்ப நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் சீர்திருத்தமும் பொருளாதார வளர்ச்சியும் எவ்வாறு ஒன்றாகக் கைகோர்த்துச் செல்லும் என்பதை இலங்கையானது உலகிற்குக் காட்டிக் கொண்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

நாடுகளுக்கிடையே ஏற்கெனவே சிறந்த பொருளாதாரப் பத்திரங்கள் விரிவாக்கலின் துரித முன்னேற்றத்தின் ஓர் அடையாளமாக இந்த நிகழ்வு அமைந்துள்ளதாகவும், அதற்காக தாம் இலங்கை அரசாங்கத்திற்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NEW SCIENCE HALL
KANNATHIDDY ROAD-JAFFNA

## 2017 A/L DAY CLASSES

(2016 A/L பரீட்சைக்கு தோற்றியவர்கட்குரியது)

திங்கள் தொடக்கம் வெள்ளி
எமது வழமையான ஆசிரியர் குழு

| | |
|---|---|
| BIOLOGY | :-7.00-9.30 |
| COM.MATHS | :-7.00-9.30 |
| CHEMISTRY | :-9.30-11.30 |
| PHYSICS | :-11.30-1.30 |

ஆரம்பம் :- 05.09.2016
திங்கள் காலை 9.30 Am


## 3 கைக்குண்டுகள்...

டுகள் இருப்பதனை அவதானித்த ஒருவர் உடனடியாக பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்

பொலிஸார் குறித்த இடத்துக்கு விரைந்து சென்று பார்த்த போது 3 கைக்குண்டுகளும் வெடிக்காத நிலையில் இருந்ததனை அவதானித்து பின்னர் குண்டுகளை மீட்பதற்காக அதிரடிப்படையினருக்கு அறிவித்திருந்தனர்

அதிரடிப்படையினர் குறித்த கைக்குண்டுகளை மீட்டதுடன் நேற்று மாலை 6.15 மணியளவில் காக்கைதீவுப்பகுதியில் வைத்து வெடிக்க வைத்துள்ளனர்

குண்டு மீட்கப்பட்ட நகரசபை மைதானத்தில் ஜனாதிபதி கலந்துகொண்ட நிகழ்வு உட்பட பல்வேறு நிகழ்வுகள் அடிக்கடி இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. (9)

## நீதிமன்றில்...

ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் காலி துறைமுகத்தில் எவன்கார்ட் எனும் தனியார் நிறுவனத்துக்கு ஆயுத களஞ்சியமொன்றை நடத்திக் கொள்ள அனுமதி வழங்கியதன் மூலம் அரசாங்கத்திற்கு 14 பில்லியன் ரூபாய்க்கும் மேற்பட்ட நஷ்டத்தை ஏற்படுத்தியதாக குற்றம்சாட்டி கோத்தபாய ராஜபக்ஷ உள்பட 8 சந்தேக நபர்களுக்கு எதிராக ஊழல் விசாரணை ஆணைக்குழு வழக்கு தாக்கல் செய்துள்ளது.

இந்த வழக்கு நேற்று அழைக்கப்பட்ட போது கருத்து தெரிவித்த ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள், குற்றப்பத்திரிக்கை கையளிப்பதற்கு சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட நீதிபதி, கோத்தபாய ராஜபக்ஷ உள்பட எட்டு சந்தேக நபர்களும் எதிர்வரும்30ஆம் திகதியன்று நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவு பிறப்பித்தார்.

சொமத்திலக்க திசாயானக்க , ஜெயநாத் கொலம்பகே , ஜயந்த பெரேரா ஆகிய முன்னாள் கடற்படை தளபதிகளின் பெயர்கள் குற்றம் சாட்டப்பட்டுள்ள சந்தேக நபர்களுக்குள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (11)

## ஐ.நா செயலரின்...

விக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும். போர்க்குற்றங்கள், இனவழிப்புக் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியும்,

தமிழ் மக்கள் எதிநோக்கிவரும் பிரச்சினைகளுக்கு ஐ.நா நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியும் கவனயீர்ப்பு போராட்டம் நடைபெறவுள்ளது. இந்த போராட்டத்திற்கு இடம்பெயர்ந்த மக்கள் அமைப்புக்கள், காணாமல் போகச் செய்யப்பட்டவர்களின் உறவினர்களது அமைப்புக்கள், போரில பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் அமைப்புக்கள் உள்ளிட்ட பொது அமைப்புக்கள் இணைந்து நடத்தவுள்ள மேற்படி போராட்டத்தில் அனைவரையும் கலந்து கொண்டு ஆதரவு வழங்குமாறு கட்சியின் பொதுச்செயலாளர் அழைப்பு விடுத்துள்ளார். (4)

## வீரவன்சவின்...

லங்கா ஜயரத்ன முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்தே சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

விமல் வீரவன்சவின் பிரத்தியேக செயலாளராக செயற்பட்ட காலப்பகுதியில் அரசாங்க வாகனங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியதுடன், 100 இலட்சம் ரூபாயுக்கும் அதிக தொகையை சரத் வீரவன்ச மோசடி செய்ததாக பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவு நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டியது.

அரசாங்க வாகனங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியமை தொடர்பிலான விசாரணைக்காக, சரத் வீரவன்ச நேற்றுக் காலை பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவிற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

அவர் விமல் வீரவன்சவின் பிரத்தியேக செயலாளராக செயற்பட்ட 2009 இல் இருந்து 2015 ஆம் ஆண்டின ஜனவரி மாதம் வரையான காலப் பகுதியில் அரச வாகனங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியதுடன், எரிபொருள் கொடுப்பனவாக 89 இலட்சத்து 41 ஆயிரம் ரூபாயை பெற்றுள்ளதாக சரத் வீரவன்ச மீது குற்றச்சாட்டு முன்வைக்கப் பட்டுள்ளது. (11)

## மூனின்...

மீள்குடியேற முடியவில்லை.

வளம் நிறைந்த எங்கள் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட முடியவில்லை. மாறாக முப்படையும் எங்கள் இடத்தை அபகரித்து அங்கு மீன்பிடியில், விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். எங்கள் நிலங்களை விடுவிப்பதாக கூறி எம்மிடம் வாக்கு பெற்று ஆட்சிக்கு வந்துள்ளவர்களும்,

எங்களை ஏமாற்றி எமது நிலங்களுக்கு பதிலாக இலாபகர நஷ்ட ஈடு தருவதாக கடிதம் தருகின்றனர். இவை எல்லாமே எங்களை முட்டாளாக்கி எமது நிலங்களை நிரந்தரமாக அபகரித்து இராணுவத்திற்கு தாரை வார்க்கும் திட்டங்களாகும், இனியும் இந்த நல்லாட்சியை நாங்கள் நம்பினால் இடுப்பில் கட்டியிருக்கும் துண்டும் பறிபோகும் நிலை தான் ஏற்படும்.

எனவே தான் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பொது

23ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா முன்...

தரவு பெறப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்தனர்.

அதன் பின்னர், ஐ.நாவின் பிரதான அலுவலகத்தின் அதிகாரி ஒருவரிடம் பௌத்த பிக்குகள் மனு ஒன்றை கையளித்தனர்.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துக்களை தெரிவித்த சிஹல ராவய அமைப்பின் தலைவர் அக்மீமன தயாரத்ன தேரர், ஐ.நா பொதுச் செயலாளர் பான் க மூனின் இலங்கை விஜயத்தை கண்டிப்பதாக தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் மேற்கொண்ட கொடூரமான செயல்களை கண்டிக்க தவறிய ஐ.நா அமைப்பு, தற்போது எமது நாட்டின் உள்விவ காரங்களில் தலையிடுவதை கண்டிப்பதாகவும் தயாரத்ன தேரர் மேலும் தெரிவித்தார். (11)


FALC FRENCH LANGUAGE CENTRE "FOR THE BEST FRENCH FOREVER"
FRENCH CLASSES
பிரான்ஸ், கனடா, சுவிஸ், பெல்ஜியம் செல்வோர்க்கான Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
விரிவுரையாளர் : MR. V. J. (Trained in France - 2007)
DELF A1, A2, B1 Exam இல் 100 % சித்தியடையலாம்.
இதுவரை 1125 மாணவர்கள் French கற்றுள்ளனர்.....
No. 40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 03. 09. 16 சனி 10 am.
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 12.09.16 Mon@ 3.30 pm.
ஆரியகுளம் →100M → பலாலி வீதி→ அப்பலோ Hospital→ FLC
(C-5599)

இன்று மாலை

நல்லூர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு CEYLON ART CREATION
K.T பிரசாத் பெருமையுடன் வழங்கும் தென் இந்திய விஜய் தொலைக்காட்சி கலைஞர்கள் கலந்து சிறப்பிக்கும் மாபெரும் இசைநிகழ்ச்சி




02.09.2016 வெள்ளிக்கிழமை
இரவு 7.00 மணிக்கு
இடம்: நல்லூர் சங்கிலியன் பூங்கா திறந்த வெளியரங்கு
அனுமதி இலவசம்
ஏற்பாட்டுக்குழு Ceylon Art Creation 077 550 4910 077 480 3020
Sponsored By: NSB National Savings Bank NLB IDM KAJAMUGAN HARDWARE SPMC RAMCO cement
Sponsored by: ANDRA PRINTERS The Leading Printers in JAFFNA 021 221 7279 / 077 6622981
(5787)

போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்
(வடமராட்சி மாணவர்களின் நன்மை கருதி)
சமுத்தி உத்தியோகத்தர்களுக்கான வகுப்புக்கள்
ஆரம்பம் :- 04.09.2016 ஞாயிற்றுக்கிழமை
காலை 8.30 - 12.30
பொது உளச்சார்பு, பொது அறிவு
ஆசிரியர் சேவைக்கான வகுப்புக்கள்
ஆரம்பம் :- 03.09.2016 சனிக்கிழமை
காலை 8.30 - 12.30
பொது உளச்சார்பு, பொது அறிவு
யாழ் மற்றும் வடமராட்சி பிரபல ஆசிரியர்களினால் இவ்வகுப்புக்கள் எதிர்பார்க்கை வினாக்களை தழுவிய வகையில் கையேடுகள் வழங்கப்பட்டு விளைத்திறனாக நடத்தப்படும்.
உயர்கல்லூரி NSB வங்கியின் மேல்மாடி கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P No :- 077 876 0992 077 344 3962
(C-5598)



இலங்கையின் புகழ் பூத்த, முன்னணி ஆங்கில மொழி பயிற்சிக் கல்லூரியில்
இந்த வருடம் A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான....
ஆங்கில டிப்ளோமா பாடநெறிகள் ஆரம்பமாகின்றன
03.09.2016 காலை 10.00 மணி
(சனி/ஞாயிறு தினங்களில் 3/6 மாதங்கள்)
[பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு 20% கட்டண சலுகை ]
(C-5602)
E-CITY COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT
இல. 372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
( வீரமாகாளி அம்மன் கோவில் அருகில் )
Tel : 0212217106 / 0770610271 0773400418 / 0774924166

V2 TRAVELS 11/09/2016 ஞாயிற்றுக்கிழமை
பருத்தித்துறையில் எமது 5வது கிளை திறப்புவிழாவில் பணப்பரிசு
நீங்கள் ரூபா 1000/= பணப்பரிசு
வெளிநாட்டுக்கு பார்சல் அனுப்பப்போறீங்களா?
விமானப்பயணச்சீட்டு எடுக்கப்போறீங்களா?
UK-550*/=Kg DELIVERY IN 3-5 DAYS
முற்பதிவு ஆரம்பமாகி விட்டது
முற்பதிவுகளுக்கு - 0768226240
(C-5608)

வேலைக்கு ஆட்கள் தேவை
சைவ உணவகத்துக்கு வேலைக்கு ஆட்கள் தேவை.
1) டீ மேக்கர்
2) உணவு பரிமாறுபவர்
3)றொட்டி தயாரிப்பாளர்
தொடர்புகளுக்கு 0766228879
(C-5607)

VCM INSTITUTE
Near the Manogara Junction, K.K.S Road, Jaffna.
A/L 2016 Repeat
இணைந்த கணிதம்
B. ரவீந்திரன் B.Sc
ஆரம்பம் 05.09.2016 திங்கள் காலை 7.00 மணி
(5785)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.